V P 1410 ERODE

ரி. நெ. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, ஸ்ரீமுக-வரு மாசி-மீ 14-உ (25—2—1934) | மலர் 14.

ரஷ்யாவின் பாடம்.

(கட்டபொம்மு மெட்டு.)

(தோழர் ப. ஜீவானந்தம்)

(1) சோவியத் ஆட்சி நலம் அறிவோம்
துன்பந் தவிர்த்து சுகம்பெறுவோம்
பூவினிலேசம் தர்மநாடு
பொதுவுடைமை கொண்ட ரஷ்யநாடு
ஆவிதுடிக்க உழைப்போரில்லை
அல்வா விழுங்கும் சோம்பேறியில்லை
பாவியரென்போரந் நாட்டிலில்லை
பாங்கான இன்பங் குலவக்கண்டோம்.

(2) தேசியமாம் சிறு வீடுகட்டார்
செகமொன்றாய்ச் சேர்ந்திடும் கொள்கைதொட்டார்
பாசிபடர்ந்த பழமை கொன்றார்
பாரில் நவயுகப் பாதை சென்றார்
தூசியும் லாபமில் செல்வர் கூட்டம்
துஷ்டக்கிருமிகள் தேய்த்துப்போட்டார்
காசினிகண்ட புதுமையிலே
காட்சி பெருங்காட்சி

(3) வேதம் ஜ
மின்சார
ஆதரவில்லை
அடிமாண்ட
ஓதருமாறு கல்வி வளர்ச்சி
உலகத்தை வென்றதோர் நற்கிளர்ச்சி
போதனை செய்யும் முன்னேற்றமடா
பொங்கும் ரஷ்யாவில் துலங்குதடா.

(4) ஏழை யெனும் பெயர் இல்லை யென்றால்
ஏற்ற முரைத்திட வேறுமுண்டோ?
சூழும் மெஷீன்களால் விஞ்ஞானத்தால்
தொல்லை வறுமையைச் சுட்டெரித்தார்
கோழைக் கடவுள் விழிபிதுங்க
கோவில்கள் மூடிப் பள்ளிதிறந்தார்
வாழும் தொழிலாளிக்கூட்டமொன்றே
வையத்திலென்றிடும் ரஷ்யாநன்றே.

(5) வாடாத மக்களும் வாழ்வதெங்கு?
மாதர் சுயேச்சை மணப்பதெங்கு?
நாடக முற்போக்குக் காண்பதெங்கு?
?
ங்கு?

இதுதானே தேவை?

போகப் பிரியர்களுக்கு

தாதுபுஷ்டியை அளிக்கக்கூடிய

மன்மதக் குளிகை.

இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழ்ப்பெற்று எண்ணிக்கையிலா ஆர்டர்கள் வந்து கொண்டிருக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனதைத்திருப்தி பண்ணும் மாண்பு வாய்ந்ததென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன்?

இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக் குறைவு, வீரியக் குறைவு, நரம்புத்தளர்ச்சி, கோசந் தவளல், இளைப்பு, தாகம் முதலியவைகளை நீக்கி வீரியவிருத்தி, போக சக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளைக் கொடுக்கும்.

60-குளிகை ரூ. 5. 20-குளிகை ரூ. 2. வி. பி. வேறு.

குருதாம்பர பஸ்பம்.

திமிர், குஷ்டம், மதமதப்பு, பவுத்திரம், தடிப்பு, ரணம், குன்மம் முதலிய சகல வியாதியும் தீரும்.

25-நாள் பஸ்பம் ரூ. 12—8—0.

அன்னியநாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின் கெந்தக நெய்.

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேக ஊரல், தடிப்புடன் கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலி குன்மம், கிரந்தி, குஷ்டம், லிங்கப்புற்று, சூலை கணுச்சூலை, பாரிச வாய்வு, முடக்கு வாய்வு, சாமத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை கால் பிடிப்பு, மதமதப்பு, திமிர் வாய்வு, புண், புரைகள் ஆராத ரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர் நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக் கொடுக்கும். பத்தியமில்லை.

60 வேளை மருந்து விலை ரூ. 10—0—0.
20 ,, ,, 4—0—0.

வ. பி. தபால் சிலவு பிரத்தியேகம்.

மலாய்நாட்டு வாசிகள்
முழுவிலாசம் தேரி

மணமகள் தேவை.

மாதம் ஒன்றுக்கு ரூ. 40 நிரந்தர வருமானமுள்ளவரும், சிவப்பு நிறமும் நல்ல திரேக அமைப்பும் 21 வயது உள்ளவரும், ஜாதி மதங்களை விட்டவரும் சுயமரியாதையைச்சேர்ந்தவருமான ஒரு வாலிபருக்கு 18 வயதுக்குள்பட்டவரும், இதுவரை கல்யாணமாகாதவரும் அழகும் நல்ல திரேக அமைப்பும் உள்ளவருமான ஒரு பெண் தேவை. தையல், பின்னல் தெரிந்திருந்தால் நலம். விருப்பமுள்ளவர்கள் அடியில்கண்ட விலாசத்திற்குத் தெரியப்படுத்தவும்.

காரியதரிசி,
இந்திய இளைஞர் சங்கம்,
திருத்துறைப்பூண்டி.

நெ. 16

மணமகன் தேவை

16வயதுடையவரும், 5வகுப்புவரை பயின்றவரும், சைவ வேளாளவகுப்பைச் சேர்ந்தவரும், மாநிறமும் தக்க உடலமைப்புமுடைய கன்னிப்பெண்ணுக்கு மணமகன் தேவை.

மணமகன்:— 25வயதிற்குட்பட்டவரும், படித்து உத்தியோகத்திலோ அல்லது வியாபாரத்திலோ மாதம் 25ரூபாய் சம்பாத்திய முடையவரும் வேளாளர், நாயுடு, ரெட்டியார் ஆகிய வகுப்பைச் சார்ந்தவரும், திடகாத்திர சரீர முடையவராகவும் இருத்தல் வேண்டும்.

நெ. 17

மணமகள் தேவை

21 வயதினையு டையவரும் ஹையர் கிரேடும், தேசப்பயிற்சி டிரெயினிங்கும் பாஸ்செய்தவரும் ஹெட்மாஸ்டர் வேலையில்மாத வருவாய் ரூபாய் 25யுடையவரும், மாநிறமும் 5,6அடி உயரமுள்ளவரும் மணமாகதவரும் தம்பீரத்தோற்றமுள்ள வருமான முஸ்லீம் சமதர்ம நாஸ்திக வாலிபருக்கு மணமகள் தேவை.

மணமகள்:— 18வயதிற்குட்பட்டவராகியும் ஹையர் கிரேட் பாஸ்செய்தவராகவோ அல்லது மருத்துவ டிரெயினிங் பாஸ் செய்தவராகவோ இருப்பவராயும் விதவை அல்லது கன்னியாகவும் எம்மதச் சாதியினராகவும் வனப்பினராயும் இருத்தல் வேண்டும்.

விருப்பமுள்ளவர்கள் 0-1-3 தபால் தலைகளுடன் விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும்.

காரியதரிசி, தமிழ்நாடு புரோகித மறுப்புச்சங்கம் நெ. 22, பாளையம் பஜார் உறையூர், (திருச்சி)

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன்! வெட்டுஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

விவாக விடுதலை.

(இந்து மனைவியருக்கு இன்றியமையாதது)

ஆசிரியர்:

கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்.

ஆராய்ச்சி நிரம்பிய இந்த அரிய நூல் ஒவ்வொரு
...க்கக்காரர் சமதர்மி கையிலும்
...ண்டியது. "'விவாக விடு
...க்காரம் என்னும் மரம்
...ரும்பின் இந்நூலை

...ஈரோடு.

சமதர்மம் என்றால் என்ன?

[தோழர் ப. ஜீவானந்தம்]

சமதர்மம் என்றதும் அராஜகமென்றோ, சட்ட விரோதமென்றோ, பலாத்காரமென்றோ, மனிதர்களிடையிற் காணப்படும் மெல்லிய தொடர்புகளை அழிக்கும் கொலையென்றோ சிலரென்று யாரும் நினைத்துவிட வேண்டாம். பலர் சந்தேகிப்பதுபோல், அவ்வளவு பயங்கரமானதல்ல சமதர்மம்.

சமதர்மமென்பது சமூக பொருளாதார விஷயங்களை ஒட்டிய கோட்பாடு. சரித்திர பூர்வமான வளர்ச்சியே அதன் அஸ்திவாரம். அது அனுபவ வாழ்க்கையில் அனுஷ்டிக்கக் கூடிய சாஸ்திரம். மனித வர்க்கத்தின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்த வேண்டுமென்பதும், இன்றைய உலகத்தை, இன்பம் கொஞ்சும் புது உலகமாக்க வேண்டுமென்பதும் சமதர்மத்தின் இருபெரும் நோக்கங்கள்.

சமூகத்தின் பொது உபயோகத்திற்குரிய சகல பொருள்களையும் பொதுஉடைமையாக்க வேண்டுமென்பது தான் சமதர்மிகளின் லட்சியம். தனி ஒரு மனிதன் உபயோகத்திற்கே உரிய எந்த வஸ்துவையும், பொது உடைமையாக்கப் பிரயத்தனப் படுவது சமதர்மக் கொள்கையல்ல என்னுடைய உடைகளையும், கடிகாரத்தையும், மையூற்றுப் பேனாவையும் நான் புழங்குவதற்குள்ள எனது உரிமையைச் சமதர்மிகள் மறுக்கவில்லை. இந்தப் பொருள்கள் எனது சொந்த உபயோகத்திற்குரியவை. இவைகளில் நான் தனி உரிமைகொண்டாடுவதால் பிறருக்கு எள்ளளவு தீங்கும் நேராது. ஆனால் நான் நிலத்தையோ, ஒருரயில் பாதையையோ, ஒரு தொழிற்சாலையையோ நான் சொந்தம் பாராட்டுவதைச் சமதர்மம் தடுக்கிறது. ஏனென்றால் மேலே குறிப்பிட்டவைகள் நான் அனுபவிப்பதற்கு மாத்திரம்உரியவையல்ல, எனது தனிப்பட்ட உழைப்பால் மட்டும் அவைகளை நிர்மாணிப்பது கஷ்டம். ஆண்கள், பெண்கள் அநேகருடைய ஒத்துழைப்பால் தான், ஒரு நிலத்தைப் பண்படுத்த முடியும், ஒரு ரயில் பாதையைப் போடக்கூடும் ஒரு சுரங்கத்தைத் தோண்டலாகும், ஒரு தொழிற்சாலையை நிர்மாணிக்க இயலும். தற்காலத தொழில் முறைக்கும், வியாபாரத்திற்கும், விவசாயத்திற்கும் கோடிக்கணக்கான மக்களின் ஏகோபித்த உழைப்பு அத்யாவசியம். ஆகவே, கோடிக்கணக்கான மக்கள் வியர்வை சிந்த உழைத்த உழைப்பின் பலனை. சிலர் சொந்தமாக்கிக் கொள்ளும உரிமையைச் சமதர்மம் முழுமூச்சுடன் மறுதலிக்கிறது.

தனி உடைமை அதிகாரிகளான முதலாளி வர்க்கம், வேலைதர மறுத்து விட்டால். கோடிக்கணக்கான மக்கள் இன்றுள்ள நிலைமையில், தொழிற்சாலைகளிலும், ரயில்பாதைகளிலும், சுரங்கங்களிலும், நிலம் புலங்களிலும் பாடுபட்டுப் பிழைக்க வழியில்லை. ஒருவன் நெசவுத் தொழிலில் மகா நிபுணனாக விருப்பினும், மில் முதலாளியின் தயவில் தான் குடியிருக்க வேண்டும். முதலாளி வேலையில்லை யென்றால், தொழிலாளி கதி அதோ கதி தான். அவனுடைய மனைவியும் குழந்தையும். அவனால் நெய்யப்படுகிற துணிக்குக் கூட போக்கற்று, குளிரால் நடுங்கி விறைத்துத் தவிக்க நேரிடும். அவனுக்கு ஒத்தாசை செய்ய அவனுடைய சகோதரன் ஒட்டிக்கிரட்டி உழைக்கும் நிர்ப்பந்தத்திற்கு இரையாவான்.

"நிலம்புலங்களும், ரயில் பாதைகளும், தொழிற்சாலைகளும், சுரங்கங்களும் தேசத்தின் பொது உடைமையாக்கப்படவேண்டும். அப்பால் தனிப்பட்டவர்களின் லாபத்திற்காக அல்லாமல், எல்லோருடைய நன்மைக்காகவும் அவற்றில் உழைக்க வேண்டும். எப்பொழுது உற்பத்திக்கான சாதனங்களும், உழைப்பின் பலனைப் பங்கிடும் உரிமையும் பொதுவாக்கப் படுகிறதோ, அப்பொழுது யாவர்க்கும் வேலை கிடைக்கும். அளவுக்கு மிஞ்சி யாரும் பாடுபட வேண்டிய அவசியமில்லை. எல்லோரும் சமூகத்திற்கு அவசியமான வேலைகளையே செய்வார். வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்களுக்கு எவரும முடைப்பட நேரிடாது. சமூகத்திற்குப் பயன்படும் பொருள்கள் யாவற்றையும் பொதுஉடைமையாக்கி விட்டால், கொடிய வறுமை பூண்டற்றுப் போகும். தரித்திரத்திலிருந்து நேரடியாகப் பிறக்கும், அறியாமை, அமைதியின்மை அநேகமான சமூக நோய் நொடிகள், பல குற்றங்கள் முதலிய தீமைகளும் இருந்த இடந்தெரியாமல் மறைந்து விடும்" என்று சமதர்மிகள் பறைபடிக்கிறார்கள்.

சமதர்மத்தை நிலை நிறுத்துவது அசாத்தியமென்று சிலர் சொல்கிறார்கள். அன்று இருந்ததுபோல் இன்றுமிருக்கிறதால், இன்று இருக்கிறதுபோல் என்றுமிருக்குமென்பது அவர்களின் அபிப்பிராயம். இந்த அபிப்பிராயம் முழுதும் பொய் விஷயங்கள் முன்பு இருந்ததுபோல் இப்பொழுது இருக்கவில்லை. இப்பொழுது இருக்கிறதுபோல் இனிமேல் இருக்கப்போவதுமில்லை. ஒவ்வொரு வாழ்வும் குறிப்பிட தக்கவாறு மாறிக்கொண்டேயிருக்கிறது. வாழ்வின் தனிசசாரம் மாற்றமேயென்பது அனுபவ உண்மை. அரை நிர்வாணக் காட்டுமிராண்டித் தன்மையிலிருந்து, நவீன நாகரீகம் வரையில் மனித வர்க்கம் போராடிப் போராடி முன்னேறி வந்திருக்கிறது. தற்கால நிலைமையோடு மனித நாகரீகப் போக்குத் தேங்கி விடாது. நாளேற நாளேற முன்னேறி முன்னேறிச் சிறப்பான நிலைமையடையவே சென்றுகொண்டிருக்கும். மத்தியகால பிரபுத்துவ சமூகம் (Fuedalism) தற்கால முதலாளித்வ சமூகத்திற்கு இடந்தந்தது. அதுபோல் முதலாளித்வசமூகமும்வருங்கால சமதர்ம சமூகத்துக்கு இடங்கொடுத்து விடும்.

வருங்கால சமதர்மச் சமூகம், மனித வாழ்க்கையில் முக்கியமான, கௌரவிக்கத்தக்க பாகம் தொழிலே, மனித உழைப்பே என்பதைக் கண்ணியமாக முதன் முதலில் ஒப்புக்கொள்ளும். சென்ற கால சமூகங்கள் (Societies) சரீர பலத்தின் மீதே ஸ்தாபிக்கப்பட்டன. போர் வீரரும், பராக்கிரம சாலிகளுமே அவற்றின் பிரதிநிதிகளாய் விளங்கினர். ராஜ்யம் அல்லது ராஜாங்கம் பலாத்காரத்தை அஸ்திவாரமாகக்கொண்ட ஓர் ஸ்தாபனமாயிருந்தது தற்கால சமூகம் ஐஸ்வரியத்தின் சக்தியை ஆதாரமாகக்கொண்டிருக்கிறது. முதலாளிகளும், தொழிற்சாலைகளின் எஜமான்களுமே இன்றைய சமூகத்தின் குறிப்பிடத்தகுந்த பிரதிநிதிகள். ராஜ்யம், தனிமனிதரின் சொத்து சுகங்களைப் பாதுகாக்கும் ஓர் ஸ்தாபனமாயிருக்கிறது. வருங்கால சமூகமோ, ஆணித்தரமான, மனித உழைப்பை (Human Labour) அஸ்திவாரமாகக் கொண்டு எழுப்பப்படும். தொழிலாளிகளே அதன்பிரதிநிதிகள். அப்போது, மனித வாழ்வையும் இன்பத்தையும் காப்பாற்றி அபிவிருத்தி செய்யும் பொருட்டு ராஜ்யம் ஓர் ஸ்தாபனமாயிருக்கும்.

இன்று, தொழிலாளிகளென்று கூறினால், சமூகத்தில் சிறப்பாக ஒரு வகுப்பாரைக் குறிக்கும். கடந்த காலத்தில், பலாத்காரத்தால் ஆளப்பட்ட சமூகங்களில், தொழிலாளிகள் கீழ்ப்படியிலேயே வைத்து எண்ணப்பட்டார்கள். ஒரு போர், வீரன் பொருள்களை உற்பத்தி செய்யும் ஒரு தொழிலாளியைத் தன்னைவிட மிகத் தாழ்ந்த வனாகவே கருதினான். நிலத்தை உழுது பயிரிட்டு, போர்த்தலைவர்களையும், பிரபுக்களையும் ஊட்டி வளர்த்த விவசாயி, பிரபுக்களால் ஆளப்பட்ட சமூகத்தில் கடைப்பட்டவனாகவே கருதப்பட்டான். உலகத்தின் பழம்பெரும் நாகரீகங்களாகிய ஈஜிப்ட், கிரீஸ், ரோம் முதலிய நாகரீகங்களில், தொழிலாளி மிகக் கேவலமான பிராணியாக வாழ்ந்ததுமன்றி, பூரண அடிமையாகவும் நடத்தப்பட்டு வந்தான். பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்கள் யாவும் அடிமைகளாலும், பெண்களாலுமே செய்யப்பட்டன. தொடர்ச்சியாகப் பல்வேறு காலங்களிலும், உலகத் தொழிலாளிகளில் ஆண்களும் பெண்களும் பொதுவாகவே பாவிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். உலகத்திற்கு அவசியமான பொருள்களை யார் உற்பத்தி செய்துஉதவினார்களோ, யாருடைய அமைதியான உழைப்பில் மனித முன்னேற்றம் சார்ந்து நின்றதோ, அவர்கள் தான், மனிதவர்க்கத்தால் மிகுதியும் வெறுக்கப்பட்டு, அடிமையாக்கப் பட்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, தொழிலாளிகளும் பெண்களும் கொடுமைகளைச் சகியாது விழிப்படைந்து வீறிட்டெழுந்தனர். உன்னத லட்சியங்கொண்ட சமூக நீதிக்காக ஆண்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். தற்காலப் பெண்கள் இயக்கமும் இந்த நெருங்கிய சம்பந்த முடையதே. இவ்விழிப்பு சந்தர்ப்பத்தால் (Chance) ஏற்பட்டதன்று; சரித்திர பூர்வமான மனித வளர்ச்சியின் காரணமாக நேர்ந்தது தான்.

யந்திரம், நீராவி மின் சாரசக்தி, ஆகியவற்றில் நடைபெறும் தொழிற்சாலையும், உற்பத்தியைப் பொதுவாக்க வேண்டுமென்ற மார்க்கங்களும், தொழில் புரட்சியுமே, மனித சமூகத்தில் தொழிலாளிக்கும் பெண்களுக்கும் புதிய சக்தியையும், பிரதானத்தையும் தந்து, அவர்களுடைய விடுதலையைச் சாத்தியமாக்கிற்று. ரோமாபுரியில் கோத்திரத் தலைவர் (Patrician) களிடையில் வெறுக்கப்பட்டது போலவும், மத்திய கால ஐரோப்பாவில் போர்த்தலைவர், பிரபுக்களிடையில் வெறுக்கப்பட்டதுபோலவும், தற்காலமுதலாளித்வ சமூகத்தில் தொழிலாளிகள் வெறுக்கப்படுகிறதில்லை யென்பது மெய் தான். ஆனால், இன்னும் முதலின் (Capital) பணிவிடைகாரியாகவே தொழில் இருக்கின்றது. முதலாளியை விடக் கேவலமாகவே சமூகத்தில் தொழிலாளி கருதப்படுகிறான். குடக்கூலியாலும் மிச்சிறு லாபத்தாலும் பிழைத்து வரும் சின்னஞ்சிறிய பணக்காரன் கூட, ஊதியத்திற்கு உழைக்கும் தொழிலாளியை விடத்தான் மேம்பட்டவனென்று இறுமாப்படைகிறான். சொத்துரிமையுடைய வகுப்பார், தனி

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க

போக்குவரத்து வாடகை தொழில்
பொதுவுடமை.

(தோழர் சே. தே. நாயகம்)

நமது நாட்டில் போக்குவரத்திற்காக மாட்டு வண்டி, குதிரைவண்டி, புகைவண்டி, மோட்டார் வண்டி (Motor Conveyance) முதலியன நிலத்திலும், தண்டுக்கப்பல், பாய்க்கப்பல், புகைக்கப்பல் முதலியன நீரிலும்; இப்பொழுது பறவைக்கப்பல்கள் ஆகாயத்திலும் ஓடுகின்றன. இவைகள் ஆட்களையும் சாக்குகளையும் இடம் விட்டு இடம் கடத்துவதற்கு உதவுகின்றன. இவ்வுதவிக்காக மக்கள் கொடுக்கும் தொகையை இவைகளை ஆக்கி நடத்துவோர் பெற்று ஊதியம் பெறுகின்றனர். இவைகளில் புகைவண்டிக்கு நிலமும் தனி உடமையாக வேண்டி யிருப்பதால் அதை ஆக்கவும், நடத்தவும் பெரும் பணம் வேண்டி யிருக்கிறது. பெரும் பணம் போட்டாலும் விரும்படி போதிய அளவு வருமோ என்று சந்தேகம் இருந்ததால், நம் நாட்டில் இதை நடத்த முதலாளிகள் முன்வரவில்லை. அதிகப் பணம் படைத்த ஆங்கில முதலாளிகளும் தயங்கினர். துரைத்தனத்தாரே நாட்டின் பணத்தில் இவைகளை ஆக்கி, அவைகளை நடத்துவதற்கு முதலாளிகளிடம் ஒப்படைத்தனர். அப்படி நடத்துவதற்கும் முதலாளிகள் முன்வராத சில இடங்களில் துரைத்தனத்தாரே புகை வண்டித் தொடர்களை ஆக்கவும், நடத்தவும் மேற் போட்டுக்கொண்டனர். இப்படித் துரைத்தனத்தாரே நடத்தின புகைவண்டித் தொடர்களில் போதிய வருவாய் வந்ததாலும், அவைகளை நடத்துவதில் துரைத்தனத்தாருக்கு நீக்க முடியாத சங்கடங்கள் ஒன்றும் இல்லை எனத் தெரிந்ததாலும், ஆங்கில முதலாளிகளிடம் ஒப்படைத்திருந்த புகை வண்டித்தொடர்களையும் துரைத்தனத்தாரே வாங்கி நடத்த வேண்டுமென்ற எண்ணம் நாட்டில் பரவிற்று. நாளடைவில் துரைத்தனத்தாரும் அதற்கு இணங்கி ஒவ்வொரு புகை வண்டித் தொடராகத் தாங்களே நடத்துவதற்கான ஏற்பாடு செய்து வருகிறார்கள். இந்த ஏற்பாடு பொது மக்களால் வரும் ஊதியம் முதலாளிக்குப் போகாமல் பொது மக்களுக்கு வர வேண்டும் என்ற கோட்பாட்டை நிலை நிறுத்தியதாகும்.

இதற்கடுத்தாற்போல் நம் நாட்டில் ஓடும் புகைக்கப்பல்களையும், துரைத்தனத்தாரே செய்து ஓட்டும் பொறுப்பை எடுத்துக்கொள்ள தூண்ட வேண்டுவது நம் நாட்டு மக்களின் கடமையாகும். இதற்கு எதிர்ப்புப் பெரிதாயும், கடினமாயுமிருக்கும்.

அது நம்மால் இப்பொழுது உடனே செய்ய முடியாவிட்டாலும் புதிதாகத் துவங்கும் பறவைக்கப்பல்களை வாடகைக்கு ஓட்டுந் தொழிலையாவது துரைத்தனத்தாரை ஏற்றுக் கொள்ளச் செய்வது அவசியமாகும். பணக்காரர்கள் அவரவர்கள் சொந்த உபயோகத்திற்குப் பறவைக்கப்பல்கள் வைத்துக்கொள்ளக் கூடியவர்கள் வைத்துக்கொள்ளட்டும். கூலிக்கு ஆட்களையும், சாக்கையும், (திருவனந்த புரம் மகாராஜா லண்டனில் சக்கரவர்த்திக்கு அளித்த விருந்திற்கு அப்பளம் இந்தியாவி லிருந்து இங்கிலாந்திற்குப் பறவைக்கப்பலில் போயிற்று) தபாலையும் கொண்டு போகும் உரிமை முதலாளிகளின் பறவைக் கப்பல்களுக்குக் கொடுக்கக் கூடாது. துரைத்தனத்தாரே அந்தத் தொழிலை நடத்வேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்பட வேண்டும். இத்தொழில் இப்பொழுது சிறிதாயிருப்பினும் நாளடைவில் பெருகும் தன்மையுடையது. பெருகி விட்ட பின் புகைக்கப்பலைப் பொது உடமை ஆக்குவதில் நாம் இப்பொழுது எதிர்பார்க்கும் எதிர்ப்பு இருக்கும். இப்பொழுதே பறவைக்கப்பல் வாடகைத்தொழிலை பொது உடமை வழியில் திருப்பி விடுவதென்றால் முதலாளிகளின் எதிர்ப்பு அவ்வளவாகஇராது. நச்சு மரத்தை வளர விட்டுப் பெரிதான பின் வெட்ட பெருங்கோடரி தேடவேண்டுவதுடன், வெட்டுவதற்கும், எதிர்ப்பவரை ஓட்டுவதற்கும் ஆள்திரளும் வேண்டி யிருக்கும். அதை முளையில் கிள்ள ஒரு விரல் நகம்போதும். ஆகையால் பொது உடமைப் பற்றுள்ளோர் இப்பொழுதே முயன்றால் காரியம் பெரும் எதிர்ப்பின்றிக் கைகூடலாம். துரைத்தனத்தை பொது உடமை வழியில் திருப்பவேண்டும் எனக் கோறுபவர்கள் இவ்வழியில் ஒன்று பட்டு ஊக்கங்கொண்டு உழைப்பார்களாக.

தொழிலாளர் இயக்கம்

[இந்தியாவில் உள்ள டிரேட் யூனியன்கள் ஸ்தாபனமெல்லாம் ஒன்றுபட்டு திறம்பட வேலை செய்யவேண்டுமென, அகில இந்திய டிரேட் யூனியன் காங்கிரஸ் உபதலைவர் டாக்டர் விஸ்வநாத் முகர்ஜி எல். எம். எஸ் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையிலிருந்து எழுதப்பட்ட முக்கியாம்சங்கள் வருமாறு:]

T.N.R

பொதுவாக அகில தொழிலாளர் இயக்கங்கள், விசேஷமாக சர்வதேச இயக்கமாகவே இருக்கின்றன. எந்த தேசீய இயக்கமும், எவ்வளவு பொது ஜன செல்வாக்குடையதானாலும், வன்மை பொருந்தியதானாலும் கூட தொழிலாளர் இயக்கத்தை எல்லாக் காலத்திலும் தன்னுள் அடைக்கிக் கொண்டிருக்க முடியாது. முதல் தடவையாக கான்பூரில் நடந்த 1933-ஞு டிசம்பர்-மீ 24உ தேதியில், இந்திய நாட்டின் தேசீய தலைவர்கள்-மகாத்மாகாந்தி உள்ளிட்ட யாவரும் தலைவர் உள்பட எல்லோரும் பகிரங்கமாக "பொது ஜனங்களுடைய துரோகிகள்" என்று வெகு வன்மையாக எதிர்க்கப்பட்டார்கள்; கண்டிக்கப்பட்டார்கள். அது சரியா அல்லது தப்பா என்று முடிவுகட்ட நான் துணியவில்லை; ஆனால் அதற்கு காரணம் கொடுமைப்படுத்தப்பட்ட லக்ஷக்கணக்கான மக்களுடைய நெஞ்சின் குமுறுதல்கள் என்பது மாத்திரம் மிக நிச்சயம்.........இந்திய ஏழைமக்களை உயிர்ப்பிக்க, காந்தியார் மேற்கொண்டுள்ள முறைகளானது தோல்வியாகவேமுடிந்துவிட்டது. ஆகவே கொடுமைப்படுத்தப்பட்ட பாட்டாளி மக்கள் இனி ஒருக்காலும் தங்களுடைய கொடிய கஷ்டங்களைப் போக்கிக்கொள்ள காந்தியாருடைய முறைகளை இயற்கையாகவே கையாடமாட்டார்கள். இதிலிருந்து இந்த நாட்டில் உள்ள ஒரு பெரிய தேசீய காங்கிரஸ் இயக்கமானது நீடூழி காலத்திற்கு நிலை பெற்றிருக்க வேண்டுமென நினைப்பது ஒரு பெரும தவறே எனவு ஊர்ஜிதப்பட்டுவிட்டது.

இந்தியாவின் பெரும் பொருளாதார நெருக்கடி ஒருபுறமிருக்க, மேற்கு முனைக்கோடியிலிருந்தும் கிழக்கு அந்தமலையிலுள்ள தொழிலாளர் வகுப்பார் ஸ்தாபனங்களிலிருந்து பெறும் உதவிகள்—அனுதாபங்கள், அனைத்தும்; அவர்களை, உலகிலுள்ள எல்லாத் தொழிலாளர் தோழர்களையும் உண்மையான தோழர்களாகவும் ஒவ்வொருவருடைய கஷ்டங்களையும் உணரும் மனிதஜீவ அனுதாபிகளாகவும் கருத பெரிதும் நிச்சயிக்கின்றது. தொழிலாளி வகுப்பார்களுடைய தோழமைத் தன்மையானது பரந்த உலக அளவுக்கு விஸ்தரித்துக் கொண்டுபோகிறதையும் அது பலப்பட்டு வருவதையும், இனியும் அது நாட்டில் செல்வாக்குப்பெற்று வலிமையுறப் போகிறதென்பதையும், யாரும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது. இந்திய தொழிலாளர் வகுப்பார்கள் தங்களுடைய சமுதாய பொருளாதார கொடுமைகளின் காரணமாகவே, உலகம் பூராவும் பரவியுள்ள தன் நலவெறி கொண்ட, கல்நெஞ்சம் படைத்த கனத்த முதலாளிகளுடைய வன்மையான செய்கைகளை நன்கு உணர ஆரம்பித்து விட்டார்கள். இந்த தன்மையானது இந்திய தொழிலாளர் வகுப்பு ஸ்தாபனங்களையும் தொழிலாளர் தோழர்களுடைய கூட்டுறவையும் மற்ற தொழிலாள உலகத்தவர்களோடு ஐக்கியப்படுத்துவதில் துரிதப்படுத்துகிறது.

இந்தியாவில் உள்ள நாஷனல் பெடரேஷன் ஆப் டிரேட் யூனியன்கள், இன்டர்நேஷனல் பெடரேஷனோடு சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் அகிலஇந்தியடிரேட்யூனியன் காங்கிரசானதுஎந்ததொழிலாளர் சர்வதேச ஸ்தாபனத்தோடும் சேர்ந்து ஒருப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறது. இந்தியாவின் சிவப்பு டிரேட்யூனியன் காங்கிரசானது (Red Trade Union Congress of India) மாஸ்கோவில் உள்ள சிவப்பு இண்டர்நேஷனலோடு ஐக்கியப்பட பெரிதும் விரும்புகிறது.........இந்தியாவில் உள்ள சகல டிரேட் யூனியன்களுக்கு ஐக்கியத்தோடு சேர்ந்து வேலைசெய்யவேண்டும். இறுதியாக இவைகள் கஷ்டப்படும் தொழிலாளிமக்களை விடுதலைக்காக மிகத்தீவிரமாக சமீபகால அளவில் போராடும், சர்வதேச தொழிலாளர் அல்லது டிரேட்யூனியன் ஸ்தாபனத்தோடு ஐக்கியப்பட்டும் போராட வேண்டும். (People)

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

ஷை மன்றத்தின் கூட்டம் 18-2-34 ஞாயிறு பகல் 2-மணிக்கு 221 தங்கசாலைவீதியில் தோழர் சி. டி. நாயகம் அவர்கள் தலைமையில் கூடியது. அது சமயம் தோழர்கள். எஸ். ரங்கநாதன், பி. எஸ் சம்பந்தம். எம் எஸ். முத்து கே. எஸ நாதன். கே. கிருஷ்ணசாமி டி. என. ராமு, பண்டிட். எஸ். எஸ். ஆனந்தம், முதலியோர் "மாதர் சுதந்தரம்" என்பதுபற்றிப்பேசினார்கள். என சங்க காரியதரிசி எழுதுகிறார்.

முஸ்லீம்கள் கண்டதையும் கடையதையும் வணங்குகின்றனர்.

[திருச்சி தோழர் சுபாகு. மோஹிய்யதீன் சாபு அல்ஹாஜ்]

முஸ்லிம்களைக்கண்டு இஸ்லாம் கணிக்கப்படுகின்றது. இஸ்லாம் எக்காலத்துக்கும், எத்தேசத்துக்கும், எச்சாதியினருக்கும் எல்லாச்சந்தர்பங்களுக்கும் ஏற்றது என்று முஸ்லிம் மூல்லாக்களும், அறிவாளிகளும் ஆராய்ச்சி நிபுணர்களும் பெருமை பாராட்டிக்கொள்ளுகின்றனர். ஆனால் முஸ்லிம்களின், பெரும்பாலான முஸ்லிம்களின் கொள்கைகளையும், நடபடிக்கைகளையும் கவனித்தால் இஸ்லாம் மனித முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாகவிருக்கின்றது என்று குன்றின்மேல் நின்று துணிவுடன் எதிர்ப்புக்கஞ்சாமல் நான் கீழே சுருக்கி விளக்கப் போகின்றேன்.

முஸ்லிம்களில் இல்லை, இஸ்லாத்தின் கொள்கை ஏகதெய்வக் கொள்கையாகும். ஆனால் முஸ்லிம்கள் கண்டதையும், கடையதையும் வணங்குகின்றனர்.

முஸ்லிம் தோழர்காள்! வெகுண்டு விடவேண்டாம். உங்கள் நெஞ்சில் கையை வைத்து நிதானத்துடன் உங்கள் மனம் என்னசாட்சி அளிக்கின்றது என்று பாருங்கள். கடபடாம் என்று மிரட்டி மழுப்பிவிடும் காலம் மலை ஏறிவிட்டது. உங்கள் தாபூஜை என்ன? உங்கள் சமாதிப் பூஜை எதற்கு? உங்கள் கொடிமரப் பூஜை எதைக்காட்டுகின்றது? உங்கள் சந்தனக்கூட்டு ஊர்வலமும், அந்த மண்பாண்டத்துக்கு மரியாதை காட்டுவதும், அதனுள்ளிருக்கும் சந்தனத்தைத் தெய்வப் பிரசாதமாகக் கருதுவதும், அதைச்சுற்றி பூமாலைகள் ஆட்டுவதும், உலர்ந்து வாசனை இழந்த பூவை பயபக்தியுடன் பெறுவதும், பெற்றுத் தின்பதும் எதைக்குறிக்கிறது? உங்கள் "அல்லாசாமி" பண்டிகை விக்கிரஹ வணக்கமில்லையானால் வேறு என்ன? அதன்முன் பிரார்த்தனை புரிவது எதற்காக? அதற்கு சிங்காரிப்பும், ஊர்வலமும், திருவிழாவும் நடத்தவில்லையா? இவையெல்லாம பல தெய்வவணக்கத்தைக் குறிக்கவில்லையென்று நிரூபித்தால் எதிர்த்து மறுப்பு எழுதட்டும் ஏசல் மாலை வேண்டாம். தாககரீதியுடன் மறுத்து முன் கூறியவைகள் விக்கிரஹ வணக்கமல்ல ஏகதெய்வ வணக்கம் என்று நிரூபித்தால் மன்னிப்பு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்திய முஸ்லிம்களிடையில் மட்டும் ஹிந்து சகவாச தோஷத்தால் இவைகளெல்லாம் ஏற்பட்டது என்று சமாதானங்கூறலாம். நானும் இப்படியே நினைத்ததுண்டு. இப்படியே வாதத்துமுண்டு ஊன்றிவிசாரித்தால் முஸ்லிம உலகத்தில் எங்கும் விக்கிரஹ வணக்கம், இல்லை கண்டது கடையதுகளை வணங்குகின்றதைக் காண்பீர்கள்.

நான் என் இளம்பிராயத்தில் ஹஜ் யாத்திரைக்கென்று சென்றிருந்தேன். அங்கும் கண்டதையும், கடையதையும் வணங்கக்கண்டேன். மக்காவில் ஓர் கல மண்டபம் இருக்கின்றது. இது சரித்திரசம்பந்தமான பண்டைகால மண்டபமேயாகும். இது சென்றுபோன பல்லாயிர வருடத்து ஞாபகார்த்தமான சின்னமாகவிருப்பதும் உண்மையே. இதை அழியாமல் பாதுகாப்பதும் சரித்திர ஆராய்ச்சிக்காக அவசியமேயாகும். இது பண்டைக்காலத்திலிருந்து பல்லாயிரமனித வகுப்பினரால் பிரார்த்தனை ஸ்தலமாகக் கொள்ளப்பட்ட யாத்திரஸ்தலமாகும். இந்தமண்டபத்தினுள் பலநூறு விக்கிரஹங்கள் இருந்தன. சிலவிக்கிரஹங்களே தெய்வங்களாகக் கொள்ளப்பட்டன. இவைகளையெல்லாம் விக்கிரஹ நிக்கிரஹதாரியாகிய முகம்மது நபியவர்கள் உடைத்து எரித்து விட்டிருக்க இன்றும் அங்கு கல்பூஜை நடைபெறுமலில்லை. அந்த மண்டப மூலையில் ஓர் கையளவு பெரிதான மேடுபள்ளமான கருங்கலொன்று பதிக்கப்பெற்றிருக்கிறது. இக்கல் புராதன கல்லென்று பண்டை காலத்து ஞாபகார்த்தமாக அக்கல் அம்மண்டபத்தின் மூலையில் பதிக்கப்பட்டிருக்கின்றது. அதன் பழமையை நினைத்து முஹம்மது நபியவர்கள் அதை பிற்காலத்தவர்களுக்கு ஞாபகமூட்ட அங்கேபதித்து வைத்திருக்கின்றார்கள். ஆனால் அக்கல்லின் தரிசனத்துக்காகவும், அதனை முத்தமிடவும், அதனைதொட்டு நரகதியடையவும் முஸ்லிம் யாத்ரீகர்கள் நான் முன், நீமுந்தியென்று படும்அவஸ்தை அம்மம்ம! இந்த அவஸ்தையை அதிகரிக்க பணம் பிடுங்கும் சுயநல மனிதப்பிராணிகளாகிய அரபிகளும், போலீசும் செய்யும் அதிக்கிரமங்கள வேறு. (பெண்களுக்கு சமத்துவமுண்டென்று முஸ்லிம்களை புகழ்ந்து பேசுவார்கள். ஆனால் அந்த க்கல்லின் தரிசனத்துக்காக துணிந்து முன்வரும் பெண்கள் படும்பாடு செப்பத்தரமில்லை. இந்தக்கல்பூஜையில் முஸ்லிம் ஆண்களுக்கிருக்கும் சுதந்திரம் முஸ்லிம் பெண்களுக்கில்லை. இதுவிஷயமாய் பின்னர் எழுதுவாம், முஸ்லிம ஆண, பெண சமத்துவ விஷயம் வேறு. இப்பொழுது எடுத்துக்கொண்ட விஷயம் வேறு) இதுகிடக்க அந்த மண்டபத்தின் கற்களுக்குள்ள மஹிமை என்னவோ? யாத்ரீகர்கள், அந்த மண்டபத்தைச் சுற்றிச்சுற்றிப் பிரதக்ஷணம் செய்யும்பொழுது அவற்றின் கற்களை யெல்லாம் தொட்டுதொட்டு முத்தமிடுகின்றனர். அந்த மண்டபத்தை விலையுயர்ந்த போர்வையால் மூடப்பட்டிருக்கின்றது. இந்தப் போர்வை இவர்களுக்கு என்ன விதமாய் உதவுமோ தெரியாது. அதையும் தொட்டுத்தொட்டு முத்தமிடுகின்றார்கள். அப்பொழுது அடிமை புத்தி படைத்த ஹுஸைன் அவர்கள் அரசாகவிருந்தார். இப்பொழுது சுயமரியாதையும், சுயேட்சையும் மிகுந்த இப்நுசூது அரசராகவிருக்கின்றார். இவர் முஹம்மது நபியவர்களின் சமாதியையும்கூட இடித்துத் தரைமட்டமாக்க எத்தனித்ததாக செய்தி இருந்தது. இவருடைய ஆட்சியில் இந்த கண்டது கடையதுகளை வணங்கும் கொள்கை தடுக்கப்பட்டிருக்கலாம். இவர் முஸ்லிம் யாத்ரீகர்கள் வணங்கிய எல்லா இடங்களையும், சமாதிகளையும் இடித்து தரைமட்டமாக்கியதுடன், அவைகளை மூட முஸ்லிம்கள் அணுகாமல் இருக்க சிப்பாய்களையும் காவல் வைத்துவிட்டாராம். இதைக்கேட்ட இந்திய முஸ்லிம்கள் தங்கள் கடவுள்களுக்கு ஆபத்துவந்து விட்டதாகக்கருதி ஹோ! வென கூக்கிரலிட்டு குண்டிச்சட்டியில் குதிரை யோட்டினார்கள்.

இவ்வாறு இஸ்லாம் நிலைநாட்டப்பட்ட மக்காவில்கூட கண்டதையும், கடையதையும் வணங்கப்படுகிறதென்றால் வேறு தேசங்களைப்பற்றி கூறவேண்டிய அவசியமில்லை. இந்த மக்கா (கஃபா) மண்டபத்தினருகில (தென்கிழக்கு மூலையில்) ஒரு ஆளமான கிணறுஉண்டு. இந்தஜலம் பரிசுத்தமானதாம்! இதைக் குடித்தவர்களுடைய பாபங்கள் கரைந்துவிடுகின்றதாம். இந்த அசுத்த நீர் $\frac{1}{4}$-கோப்பை $1\frac{1}{2}$-அணு முதல் $2\frac{1}{2}$-அணு வரைக்கும் விற்கப்பட்டது இந்த நீரில் ஸ்நானம் செய்யும் காரியம் கிடைத்து விட்டால் சொர்க்கமே. இந்த நீரை, டின்களில் அடைத்து வெகு பயபக்தியுடன் தங்கள் தங்கள் தேசங்களுக்குக்கொண்டு போவதற்காகப் படும் பிரயத்தனம் "பிரம்மப் பிரயத்தனமாகும்." தங்கள் ஆடைகளை இந்நீரில் நனைத்துக்கொண்டார்கள். மனம் ஒப்பாவிட்டாலும் சகவாசதோஷத்தால் நானும் ஒருபீஸ் "லாங்ளாத்" (துணியை) வாங்கி இந்நீரில் (ஆபேஜம்மில்) நனைத்துக்கொண்டு வந்து என் பெற்றோர்களுக்குக் கொடுத்தேன். இதை இவர்கள் தாங்கள் செய்த புண்யத்தால் கிடைத்ததாக கருதி பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டார்கள். இதில் ஒருபாகம் என் தகப்பனாரின் உயிர் நீங்கின உடலுக்குசுற்றிச் சமாதிசெய்தார்கள். இதன் பயனாக அவருக்கு தெய்வ சகாயம் கிடைக்குமாம். மிகுந்த பாகத்துணி என் தாயாருக்காக பத்திரப்படுத்தி யிருக்கின்றார்கள். இந்தத்துணி இப்பொழுது இத்தப்போயிருக்க வேண்டும். என்றாலும் அதில் தெய்வீகம் இருப்பதாக நம்பப்படுகின்றது, நிற்க.

நாகூர் தர்கா, முத்துப்பேட்டை சமாதி, திருச்சி சமாதி போன்ற சவமேடைகள் உலகில் எங்கும் பரவியிருக்கிறன. இவைகளெல்லாம் பூஜிக்கப்படுகின்றது. பைதுல் முகத்தஸ் என்னும் ஜெருஸலத்தில் நபியவர்களுடைய உரோமம் ஒன்று பூஜிக்கப்படுகின்றது. ஏன் பரங்கிமலையில் பழைய கந்தைத்துணி பூஜிக்கப்படுகின்றதாம். பல இடங்களில் எலும்புகளும், பற்களும் பூஜிக்கப்படுகின்றன. சில விடங்களில் விக்கிரஹங்கள் பூஜிக்கப்படுகின்றன. சிலவிடங்களில் பிசாசுகள் பூஜிக்கப்படுகின்றன, சிலவிடங்களில் பச்சைதலைப்பாகைக்காரர்களும், நீண்டஅங்கியும், தாடியுமுள்ளவர்கள் பூஜிக்கப்படுகின்றனர். அவர்களின் கால்களில் விழுந்து பிரார்த்தனை புரிகின்றனர். அவர்களின் எச்சலைத்தின்கின்றனர். அம்மம்ம! இந்த அனாச்சாரங்கள் விவரிக்கக்கூடாதபடி அவ்வளவு ஆபாசமானதாகும்.

இவையனைத்தும் கண்டதை கடையதை வணங்குவதல்ல, ஏகதெய்வக் கொளகையென்று ஒரு சில முஸ்லிம்கள் தத்துவார்த்தம் கூற முன்வருகின்றனர். இதை ஒப்புக்கொள்ளுவதானால் ஹிந்துக்களுடையதும், கிறிஸ்தவர்களுடையதுமான பல தெய்வாராதனைகளனைத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டியதே. ஆனால் முஸ்லிம்கள் ஏகேஸ்வரக் கொள்கைக்காரர்கள், சிறந்தவர்கள். ஹிந்துக்கள் பல தெய்வ வணக்கக்காரர்கள், பகுத்தறிவற்றவர்கள், மூட நம்பிக்கையுள்ளவர்கள் என்று பறைசாற்ற முஸ்லிம்கள் பின்வாங்குவதில்லை, வெட்கமடைவதுமில்லை. ஆனால் பெருமை பாராட்டிக் கொள்ளுகின்றனர்.

முஸ்லிம்காள்! உங்களை நீங்கள் திருத்திக்கொள்ளுங்கள் பின்னர் பிறர்களைப்பற்றி கவலை கொள்ளலாம். இந்த முஸ்லிம்களின் மதமும் முன்னேற்றத்துக்குத் தடையாகவிருப்பதால் அந்தத் தடையை நீக்கத்தானே வேண்டும்.

ஆவடிக்கடுத்த போத்தூரில் சீர்திருத்தக்கூட்டம்.

13-2-34 தேதி இரவு 7 மணிக்கு மேற்படியூர் ஆதிதிராவிடகிராமத்தில் ஓர் சீர்திருத்தக்கூட்டம் வாலிபர்களால் கூட்டப்பட்டது. அதுசமயம் கொன்னூர் தோழர் ஐ. இராகவலு அவர்களால் கல்வி, சிக்கனம், சுயமரியாதை என்பதைப்பற்றிப்பேசினார்.

ரோஜா முத்தையா

தமிழ் நாடெங்கும் காந்தி பகிஷ்காரம்.

திருச்சியில் தோழர் காந்தி.

தாழ்த்தப்பட்ட வாலிப சங்கத்தார் சந்திப்பு.

10-2-34ந் தேதி சனிக்கிழமை பகல் 2-மணிக்கு டாக்டர் ராஜன் பங்களாவில் காந்தியை திருச்சி தாழ்த்தப்பட வாலிபர்சங்கத்தின்சார்பாக, சங்கத்தலைவர்தோழர் டி.வி. சன்னுசி அவர்கள் தலைமையில் தோழர்கள் எஸ். அபிமன்னன், எம். சிங்காரம், எம். பெருமாள் ஆகிய நால்வரும் காந்தியைச்சந்தித்து கீழ்கண்ட கேள்விகளைக்கேட்டார்கள்.

கேள்வி:—நீங்கள் நம்புகின்ற எங்கும் சமத்துவமாய் நிறைந்த கடவுள் உயர்வு தாழ்வை ஏன் அங்கீகரித்திருக்க வேண்டும்?

பதில்:—கடவுள் உயர்வு தாழ்வை அங்கீகரிக்கவில்லை.

கேள்வி:—அப்படியானுல் நடைமுறையில் எப்படி?

பதில்:—எங்கும் கடவுளைப்பற்றியே கேட்கப்பட்டு வருகிறது. எல்லாவற்றிக்கும் நானேபதில் சொல்லிகொண்டு வருவதனுல் நானே கடவுளாகிறேன். எனவே கடவுளைப் பற்றி நிர்ணயித்துக்கூறமுடியாது.

கேள்வி:—தாங்கள் வருணுச்சிரம தர்மத்தை இருக்க வேண்டுமென்று கூறுகிறீர்கள். ஆனுல் தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். வருணுச்சிரம தர்மம் இருந்து கொண்டிருந்தால் தீண்டாமை எந்தவிதத்தில் ஒழியும்?

பதில்:—வருணுச்சிரமத்தில் தீண்டாமையில்லை நான்கு வர்ணங்கள் மட்டுந்தான் குறிப்பிட்டிருக்கிறது. வர்ணுசிரமச்தர்மத்தில் தீண்டாமையிருப்பதை நான் நம்பவில்லை.

கேள்வி:—வருணுச்சிரம தர்மத்திலிருந்து தீண்டாமையை எடுத்துவிடமுடியாதா?

பதில்:—(கொஞ்சநேரம் சிறித்துவிட்டு) பதில் கூறவில்லை.

கேள்வி :—தாழ்த்தப்பட்டவர்களாகிய நாங்கள் பிராமணர் அக்கிராரத்தில் நுழைய உரிமை இல்லாதபொழுது பிராமணர்கள் எப்படித் தீண்டாமையைப் போக்க முடியும்?

பதில்:—நீங்கள் சொல்லுகிறதற்குத்தான் ஒப்புக் கொள்கிறேன். ஆனுல் எல்லா பிராமணர்களும் அப்படியில்லை. உண்மையான பிராமணர்களுக்குத் தீண்டாமை இருக்கக்கூடாது.

கேள்வி;—ஹரிஜனசேவைச் சங்கதில் எங்களுக்காக வசூலிக்கப்படும் பணத்தை 100-க்கு 90-பிராமணர்கள்தான் சாப்பிடுகிறுர்கள். அதில் எங்களுக்கு என்ன பிரயோஜனம் உண்டு. அதற்குத் தாங்கள் என்ன சொல்லுகின்றீர்கள்?

பதில்:—உங்களுக்கு 100-க்கு 98-பிராமணர்கள் ஊழியம் செய்வது அவர்கள் முன் வாங்கிய கடன்களைத் தந்துவருகிறுர்கள். 98-பிராமணர்கள் உங்களுக்கு வேலை செய்வது நன்மைதானே.

கேள்வி,—அவர்கள் செய்வது கடனுகச் செல்லவில்லை. பணம் வாங்கிக்கொண்டு செய்கிறுர்கள்.

பதில்:—அவர்களுக்குச் சம்பளம் என்பதே கிடையாது. சங்கமே உங்கள் கடமைக்காகச் செய்யப்படும் சங்கமாகும். உங்களுக்கு வேலை செய்வதே பிராமணர்களின் கடமையாகும்

கேள்வி:—எங்களில் அனேவர் திறமையுள்ளவர்கள் இருக்கும்பொழுது ஏன் ஹரிஜன சேவை சங்கத்தில் எங்களை 100-க்கு 50-பேர்களாவது வைக்கக்கூடாது.

பதில்:—50:பேர் இருக்கவேண்டுமென்று சொல்லுகிறீர்கள். அது முடியுமாவென்பதுதான் யோசனை. பிராமணர்கள்தான் உங்களுக்கு வேலைசெய்யவேண்டும். அந்தக் கடன் அவர்கள்மேல்தான் சுமத்தப்பட்டிருக்கிறது.

கேள்வி:— ஹரிஜன சேவை சங்கத்தில் அந்தப் பணத்தை எந்த வழியில் செலவு செய்கிறீர்கள்?

பதில்:—நாங்கள் டில்லியிலிருக்கும் தலைமை சங்கத்தின் யோசனை பிரகாரம்தான் செலவு செய்கிறோம். ஆனுல் பணத்தைப்பற்றி அடிக்கடி கணக்குக் காண்பிக்கிறோம்.

கேள்வி— தாழ்த்தப்பட்டவர்களாகிய நாங்கள் பொதுத் தொகுதிப் பிரகாரம் எலக்ஷனில வர முடியாது.

பதில்:—ஏன் வரமுடியாது?

கேள்வி:—எங்களில் சாதாரணமாக அறிவுள்ளவர்கள்உயர்சாதியினர்களிடம் ஓட்டுப்பெற முடியாது உயர் ஜாதினர்களுக்கு அடிமையாய் உள்ளவர்கள்தான் ஓட்டுப்பெறமுடியும்.

பதில்:—நீங்கள சொல்லுவது தப்பாகும்சரியானபடிநீங்கள்பூனு ஒப்பந்தத்தைப்பற்றி வாசிக்கவில்லை. முதலில் ஆதிதிராவிடர் மூலயமாய்தான் 4 பிரதிநிதிகளைத்தெரிந்தெடுக்க வேண்டும், அதற்கு பிறகுதான் ஜாதி இந்துகள் மூலயமாய் ஓட்போட வேண்டும். அதற்குள் நேரமாகி விட்டது என்று தோழர் ராஜன் கூறவே வாலிபசங்கத்தார்கள் வந்துவிட்டார்கள்.

நாகையில் காந்தி பகிஷ்காரம்.

நாகைக்கு காந்திவருதை முன்னிட்டு சுமார் ஒரு மாத காலாக இவ்வூரில் சுயமரியாதை சங்கத்தார் பகிஷ்காரத்துண்டு விளம்பரங்கள் பல வெளியிட்டு வந்ததோடு பல பொதுக்கூட்டங்களில் தோழர்கள ப. ஜீவானந்தம், அ. பொன்னம்பலம், எஸ். வி. லிங்கம், ஸி. நடராஜன் முதலானவர்களைக்கொண்டு பிரசங்கங்கள் செய்யப்பட்டு வந்தது.

இந்தவித காரணங்களால் இங்கு இரு கக்ஷியாருக்குள்ளும் கலகம் மூண்டு விடுமோவென போலீஸ் அதிகாரிகள் சுயமரியாதை இயக்கத் தோழர்களை தருவித்து இரண்டு தடவை வார்ணிங் செய்திருந்தார்கள்.

15-2-34ல் காந்தியாருக்காக கூட்டம்கூட்டப்படும் அவிரித்திடல் மைதானத்திலேயே தங்களுடையகூட்டத்தையும் நடத்தப்போவதாக சுயமரியாதைச்சங்கததார் துண்டு விளம்பரம் வெளியிட்டிருந்தார்கள்.

இடைக்கக் கண்ட போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சுயமரியாதை சங்கதலைவரைக் கூப்பிட்டு அவுரித்திடல் மைதானத்தில் கூட்டம் நடத்தக் கூடாதென்றும், 14-2-34ந் தேதி இரவு 7மணிக்கு எச்சரிக்கை செய்தனுப்பினுர் இதை சங்க அங்கத்தினர்களின் கூட்டத்தைக் கூட்டி அதில் எடுத்துச் சொன்னுர். சங்க மெம்பர்கள் கண்டிப்பாக 15-2-34ல் அவுரித்திடலில் கூட்டம் நடத்த வேண்டு மெனத் தீர்மானித்தனர். இதைக்கண்ட சர்க்கிள் இன்ஸ்பெக்டர் 15-2-34 காலையில் பகிஷ்காரக் கமிட்டியாரைத் தருவித்து எச்சரிக்கையை மீறிக் கூட்டம் கூட்டத்தான் போகிறோமென ஸ்டேட்மெண்ட் எழுதி கேட்டார். அதுபடி தோழர்கள் எஸ். பி. கிருஷ்ணன், வி சாமிநாதன், எஸ். துருகையா, எம். ஆர். பதி, எஸ், நாராயணசாமி ஆகிய கமிட்டி மெம்பர்கள் கையெழுத்திட்டுக் கொடுத்தார்கள். அதன் மேல் போலீஸ் அதிகாரிகள் சப்மாஜிஸ்ட்டிரேட் அவர்களிடம் சென்று சுயமரியாதைக் காரர்களுக்கு 144 வது தடை உத்திரவு சார்வு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்கள். அதன்மேல் சப்மாஜிஸ்டிரேட் அவர்கள் மேற் கண்டவர்களை அழைத்து கலந்து பேசியதிலிருந்து பின்கீழ்கண்ட ஒப்பந்தத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டு கூட்டம் நடத்த அனுமதி கொடுக்கப்பட்டது.

மற்றவர்கள் கலகம் விளைவித்தாலும் தாங்கள் கலகம் செய்யாது இருப்பதாகவும், காந்தியார் கூட்டத்திற்கு வந்ததும் தங்கள் கூட்டத்தைக் கலைத்து விடமெனவும் நிபந்தனை விதிக்கப்பட்டது. பின் மாலை 4மணிக்கு தோழர் எஸ். ராமனுதன் எம் ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் சுயமரியாதைக் காரர்களின் ஊர்வலம் கருப்புக்கொடிகளுடனும், பகிஷ்கார வாசகங்களடங்கிய அட்டைகளுடனும் ஊரின் முக்கிய வீதிகளை ஊர்வலமாக சுற்றி வந்தார்கள். அவுரித்திடல் சென்றதும் அங்கு தோழர் எஸ். பி. கிருஷ்ணன் தலைமையில் பகிஷ்காரக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பகிஷ்கார கூட்டத்தில் ஏராளமானவர்கள் கலந்துக் கொண்டார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் தோழர்கள் எஸ் ராமநாதன் எம். ஏ. பி எல்., அவர்களும், வி சாமிநாதன் அவர்களும், குருசாமி அவர்களும் காந்தியை ஏன் பகிஷ்கரிக்க வேண்டுமென்பதைப் பற்றி சவிஸ்தாரமாகப்பேசினுர்கள் காந்தியின் பிரசங்கம் 7மணிக்கு நடைபெறுமெனக்குறிப்பிட்டிருந்தும் 7-30 மணிவரை வராததோடு 9மணிக்குக்குமேல்வருவதாக வதந்தி ஏற்பட்டதாலும்தலைவர் முடிவுரைக்கூறி7-30 மணிக்குக் கூட்டம முடிவுற்றது. பின் ஊர்வலமாக சங்கக்கட்டிடத்திற்கு சுமார் 8-15மணிக்கு வந்து சேர்ந்தார்கள்.

சுமார் 8-30மணிக்கு காந்தி தன் சகாக்களுடன் சுயமரியாதைச்சங்க ரோடுவழியாக அவுரித்திடல் மைதானத்திற்குப்போனுர்கள். சுயமரியாதை க்கைதில் கருப்புக் கொடிகளைக்காட்டி காந்தியின் கார்வந்ததும்'வெட்கம்' வெட்கம்'காந்தி திரும்பிப்போ என்ற கோஷத்தைக் கூட்டத்தினர் செய்ததானது வனமளாவியது.

கூட்டத்திற்கு சென்றதும் பல வகையிலும் சுமார் 700 ரூபாய் வரை வசூலாயிற்று. முனிசி பாலிட்டி தாலூகா போர்டு முதலிய ஸ்தாபனங்களிலிருந்து உபசாரப் பத்திரங்கள் வாசித்துக்கொடுத்தார்கள். அதற்கு காந்தியார் பதிலளித்த பின் தீண்டாமையொழிப்பு 'விஷயமாகப்பேசினுர். கூட்டம சுமார் 9மணிக்கு முடிவுற்றதும் அகமது விலாவில் தங்கியிருந்தார்கள.

திருவாரூர்

15-2-34 இந்நகருக்கு தோழர் காந்தி வருவதை பகிஷ்கரிக்க வேண்டி ப்ரீதிங்கரஸ் அசேசியேஷனும், சமதர்ம வாசகசாலையாரும் "காந்தியை ஏன் பகிஷ்கரிக்க வேண்டும்" ஹரிஜன காந்தியை பகிஷ்கரிப்ப தேவை என்? சுயமரியாதைஇயக்கத்தில் ஏன் சேரவேண்டும என்ற துண்டுப் பிரசுரங்களை பதினுயிரக்கணக்காக வினியோகித்ததுடன் காந்திஜி கூட்டத்திலும் ஏராளமாக வழங்கினுர்கள். காந்தி வந் வுடன் உள்ளூர் வைஸ் சேர்மன் 'கோசபையா' என்ற கையெழுத்துடன் சேர்மன் இருக்கும்போது தன்னுடைய பெயர் அதில் வழக்கத்துகு விரோதமான முறையில் போட்ட உபசாரப் பத்திரத்தை காந்தியின் கால்களில் வைத்ததுமன்றி, தானும் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்தார். சுயமரியாதை தோழரான சேர்மன் அவர்கள் காந்தி வரவேற்பில் கலந்து கொள்ளவில்லை யென்றுலும் தோழர் கா

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

காந்தியின் தென்னாட்டு விஜயம்.

சமதர்மிகளின் பகிஷ்காரவெற்றி.

பொதுவுடைமையும், காந்தீயமும் பொருந்தா.

லெனின் கண்டனம்.

(காம்ரேட்)

அடிமையும், சுயநலமும்.

சென்ற பதினைந்து வருஷமாக நடந்த தேசியக் கிளர்ச்சியின் பெரும்பலன், இந்திய சமூகம் காந்திஜீயின் காலடியில் விழுந்துகிடக்கிறது. சுதந்திர உணர்ச்சியின் வியாபகம் அடுத்தபடிதான். காந்திஜீ, 'அந்தராத்மா' சொன்னதாக, வெள்ளைக்காக்காய் பறக்கிறதென்றால், ஓம் என்று ஒப்புக்கொள்ளும் முதுகெலும்பு ஒடிந்த பிரகஸ்பதிகள் நாட்டில் ஆயிரமாயிரம். இந்தப் பிரகஸ்பதிகளை நம்பி உழலும் பொதுமக்களோ கோடான கோடி. சுயேச்சை உணர்ச்சியின் இறகுகளை, நவீனமுறையில் காந்தீயம் ஒடித்துவருகிறது. படித்தவரின் சுயநலம், இந்த நாசச்செயலை மறைப்பதில் கூச்சப் படக்காணோம். பாமரமக்களுக்கோ, கண்ணுமில்லை, காதுமில்லை. காந்தியின் 'மகாத்மீயத்தை' ஸ்தாபிப்பதற்கே, தேசிய வீரர்களின் பெரும்பொழுது விநியோகிக்கப்படுகிறது. காந்திஜீயைப் பெரியவராக்க ஆக்க, கஷ்டப்படும் சமூகத்தின் அடிமை விலங்கு இறுகிக் கொண்டே வரும் தர்க்குறு, காமாலைக்காரர் கண்களில் படுவது தூர்பலம். பெரிய மனிதத்தன்மையைக் காக்க, மனிதசமூக சுதந்திரத்தைப் பலியிடுவதா? கொடுமை! கொடுமை!!

சுயபுத்தி.

“நான் யாரையும் பூழு வழிகாட்டியாகக் கொள்வதில்லை” என்பது காந்தி வாக்கு. காந்திஜீ 'பரிபூரண வஸ்து' என்பது காந்தி பக்தர்களின் சித்தாந்தம். உண்மைஎன்னவென்றால், பொறுப்பைக் கருதி, காந்திஜீ, சொந்தப் புத்திக்கு வேலை கொடுக்கிறார். காந்தி பக்தர்களோ, காந்திஜீயின் 'திருவடி'களில் சரணாகதியடைந்து விட்டார்கள்.

ஆகவே, சுயமரியாதை இயக்கக்கொள்கைகள், காந்திஜீக்குத் தெரிவதுகூட காந்தி பக்தர்களின் மக்கி மரத்துப்போன மூளைகளில் நுழைவதில்லை. சென்னை, பள்ளத்துருத்தி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, திருச்சி, கும்பகோணம், மாயவரம், சீகாழி முதலிய இடங்களில காந்திஜீ சுயமரியாதை இயக்கத்தைப்பற்றிவெளியிட்ட அபிப்பிராயங்களை, காந்தி பெயரால் வயிறு வளர்க்கும் பத்திரிகைகளும், காந்தீயத்தில் முங்கி முழுகி விட்டதாக வேஷம் போடும் காந்தி பக்தர்களும், தவேஷக்கண்ணாடிகளைக் கழற்றிவிட்டு கண்ணியமாகத் திரும்பத்திரும்பப் படித்துப் பார்க்கவேண்டுமென்பது எனது கோரிக்கை.

எண்ணம் ஈடேறிற்று.

சுயமரியாதைக்காரர்கள் காந்தி பகிஷ்காரத் தீர்மானம் நிறைவேற்றினார்கள். தீண்டாமையைத்தீவிரமா யொழிக்கும் கூட்டத்தார், ஹரிஜன இயக்கத்தை வெறுத்து, காந்தியை பகிஷ்கரிப்பதற்குரிய காரணங்களை சுற்றி இருக்கும் குட்டிச் சாத்தான்களைத் தாண்டி காந்திஜீ உணருமாறு செய்யவேண்டுமென்பது தான் சமதர்மிகளின் எண்ணம். வரவேற்புக் கமிட்டியார் பலவிடங்களில் எவ்வளவோ சூழ்ச்சிசெய்தார்கள். என்றாலும், பகிஷ்கார நோக்கங்களையும், சுயமரியாதைக் கொள்கைகளையும் காந்திஜீ அறிந்து, பதில் சொல்லித் தீரவேண்டிய நிர்ப்பந்தம் சிலவிடங்களில் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

> நான் சுயமரியாதைக்கொள்கைகளுக்குச் சரணாகதி அடைகின்றேன். [I surrender to the self-respect principles என்றும், அறிவுக்கு ஒவ்வாதமதமும், கடவுளும் சம்மட்டியால்தகர்க்கப்படவேண்டும். ஏழை பணக்கார வித்தியாசம் ஒழிக்கப்படவேண்டும்”

என்றும் கும்பகோணம் சுயமரியாதைத் தோழர்களிடம் காந்திஜீ கூறினார். நிலைமையை மழுப்பிச் சமாளிக்கும்பொருட்டு தமாஷாகக் காந்திஜீ கூறியிருப்பாரென்று சு. ம. தோழர்கள் எண்ணினாலும் எண்ணலாம். ஆனால் காந்தி பக்தர்களுக்கு, ஹரிஜன சேவகர்களுக்கு, 'சத்ய சொரூபி'யான 'மகாத்மா'வின் மணிவாசகங்களை வேடிக்கைப் பேச்சென்று துணிந்துகூற நாவெழாதென்பது திண்ணம்.

சமூகசக்தி வலிது.

சமுதாய சாஸ்திரத்தில் (Socialogy) தெள்ளறிவுடையோரே சமதர்மிகள். மனிதவர்க்கம் தற்கால முதலாளித்வத்தை விழுங்கிப் பொதுவுடைமையை ஏற்றுத் தான்தீரும். ஆதாரமற்று அண்ணாந்து பார்க்கும் ஆத்மார்த்திகம [Spiritualism] நசித்து, அனுபவ சாத்தியமான அவசியம் நிரம்பிய லோகாயதம் (Materialism) வெற்றிக் கொடி நாட்டவேசெய்யும். இவை சமதர்மிகள் ஆராய்ந்து தேர்ந்த முடிவுகள். மக்கள் யாவரும் ஒரு குடும்பமாய் வாழும் நன்னாளை நாம் அடுத்து வருகின்றோம். மனித சமாஜத்தினுடைய இருதயத்தின் அடித்தளத்தில் அகில தேசக் கூட்டுறவினை]Universal collectivism] அவசியம் சுடர் விட்டுப் பிரகாசிக்க ஆரம்பித்து விட்டது. குறும் பார்வைக்காரர் கண்ணில் இது படவில்லை. சென்னைப் பத்திரிகாசிரியர் ஒருவர், பகிஷ்காரத தீர்மானம் புத்தியற்ற தீர்மானமென்றும், காந்தியை நெருங்கினால் நாசமாய்ப் போய்விடுவோமென்றும் நம்மைப் பூச்சாண்டி காட்டினார். இன்னும் அநேகர் நம்மை மறுத்தும் வெறுத்தும் தங்கள் கோழைத்தனத்தையும், சுயநலத்தையும உருட்டித் திரட்டி உலகக் கண்காட்சி சாலைக்கு அனுப்பினர். நாம் ஏளனச் சிரிப்புச் சிரித்தோம். தொண்டரடிப் பொடியாழ்வார்கள் எதையும் சொல்வர்; எதையும்செய்வர். காந்திஜீயாலும் சுயமரியாதைக் கொள்கைகளை அசைக்க முடியாதென்பதை அவர்கள் முன்பே அறியாதது ஆச்சரியமல்ல. காந்திஜீ சரணாகதியடைந்தது சுயமரியாதைக்காரர்களுக்கல்ல; சமூக சக்தியின் வலிமைக்கு, சமூக அவசியத்தின் நிர்ப்பந்தத்திற்கு. சுயமரியாதைக் கொள்கைகள், மனித சமூகத்தின் அவசியங்கள். காந்திபக்தர்கள், தங்களுடைய மூளைக்குச் சாணை பிடித்து பகுத்தறிவை வளர்த்து, பக்திப்பெருக்கத்தைத்தணிக்கவேண்டுகிறேன்.

காந்தியின் தெய்வ நம்பிக்கை.

எனது தோழர்களை எச்சரிக்க வேண்டியது என் கடமை. சுயமரியாதைக் கட்சியில் என்னோடு அவர்களும் உறுப்பினர். அவர்களுக்கு ஏற்படும் மயக்கம் என்னையும் பாதிக்கும். சிலவிடங்களில் சு. ம. தோழர்கள் காந்திஜீயைப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள். காரணம் காந்திஜீ சு. ம. கொள்கைகளைஒப்புக்கொண்டாரென்று. தோழர்களே! உஷார்! காந்திஜீ நம்பிக்கைக்காரர்; நாம் அறிவியல் வாதிகள். விஞ்ஞானமும், மதமும் பரமவிரோதிகள். பகுத்தறிவு வளர்ச்சியே விஞ்ஞான வளர்ச்சி. விஞ்ஞானச் சூரியனின் திக்விஜயத்தால் உலகத்தின் எல்லாப்பாகத்திலும், மதஇருட்படலம் ஓடிஓடி ஒளிந்து வருகிறது. ஒளியும்,இருளும்ஒன்றுபடுமோ? காந்திஜீ மதவாதியும் தெய்வ நம்பிக்கைக்காரருமாம். பகுத்தறிவு வாதியும் கூடவாம். விந்தை! பெரும் விந்தை!! சென்னையில் தான் மதவாதியும், பகுத்தறிவு வாதியுமென்றார். பள்ளத் துருத்தியில், மதம் இல்லை, கடவுள் இல்லை என்பது சரியல்ல, நீதியல்லவென்று காந்திஜீ மனம்நொந்து, வருத்தி வாலிபர் எழுச்சிக்குத் தீர்ப்புக் கூறினார்.

திருநெல்வேலியில் “என்னை மூட நம்பிக்கைக் காரனென்று நினைக்கலாம். ஆனால் பூகம்பத்தை ஏவியது கடவுளென்றே கருதுகிறேன்” என்ற கருத்தை வெளியிட்டார். இவ்வுலகில்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க,

ரோஜா முத்தையா

காங்கிரஸ் ஸ்தம்பிப்பு.

(தோழர் T. N. இராமச்சந்திரன்)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

காங்கிரஸ் ஒன்றோடொன்று பிணக்கு கொண்ட இரு பிரிவுகளாக சிதறுண்டது. இதில் பெரும்பான்மையோர், காந்தி வழி நின்று பயபக்தி விஸ்வாசத்தோடு அவரைப்பின்பற்றினர்; ஆனால் உடனே அரசியல் அந்தகார இருளில் அவர்கள் அயர்ந்து உறங்கலானார்கள். மீண்டும் காந்தியார் தவறான அரசியல் துறையில் ஆவேசங்கொண்டதும் அதி அக்கிரமமாக அவர்கள் எல்லோரும் உடனே அவரைப் பின்பற்றினார்கள்.

நிற்க, சிறுபான்மையோர் பார்லிமெண்டரி முறையில் மோகங்கொண்டு சட்டசபையில் முட்டுக்கட்டையிடுவதை முக்கியத்துவமாக கொண்டார்கள். இவர்கள் மிதவாதத்தில் காலக்கிரமத்தில் அமிழ்ந்து விட்டார்கள்.

சுயராஜ்யக் கக்ஷியாரின் பயனற்ற வேலைகளைப்பற்றி இங்கு வாசகர்களுக்கு ஞாபக மூட்ட விரும்பவில்லை. ஆனால் ஒரே ஒரு விஷயத்தைக் குறித்து மாத்திரம் ஈண்டு தெளிவுபடுத்த ஆசைப்படுகிறேன். அதாவது மாறுதல் வேண்டாதவர்கள், உயிரற்ற காலங்கடத்தியதைவிட, சட்டசபை பிரவேசக்காரர்கள் கையாண்ட ராஜீய தந்திர முறைகளானது பல வழிகளிலும் சிலாகிக்கத்தக்கது என்பதாகும். சட்டசபை பகிஷ்கரிப்பானது அதன் ஆரம்ப முறையிலிருந்தே தவறானதாகும். இதிலிருந்து நாம அரசியல் ஒத்துழைப்பாளரென்று கருதிவிட வேண்டாம். ஆனால் கவுன்சில்களானது சட்டவரம்போடுகூடிய ஸ்தாபனத்தைத் தகர்க்கத்தக்க கிளர்ச்சியை உண்டாக்கும் ஓர் 'பிளாட்பாரமா'கும் என்பதை நாம் எப்பொழுதும் மறந்துவிடக்கூடாது. அது சட்டசபைகளில் அங்கம் வகிக்கும் ஜட்காவாலர்களை மட்டம்தட்ட உபயோகமானதுமாகும். அதீத பார்லிமெண்டரி பொதுஜன இயக்கத்தின் பார்லிமெண்டரி நடை முறைகளானது மிக பிரயோஜனகரமானதுதான. சுயராஜ்ய கக்ஷியானது மேற்கண்ட முறைகளை கவுன்சில்களில் கையாடி இருக்கலாம். ஆனால் அது குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ள முன்னேறியது. மிக விரைவில் மிதவாத ஜோதியில் அது கலந்து விட்டது. சுயராஜ்யக்கக்ஷியானது அமைக்கப்பெற்றது— தக்க பொதுஜன இயக்கமும கஷ்டமான பாதையினின்று அதுஅடியோடு நழுவி விட்டது. இது சுயராஜ்யக்கக்ஷி மேற்கொண்ட கொள்கைக்கு துரோகம் செய்ததாகும். ஆகவே அது பயனற்ற சிறிது காலஜீவத வாழ்க்கைக்குப் பிறகு மாண்டு மடிந்தது. இந்தக்காலத்தில் "தேசியக்கோரிக்கைகள்" என்ற பெரும் பிரச்சினையானது காற்று வாக்கில் பறக்கவிடப்பட்டது. இந்த விஷயமானது நாட்டு மக்கள் ஞாபகத்திலிருந்து இதற்குள் மறைந்து போயிருக்க முடியாது. இது மிதவாத கோஷ்டியாரின் திட்டத்தினின்று அதுவும். வட்டமேஜை சம்பந்தப்பட்ட முறையினின்று அதிக வேறுபட்டதல்லவென்பதும் பரிசீலனைக்காரர்களுக்குத் தெரியவரும்.

சுயராஜ்யக் கக்ஷியின் சீர்குலைவானது 'அரசியலிலிருந்து வீழ்ந்துபட்ட—விலக்கப்பட்ட' (Retired from politics as a beaten man) வரான மகாத்மாவின் பிரசன்னத்திற்கு வழிகோலியது. இவ்விதமாக காங்கிரஸ் தனது ஒரு சுழற்சியைத் தவறான கோட்பாட்டிலேயே முற்றுப்பெறச் செய்தது. 1921-22 வருஷங்களில் ஏற்பட்ட நெருக்கடியின் புரட்சி காலத்தில் ஒரு உயரிய தலைவரை பெற முடியாது போனதினால் காங்கிரஸ் வீழ்ச்சியுற்றது. அது மீண்டும் பழைய தேவதையின் இருப்பிடத்திற்குச் சென்றது. இதுபோன்றே சம்பவங்கள் மீண்டும் நிகழ்வுற்றது. ஆனால் அது மீண்டும் பாழான [பாலைவனத்திற்கொப்பான] மோசமான நிலைமையையே பெற்றது. சமீபகால சைமன் கமிஷன் பகிஷ்காரமானது, 1920 வருஷத்தில் நிகழ்வுற்ற கானாட்டு கோமகன் பகிஷ்காரத்தைப் போன்றதேயாகும. ஆனால் 1920 வருஷம் நிகழ்வுற்றது போன்று இது பொது மக்களை அவ்வளவாக ஈடுபடுத்திக்கொள்ளவில்லை. பழங்கால அனுபவங்களிலிருந்து—அந்தோ! எந்த பாடமும் காங்கிரஸ் கற்றுக்கொள்ளவில்லை. முழு இயக்கமும் அற்ப பிரச்சினைக்கு ஆளாகியது. மிதவாதிகள் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தில் ஈடுபட்டதிலிருந்து தேசிய பரிபூரண விடுதலை யென்ற முக்கிய பிரச்சினையானது மக்கள் கவனத்திலிருந்து மாறியது. அன்றைய இயக்கத்தின் போக்கு வாஸ்தவத்திலே எதிர்ப்பதாகுமா? இல்லை — கமிஷன் உறுப்பினர்கள் அமைப்பில் ஏற்பட்டதல்லவா பகிஷ்காரத்தின் இரகசியம். இதுவேதான் மிதவாதிகள் கோரிக்கை. இந்த வினோதத்தில் காங்கிரஸ் ஆடிய நாடகந்தான் விசேஷிக்கத்தக்கது. படித்த பணக்கார வகுப்பார்களின் கோரிக்கைகளுக்காக; காந்தியின் தலைமையின்கீழ் மிகப் பகிரங்கமாகக் காங்கிரசானது அற்பக் கையாயுதமாக தாளம் போட்டுப் போராடியதானது இதற்குமுன் எந்தக் காலத்திலும நிகழ்வுறாத சம்பவமாகும. காங்கிரசானது மிக அவமானகரமான நிலைமையில் அதையே ஏற்படுத்திக்கொண்டது பொதுஜன மக்களால் உச்சஸ்தானம் பெற்ற பெரிய தலைவர்களெல்லாம் பொதுஜன நன்மையை சிறிதும் உண்மையாகக் கருதாது, அலட்சியபடுத்தியதே முற்கூறிய சம்பவத்திற்கு முக்கிய காரணமாகும்.

மிதவாதிகளுடைய வட்டமேஜை மகாநாட்டின் கோரிக்கைகளைச் சர்க்கார் ஒத்துக்கொண்டதும் மிதவாதிகள் தங்கள் நண்பர்கள் குழாத்தினரைக் கைவிட்டு விட்டனர் ஆனால் காங்கிரஸ் அதனுடைய சகபாடியான துரோகக்கு பெரிதும் உதவியளித்தது. முதலாவதுவட்டமேஜை மகாநாட்டைக் காங்கிரஸ் பகிஷ்கரித்ததானது—அதில் முதல்தடவை கலந்துகொண்டவர்களுடைய சந்தைவியாபார யோக்கியதையை அதிகப்படுத்த வேண்டுமென்கிற தத்துவத்திற்காகவே தவிர வேறல்ல. மீண்டும் காங்கிரசானது, அதனுடைய பிரகடனப் படுத்தப்பட்ட பகிரங்க கொள்கைகளுக்கு நேர் மாற்றமாகப் படித்த பணக்கார வகுப்பார்களுக்கு ஊழியஞ் செய்யும் கையாயுதமாகியது. வறட்டுச் சுபாவமே குடிகொண்ட சர்க்கார் கையிலிருந்து; பணக்காரர்களுடையவும், முதலாளிகளுடையவும் மிதவாதப் பேச்சாளர்கள் சில உரிமைகளை அவர்கள் பெறுவதில்தான காங்கிரஸ் உதவ புரிந்ததைத் தவிர சைமன் கமிஷன் பகிஷ்காரத்தாலோ அன்றி முதல் வட்டமேஜை மகாநாட்டின் நிராகரிப்பினாலோ எந்தப் பயனுள்ள காரியத்தையும் சாதித்ததென்று யாரும் எதுவும் சொல்லிவிட முடியாது. மேற்காட்டிய துக்ககரமான முறையானது தடுக்கப்பட்டிருக்கலாம். அதற்குக் காங்கிரஸ் ஆக்கக் கோரிக்கைகளோடு அழிவுத் திட்டத்தை மேற்கொண்டிருக்கவேண்டும். மேற்சொன்னவாறு காங்கிரஸ் தன்னுடைய கோரிக்கைகளை உருப்படுத்தி சைமன் கமிஷனைப் பகிஷ்கரித்திருக்கவேண்டும். ஆனால் அந்தோ! மிதவாதிகளுடைய அற்பக் கோரிக்கைகளுக்காக காங்கிரஸ் அடிபணிந்து, அவர்களுக்கு அடிமைப்பட்டது. பரிபூர்ண சுயேச்சையென்ற அடிப்படையான காங்கிரஸ் திட்டம் காங்கிரசால் நழுவவிடப்பட்டது. இந்திய மக்களின் பரிபூர்ண சுயேச்சையை, கொள்கையாகக் கொண்ட ஒவ்வொருவரும இந்தியாவின் முடிவை நிர்ணயிக்க கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் அதிகார ஆணவங்கொண்ட பிரிட்டிஷாரின் அளவற்ற அதிகாரத்தை நசுக்கவேண்டியதேநியாயம். காங்கிரஸ்காரர்கள் தங்கள் உரிமையையே நிர்ணயிக்கும் பெரும் பொறுப்போடு, சைமன்கமிஷனைப் பகிஷ்கரிக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் அமைப்பு முறையான அசெம்பிளி முறையை காங்கிரஸ்பின்பற்றியிருக்கலாம். அதாவது சைமன் கமிஷனை காங்கிரஸ் பகிஷ்கரித்ததும், இந்தியாவின சுயேட்சை அரசாட்சியை நிர்ணயிக்கும பொறுப்பு இந்தியர்களால்தேர்ந்தெடுக்கப்பட்ட அசெம்பிளியால்தான் தீர்மானிக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ் பிரகடனப்படுத்தியிருக்கவேண்டும். ஆனால் இந்த முறையை காங்கிரஸ் தெளிவுபடுத்தாததால் தனது பரிபூர்ண சுயேச்சை யென்ற தீர்மானத்தின் பொருப்பற்றதன்மையை நிரூபிக்கதோடு, அது மிதவாதிகளுக்கு உதவி செய்வதே கமிஷன் பகிஷ்காரத்தின் கருத்தென்றும், நிதர்சனப்படுத்திவிட்டது. இதை அடிப்படையாகக்கொண்டேதான் 1930ஆம் சட்டமறுப்பு இயக்கமும் ஆரம்பமாகியது. ஆனால் இதனைக் காங்கிரசின் முழு கோஷ்டியும் சரியாக உணர்ந்து கொள்ளக்கூடவில்லை. அற்பக் காரியத்திற்காகத் தலைவர்கள் இயக்கத்தைப் பாழ்படுத்தியதை என்னென்போம்! காங்கிரசின் உள் சூழ்

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

இனாம்தார் குடிகளே எழுங்கள்!

பார்ப்பன சூழ்ச்சிக்கு ஆளாகாதீர்!

[தோழர். எஸ். வி. லிங்கம்.]

நமது மாகாண சட்டசபையில் "இனாம்தார்களின்" குடிகளின் உரிமையில் இருந்த மிக சகிக்கொணு கொடுமையை சற்று தளர்த்தினார்கள். இதைக்கண்டு அன்று இருந்து இன்றுவரை இம்மாகாணத்திலுள்ள சகல பார்ப்பன பத்திரிகைகளும், இனாம்தாருக்கு ஆபத்து என்று ஓலமிடுகிறது. சிறப்பாக தஞ்சாவூர் ஜில்லாவில் இச்சம்பவம் உண்டானது. பீகார் பூகம்ப அதிர்ச்சியைவிட சப்தத்தில் பெரியதாக இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? இது நியாயமா? இதற்குப்பரிகாரம் இல்லையா? என்பதை சிறிது கவனிக்கல் அவசியம். எண்பத்தாயிரத்துக்குட்பட்ட கிராமங்கள் நமது மாகாணத்தில் இருக்கக்கூடும். இதில் நான்காயிரம் கிராமங்கள் இனாம் கிராமங்களாகும். ஆதி காலத்தில் நடைபெற்ற அந்நிய தர்பார் காலத்தில் வீணர்கள், சோம்பேரிகள் ஜகதலைப்புரட்டர்கள் இத்தகையவர்களுக்கே பெரும்பாலும் இனாம் கிராமங்கள் கிடைத்திருக்கிறது. இதில் பெரும்பாகம் உழைப்பாளர்களிடம் இருந்து மதத்தின் பேரால் ஏமாற்றி வாங்கப்பட்டது இச்சதை நமது சட்டசபை நடவடிக்கையன்று மிக அழகாக விளக்கப்பட்டது. எந்த கருத்துடன், எச்செய்கைக்கு என்று இந்த தர்மங்கள் விடப்பட்டதோ! அச்செய்கை மறைந்து பல வருடங்களாயிற்று. இன்று பெரும் பான்மையான கிராமங்களில் மூலபுருடர்களின் சந்ததிகூட இல்லை. இனாம் கிராமங்களை பிராமணனே பெற தகுதியுடையவன் என்று கற்பனை கதை கட்டிவிட்டு, முட்டாள்களான பல இனாம்தாகளின் உரிமைகளை பலர் குறைந்த விலைக்குப் பெற்றார்கள். அதைப்போலவே கடவுளை காப்பாற்ற என்று விடப்பட்ட பல தர்ம சொத்துக்கள் இன்று பஞ்சாயத்தார்கள், தர்மகர்த்தாக்கள், மடாதிபதிகள் இத்தகைய தர்மபாதுகாப்பாளர்களால் ஒழுங்காக நிர்வகிக்கப்படவில்லை. இன்றுள்ள எந்த மதத்தலைவருடைய மடாதிபதியை எடுத்துக்கொண்டாலும் அவர்களிடமுள்ள சொத்து, மத வளர்ச்சிக்கேயன்றி அனுபவத்தில் உள்ளவைகளுக்கல்ல. ஒருமடாதிபதி கோர்ட்டில் வகிலுக்கு வக்கீக்கணக்காகவும், ஒரு மடாதிபதி விபசாரிகளுக்கும், குடிக்கும் லெக்ஷக்கணக்காகவும் இதுபோன்ற மோசமான வழிகளில் பணம் அள்ளி அள்ளி இறைக்கப்படுவதை காண்கிறோம். இதற்கு அவர்களிடம் பண மேது சர்க்கார சம்பளமா? தொழில் வருமானமா? என்று பார்த்தால் பெரும்பாலும் முதலில் சொன்ன கடவுள் பாதுகாப்பு என்றதிலிருந்து தான் என்பது தானக விளங்கும்.

இவ்விதம் ஆதியில் இனாம் வழங்கப்பட்டது நியாயம்தானா? என்பதை ஒதுக்கிவைத்துவிட்டு பார்த்தால் கூட இனாம பெற்றவர்கள் அதைவிட்டு விட்டு போனதையும் குறைந்த விலைக்கு விற்றதையும் இனாம் கிராமம் இனாமாகவே வழங்கப்பட்டதையும், பார்க்கிறோம். இனாம்பெற்றவர்களில் பிராமணர்கள் மடாதிபதிகள் இவர்கள்தான்: இன்று அதை பெரும்பாலும் அநுபவிக்கிறார்கள் என்றாலும் இவர்கள் மூல புருடர்களின் லக்ஷியத்திற்கு, விருப்பத்துக்கு மாறாக செலவிடப்படுவதை ருஜூப்படுத்த நூற்றுக்கணக்கான கொலைவழக்குகளும், எண்ணற்ற மோசடி கேஸ்களும் நீதிமன்றமேதியும்கூட இதை சர்க்கார் கவனித்து தக்கபரிகாரம் தேடவில்லை என்றே எண்ணுகிறோம்.

உடனே இக்கிராமங்களை பரிமுதல் செய்து சர்க்கார் மேற்பார்வையில் யுத்தமான வழியிலும், நல்ல செலவுகளுக்கும் செலவிட முயற்சி செய்தால் மிக நலமாக இருக்கும்.

இன்று இப்படி செய்யாமல்போன போதிலும் இம்மாகாண நிலவரியாக கிடைக்கும் தொகையை அதிகப்படுத்த 80ல், 4-பகுதியான இனாம் கிராமங்களுக்கு சற்று வரி போடவாவது சர்க்கார் முன்வந்திருக்க வேண்டும். அதில் கிடைக்கும் பணத்தைக்கொண்டு கல்வி, சுகாதாரம், இவைகளுக்காக செலவிட முடியாவிட்டாலும் வரி குறைக்கவேண்டும்! அகவிலை குறைந்துவிட்டது! இந்த நிலங்களை நாங்கள் வைத்திருப்பதைவிட சர்க்காரே எடுத்துக்கொள்ளுங்கள்! என்றுமாய் மாலக்கண்ணீர் விடும் மிராசுதாரர்கள் கூக்குரலை நீக்கவாவது பிரயோஜனப்படுத்தலாம் இதிலும் சர்கார் இரங்கவில்லை. சர்க்கார் இனாம் தார் கிராமங்களைப்பரிமுதலும் செய்யவில்லை. புதுவரியும் போடவில்லை இந்த நிலையில் இனாம்தார்கள் சப்தம் அதிலும்தஞ்சாவூர் ஜில்லாவில் அதிக சப்தம் இருப்பானேன்?

இம்மாகாணத்தில் நான்காயிரம் இனாம் கிராமங்கள் இருக்கின்றன. இதில் 1100 இனாம் கிராமம் தஞ்சாவூர் ஜில்லாவில் இருக்கிறது. என்று சொன்னால் தஞ்சை ஜில்லாவில் சப்தம் பலபட காரணம் தெரியும் இவர்கள் சொல்லும் குறைதான் என்ன? இனாம்தாரர்களை பாதித்து அவர்கள் உரிமைகளைப்பரிமுதல் செய்வதாக இருக்கிறது, என்பதாகும். பிரபல கனவான் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர்வாளிலிருந்து அடுப்பங்கரை சமயல் ஐயர் வரையிலும், உத்தியோக காலம் கழிந்த பென்ஷன் சாஸ்திரியிலிருந்து தாதுசொல்லும் சாஸ்திரிகள் வரையும் எங்கும் ஒரேகட்டாக இனாம்தார் உரிமை போச்சு! உரிமைபோச்சு!! என்று கத்த ஆரம்பித்து விட்டார்கள். இக்கத்துதலில் அவர்கள் சொல்லும் வாதங்கள் என்ன தெரியுமா?

(1) யுத்தவீரர், மந்திரிகள், இவர்களுக்கு சன்மானமாக வழங்கப்பட்டது.

இன்றுஇனாம்தாரில் எத்தனையுத்த வீரர்கள் மந்திரிகள் இப்பரம்பரையில் வந்தவர்கள். இரண்டொருவர் இருக்கிறார் என்றால் அவரிடமும் இனாமாகவும், குறைந்த விலைக்கும் வாங்கிய ஐயர்மார்கள் மந்திரி—யுத்த வீரர்-இவர்களிடம் சர்வமான்யம் இருக்கிறதா? அல்லது மந்திரி பேரனும், யுத்த வீரனின் பேத்தியும் இன்று அனுபவிக்கிறார்களா?

2. பரலோக சாதகார்த்தமாக பிராமணர்களுக்கும், பள்ளிவாசல்களுக்கும் தர்கா, கல்லரைஇவைகளுக்கு விடப்பட்டது என்றால் இத்தர்மங்களைச் செய்த அக்கால மன்னுதி மன்னர்களை ஏமாற்றி ஏய்த்துப் பிடுங்கிய பாதகர்கள் தானே இவர்கள் பரலோக சாதகார்த்தமாக தர்மம் செய்த தஞ்சை மன்னன் சந்ததி இன்று என்ன நிலையில் இருக்கிறது. அங்கு மூளைத்தளருக்கை பிடுங்க ஆள் இல்லையே? மகுதியும, ஆலயங்களும், மடாதிபதிகளும் மன்னன் ராஜ்யத்தைக்காப்பாற்ற வேண்டாம். அவன் குடும்பத்தாரையாவது க்ஷேமமாக வாழச்செய்தனவா? இல்லையே.

"பரலோகசாதகார்த்தமாக" 1100 கிராமங்களைப் பெற்றவர்கள் இன்று பேங் டைரெக்டர்களாகவும், சட்டமெம்பர்களாகவும், பிரபு திலகங்களாகவும் வாழ்கிறார்கள். இவர்கள் ஆகாய விமானம் பறக்கிறது. ஹைகோர்ட்டுக்குப் போட்டியிட்டு அந்த அளவில் கட்டப்படும் கட்டடங்கள், மாடமாளிகைகள் சென்னையில் பிரகாசிக்கிறது. இவர்களின் பெண்கள் பட்டதாரிகளாகவும், சுபிக்ஷமாகவும், வயிர பிம்பங்களாய் சக்கிரவர்த்தியை பேட்டிகண்டவர்களாகவும், சக்கிரவர்த்தி பிரதிநிதியை விருந்துக்கு அழைத்துச் செல்லும் மகாரசிகளாய் விளங்குகிறார்கள்.

ஆனல் பரலோக சாதகார்த்தமாக இனாம் கொடுத்த மன்னர்கள் மடிந்து மண்ணாகி,மண்ணிற்குள் புகுந்து மறைந்து விட்டார்களே! எஞ்சிய சந்ததியார்கள் இன்று ஜட்கா காரர்களாகவும், மில்டேரி ஹோட்டல்காரர்களாகவும், பங்கா இழுக்கிறவர்களாகவும்தானே இருக்கிறார்கள். இவர்கள் பெண்கள் கூலி வேலை செய்கிறவர்களாகவும், மானமழிந்து வயிறு வளர்க்க முற்பட்டவர்களாகவும் இருப்பது எவருக்குத் தெரியாது. இதற்கு பெயர் தானா? பரலோக சாதனம் வழங்கினது!

(3) சட்டசபையில் இனாம்தார் பிரதிநிதிகள் பெரும்பாலும் இல்லாததால்தான் இது நிறைவேறியது.

நூற்றுக்கு மூன்று விகிதம் உள்ளவர்களுக்கு 140 ஸ்தானம் போதாது? ஆயிரம் கிராமத்துக்கு இருவர்வீதம் கணக்குப் போட்டாலும் 400 ஆயிரத்துக்கு எட்டுப்பேர்தான் வேண்டும். பதினோர் பேர் பிராமணர்கள் இருப்பது போதாதா? ஆம் என்றால் சற்றேறக்குறைய 4, 5 லட்சம் இனாம் குடிகளுக்கு எத்தனை ஸ்தானங்கள் கிடைக்கவேண்டும். ஸ்தானம் வேண்டாம். இவர்களில் ஓட்டுரிமை பெற்றவர்கள்கூட சிலர்தானே இருக்கிறார்கள். இவர்களுக்கும் பிரதிநிதித்வம் வேண்டாமா?

இந்த மாகாணத்து அதிகாரம்,பிராமணரல்லாதார் பெயரால் டெயருக்கு ஆளப்பட்ட போதிலும்; இந்த மாகாணத்து சர்க்கார் இயந்திரம் ஒன்றை செய்து அது பிராமணோத்மர்களுக்கும் பிரபுக்களுக்கும் விரோதம் என்று பட்டால் அக்கடுகை மலையாக்கி ஆகாய மளாவ கூப்பாடு போடுவதும், மேன்மை தங்கிய வைசிராயை, கவர்னரை பேட்டி காண்பதும், மிராசுதார்களுக்கு ஆபத்தென்பதும், மிராசுதார்களுக்கு ஆபத்தென்பதும் இவைகளுக்குப் பல பத்திரிகைகள் ஆமாம் சாமி போட்டு தாளம் தட்டுவதும் என்பது மிக சர்வசாதாரணமாகி விட்டது. இந்த நிலையில் இனாம்தார் குடிகளுக்குக் கிடைத்த சிறு நன்மை போலுள்ளதை சர்கார் பார்ப்பனப் பிரசாரத்துக்குப் பயந்து பணக்கார மிரட்டலுக்கு அஞ்சி விட்டுக்கொடுத்து விடுவார்களேயானல் உண்மையில் மிக பரிதாபகரமானதாகவே அது முடியுமென்று பயப்படுகிறோம்.

அதுவும் அடுத்தடுத்த மாதத்தில் மாக்ஷிமை தங்கிய மன்னர் பிரான் உத்திரவின்படி ஓர் பிராமணரல்லாத கனவான் ஓர் மாகாண கவர்னராக வருகிற சமயத்தில் முன் சொன்ன இனாம்தார்கள்—பரலோக சாதகத்துக்கு வழிகாட்டியாக இருப்பவர்கள். இவர்களின் கை பிள்ளைகள் இவர்கள். சர்க்காரை மிரட்டி தங்கள் வலுவை காட்டி இச்சட்டத்தை ஒழிக்க முயலக்கூடும். அல்லது இதற்குமுன் பல தடவைகளில் நடந்த சம்பவங்கள் நிகழக்கூடும்.

சர்க்கார் மீது சுமத்தும் பழிச்சொல், நீங்கவேண்டுமானல், மிராசுதார்கள் நிம்மதியாக கிஸ்தியை கொடுத்துவர வேண்டுமானல்—நிர்வாக மெம்பர் பதவிகளில ஒன்று பிராமணருக்குக்கொடுக்கப்படவேண்

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

புரட்சி

ஈரோடு 1934- பிப்ரவரி மீ 25-உ

யாருக்கு? பாதுகாப்பு

:O:

மன்னர்களுக்கா? பட்டினிகளுக்கா?

நமது இந்திய சட்டசபையான எங் பார்லிமெண்டில் மாமூல் கூட்டங்கள் நடக்கும். இக் கூட்ட காலங்களில் பல தீர்மானங்களைப்பற்றி விவாதிக்கப்படும், சில தீர்மானம் கொண்டுவரப்பட அனுமதி கோரப்படும். பல தீர்மானங்கள் நீண்ட நேரம் பேசி ஓட் எடுக்க நேரமில்லை, என்ற காரணம் காட்டி விட்டுவிடப்படுவதுமுண்டு. இதில் சில சமயங்களில் தப்பித் தவறி பொது மக்களுக்கு நல்ல பலனை விளைவிக்கக்கூடிய தீர்மானங்களைப் பற்றியும் பேசப் படுவதுண்டு. இவைகளில் இரண்டொன்று அதன் ஆதி உருவைவிடப் பல மற்றதாகச் செய்யப்பட்டு, பெயருக்கு நன்மையானதென்றும் கவனிக்கப்படுகிறதென்றும்சொல்லுகிற நிலைமையிலாவது நிறைவேற்றிவைக்கப்படும். ஆனால் இதுவரையில் மில் தொழிலுக்குப் பாதுகாப்பு, "கமிட்டி மெம்பர்களுக்குச்செலவுக்குப் பணம்" ஜமீன்தார்கள் உரிமைகளுக்கு வேலி, ராஜாக்களின் அந்தஸ்துக்குப் பாதுகாப்பு, என்பது போன்றவைகளுக்கு வரும் தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டதாகவோ, நீண்டகாலம் வீண் காலதாமதம் செய்யப்பட்டதாகவோ யாரும் கூறமுடியாது.

இந்தமுறையிலேதான் இப்பொழுது நடைபெறும் கூட்டத்திலும் முக்கியமான பலதீர்மானங்கள் பிரேரேபணை செய்ய வேண்டியவர்கள் ஆசனத்தில் இல்லாததால் ஒத்திவைக்கப்பட்டது. இவ் வாபத்துகளில் தவறி ஓர் தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அது வேலையில்லாதவர்களுக்குப் பரிகாரம் தேடப் படுதல் என்பதேயாகும். இதற்கடுத்தாற்போல் இந்திய மன்னர்களுக்குப் பாதுகாப்பளிக்க ஓர் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற வேண்டிய நிலையில் இருக்கிறது. இவ்விரண்டு தீர்மானங்களும் முறையில் ஒன்றேயாயினும் போக்கிலும், லட்சியத்திலும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமுடையதாகும். இவ்விரு தீர்மானங்களும் விவாதத்திற்கு வந்தகாலத்தில் மன்னர் பாதுகாப்பு மசோதாவைப்பற்றி விவாதம் நடந்தபோது காட்டப்பட்ட உற்சாகமும், ஆர்பாட்டமும் வேலையற்றவர்களுக்குப் பாதுகாப்பளிக்க விவாதம் நடந்தகாலத்தில் காட்டப்படவில்லை. பெயருக்கு ஓர் சட்டமென்கிற முறையிலேயே வேலையற்றவர்கள் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இந்திய மன்னர்களுக்குப் பாதுகாப்பளிக்கப்பட வேண்டுமென்று இன்ற பத்து வருடங்களுக்குமுன்பு கூறப்பட்டது. அதே காலத்தில்தான் இந் நாட்டில் வேலையில்லாமல் மடியும் தொழிலாளிகளுக்குப் பாதுகாப்பளிக்கப் பட வேண்டுமென்பதற்கு ஓர் கமிட்டியும் நியமித்து மாகாணவாரியாக இதற்கு மார்க்கம் கண்டுபிடிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மாகாணச் சர்க்கார்களோ மத்திய சர்க்காரிடம் பழிபோட்டார்கள். கடைசியாக தீர்மானம் மூலியமாக வரும்போது அதன் பெயருக்கும் அத்தீர்மானத்தின் வார்த்தைகளுக்கும் வெகு தாரதம்மியம் உண்டாகி விட்டது. ஆனால் இந்திய மன்னர்களுக்கு பாதுகாப்பு அல்லது இந்தியமன்னர்களின் அந்தஸ்த்துக்குப்பாதுகாப்பு, பரிபூரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது. இந்திய மன்னர்கள் எத்தகையவர்கள் என்பதுபற்றியும் அவர்களுக்கு அவர்கள் அந்தஸ்துக்கு பாதுகாப்பு என்றதின் பேரால் இந்திய சமஸ்தானக்குடிகள் இன்னம் எவ்வளவுகாலத்துக்கு கொடுமையாக நடத்தப்படப் போகிறார்கள் என்பதுபற்றியும் பன்முறை எடுத்துக் கூறியிருக்கிறோம். இப்பாதுகாப்பை காட்டி இந்திய மன்னர்கள் பரிபூரணமாக தங்களை நம்பும்படி செய்வதற்காகவே, இந்திய சர்க்கார் இதைச்செய்தாலும், செய்திருக்கலாம்.

சமஷ்டி அரசியல் முறையை காந்தி ஆதரித்த போதிலும் அவர் சிஷ்யர்கள் ஆதரித்தபோதிலும் இந்திய சமஸ்தானத்தில் உள்ள 8-கோடி மக்களும் அப்படியே கண்டிக்கிறார்கள் என்பது சர்க்காருக்கும் மன்னர்களுக்கும் நன்கு தெரியாததல்ல. வகைப் போன்றே பிரிட்டீஷ் இந்தியாவில் உள்ள பொதுமக்கள், ராஜாக்களின் கூட்டுறவை கொண்டதாக உள்ள சீர்திருத்தத்தை வெறுக்கிறார்கள் என்றும், இங்குள்ள குட்டிப்பணக்காரர்கள் ஜமீன்தார்கள் இவர்களின் கொடுமையிலிருந்து தப்பமுடியாது தவிக்கிறார்கள் என்றும், எந்த ஸ்தாபனங்களும் அவர்களாலேயே பெரிதும் பணச்செல்வாக்கால் கைப்பற்றப் படுகிறது என்றும் ஓலமிடுகிறார்களென்பதும், தெரியாததல்ல. இச்சிறு பிரபுக்களின் எதேச்சாதிகாரமே இப்படி இருக்கும்போது, இவர்கள் அண்ணனை பெரிய பணக்காரர்கள் மகாராஜாக்கள் இவர்கள் கொடுமையில் சிக்காமே சம்மதிப்பது மகத்தான ஆபத்தென்பதை உணர்ந்திருப்பதும் சமஷ்டி முறையை மறுப்பதும் சர்க்கார் உணராததல்ல

இந்திய சர்க்கார், மன்னர்கள் தங்களைப்பரிபூரணமாக நம்பியிருக்கச் செய்ய இச்சட்டம் அவசியமென்று கருதிகொண்டு வந்திருக்கலாம். இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் பிரிட்டீஷ் இந்திய பிரஜைகளின் உரிமைக்கும், சமஸ்தான இந்திய பிரஜைகளின் உரிமைக்கும், தடை ஏற்படுமேயாயினும் ஒரு முறையில் இது நிறைவேற்றப்படுவதால் கொடுமை முதிர்ந்து பொங்கிப்பெரிதாகுமென்றும், அதனால் பரிகாரம கிடைக்கப்புதுநிலமை ஏற்படுமென்றுங்கூட சிலர் நம்பலாம். எப்படியாயினும் இதைப்பற்றி நமக்குக்கவலையில்லை. ஆனால் இந்திய சர்க்காரும், சட்டசபை மெம்பர்களும் ஏழைப்பட்டவர்கள் பாதுகாப்பில்ஊக்கம்காட்டாது போனதைக்கண்டுதான் நாம் வருந்தவேண்டியவர்களாக இருக்கிறோம்.

"வேலையில்லாத கஷ்டத்திலிருந்தும், சம்பளக்குறைவிலிருந்தும் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு அநுபவ சாத்தியமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்"

என்று ஓர் தீர்மானம் தோழர். ஜோஷியால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதிலிருந்தே இந்நாட்டிலுள்ள ஏழை எளியவர்கள் பரிபூரண காப்பு பெற்றுவிடுவார்கள் என்று நாம் நம்பவில்லை. ஆனால் இவ்விரு தீர்மானங்களும் சட்டசபையில் விவாதிக்கப்பட்ட நடைமுறையிலிருந்து இந்நாட்டுப் பொதுமக்கள் சட்டசபைக்கு பார் யார் எதிர்காலத்தில் சென்றால் பயனுண்டு என்பதை உணரவும், வாசாகோசரமாகப் பேசிவிட்டு, தீர்மானங்களின் உயிர் வாங்கப்பட்டு செத்ததிலேயாவது அத்தீர்மானத்தை நிறைவேற்றி ஓர் விளம்பரம் பெறப் பிரியராக எண்ணமுடையவர்கள் செல்வதால் யாருக்காவது பலனுண்டா என்பதையும் உணர இடமேற்படுமென்று நம்புகிறோம்.

இதனால் சட்டசபைக்குதான் மதிப்புண்டா? அல்லது அவர்களைத்தேர்ந்தெடுக்க அனுப்பியமக்களுக்குத்தான் பலனுண்டா? அல்லது இவர்கள் யாவரும் வாழும் நாட்டுக்காவது கௌரவம் உண்டா என்பதை வாசகர்கள் யோசித்துப் பார்க்கவேண்டுமென்பதற்காகவே இதை விளக்கிக் கூற விரும்புகிறோம்.

இந் நாட்டில் எதிர்கால சுயராஜ்ய ஆட்சிக்குப் பூர்வாங்கமானது இந்திய சட்டசபையென்று சொல்லப்படுகிறது. அதாவது எங் பார்லிமெண்டு என்கிறார்கள். இந்த எங் பார்லிமெண்டில் பத்து வருடகாலமாகப் பட்டினி கிடந்து மாள்பவர்களுக்குப் பரிகாரம் கிடைக்கவேண்டுமென்று தொடர்ச்சியாய்க் கத்தப்பட்டு பத்தாவது வருடத்தில் பதில் கிடைத்தது என்ன?

அனுபவ சாத்தியமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று பதில் கிட்டியிருக்கிறது.

ஆனால் எங் பார்லிமெண்டின் தலைமை இடமான, தாய்பீடமான இங்கிலாந்து பார்லிமெண்டிலோ?

பட்டினிகிடக்கிறார்கள்- மடிகிறார்கள் என்ற சப்தம் உண்டாகியிருக்குமேயானால் இதற்குப் பரிகாரம் பத்து நிமிடத்தில் கிடைக்கிறதேயன்றி பத்து வருடங் கழித்து சாத்தியமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வதாககூறியிருக்க முடியுமா?

இந்தியப் பார்லிமெண்டான இந்தியா சட்டசபையில் தோழர் ராமகிருஷ்ணன் [ரெட்டியார்] இந்தியாவில் 400-லக்ஷம்பேருக்கு ஒருவேளைச் சாப்பாட்டுக்குத் தகராறாக இருக்கிறது என்று கூறியபோது அது அங்குள்ளவர்களில் எவரையும் திடுக்கிடச் செய்யவில்லை. உலகில் எந்த நாட்டிலும் வேலையற்றவர்கள் தொகை பத்து லட்சத்துக்குமேல இல்லை, இந்த நானூறு லக்ஷம் பேர் பட்டினி ஜாபிதாவாக இருக்கவேண்டுமா என்று கேட்கப்பட்டபோதுகூட எந்த மெம்ப

நாம் [illegible] வில்லை. அவர்கள் பிறந்து வளர்ந்த நாட்டின் மக்கள். அவர்கள் யார் பேரால் பிரதிநிதித்துவம் பெற்று சட்டசபையை அலங்கரித்து உட்கார்ந்துகொண்டிருக்கிறார்களோ அவர்களைப்பற்றி ஒரு நிமிடம்கூட சிந்திக்க அவர்களுக்கு அவகாசமில்லை. இதற்குக்காரணம் என்ன?

பட்டினி என்பதை இன்னதென்று தெரியாதவர்கள், பட்டினியைப்பற்றி பேசும்போது பசி எழவில்லை என்று கூறுவது ஆச்சரியமல்ல. இங்கிலாந்தில் உள்ள வேலையற்றவர்களுக்கு உணவளிக்கச் செலவிடப்படும் தொகை இந்நாட்டில் தினமும் வரியின் பேரால் இங்கு வசூலிக்கப்படுகிறது. ஆனால் இந்நாட்டின் ஜனசங்கையில் 8ல் ஒரு பகுதியினர் வேலையற்று, உணவற்று, இடமற்றுத் தவிக்கிறார்கள் என்றால் இதற்கு "அநுபவ சாத்தியமான" என்று பதில் கூறப்படுகிறது. நமது சட்டசபை தோழர்கள் இந்நாட்டில் உள்ள 260 மன்னர்களின் மதிப்பை, கௌரவத்தை காப்பாற்றுவதில் செலவிடப்படும் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் 4-கோடி மக்கள்பட்டினியால் மடிகிறார்கள் என்பதில் காட்டமுடியாமற் போனது, உண்மையில் மிக்கக் கேடானதாகவே தோன்றுகிறது.

இச்சட்டசபையில் பட்டினி கிடக்கும் ஜாதியில் 4 பேர் பிரதிநிதியாக இருந்திருப்பார்களேயானால் "அநுபவ சாத்தியமான" என்று சொல்லியிருக்க முடியுமா?

இந்நாட்டில் வேலையற்றவர்கள் என்பவர்கள் கோடிக்கணக்கானவர்கள் என்று சட்டசபைமெம்பர்களே கூறியிருக்கிறார்கள். இவர்களில் நூற்றுக்கு 72 பேர்கள் விவசாயத் தொழிலாளர்கள் என்று கூறப்படுகிறது. இவர்களை மாகாண விகிதம் கணக்கெடுத்து அவர்களின் பட்டினிக்குப் பரிகாரம் தேட வேண்டிய பொறுப்பு இந்திய சட்டசபையினுடையதாகும். ஆனால் இந்தியநாட்டில் விவசாயிகளைப் பற்றி கவனிப்பவர்கள் எத்தனை பேர்? இவர்களின் அன்றாடக் கஞ்சிக்கு வழியென்ன? என்பதில் கவனம் செலுத்த சட்டசபை மெம்பர்களும், சட்டசபையும் முற்படாவிட்டாலும், எதிர்காலத்தில் வேலை [illegible] வழிவிட்டதற்கு நாம் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. ஏனெனில் இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கம்சேர்ப்பதோ பட்டினி கிடப்பவர்களுக்கு பரிகாரம் [illegible]தோ அல்லது பட்டினி கிடக்கிறோமென்று சொல்வதோ சட்டவிரோதமானதாகுமென்று அஞ்சுகிறார்கள். இப்பொழுது இங்கே பம்பாய் உத்தியோக மெம்பர் மிஸ்டர் செ. பி. கிளைடன் அவர்கள் "விவசாயத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களுக்கு சங்கமோ, கட்டுப்பாடோ இல்லை" என்றும் சட்டசபையிலும் அவர்களுக்கென்று பிரதிநிதித்வம் கிடையாதென்றும், இவைகள் உண்டாக முயலவேண்டுமென்றும், கூறியிருக்கிறார். எங்கும் விவசாய தொழிலாள சங்கங்களை ஏற்படுத்தி வேலையற்றவர்களுக்கு பரிகாரம் தேடுவதில் சகலரும் முயலுதல் இன்றியமையாததனவாகும்.

அநேகர்போல் பட்டினிகிடப்பவர்களைப் பற்றி எங்கும் எடுத்துச் சொல்லலும், அதற்கு பரிகாரம் தேடுதலும் அதாவும், சாத்தியமான பரிகாரம்தேடுவதிலும், சர்க்காருக்கு கோபமிருக்குமோ என்ற பயத்தில் பலர் இன்று இங்கிருக்கிறார்கள். அதைப்போலவே பட்டினி கிடப்பவர்களும் தாங்கள் எலும்பும் தோலுமாய் ஆகிவருவதற்குப் பட்டினியே காரணம் என்றும், இப்பட்டினியை எடுத்துச் சொல்லி அதற்கு அவர்கள் சாத்தியமான பரிகாரம் தேடிக்கொள்வது தப்பல்ல என்றும், பட்டினிகிடப்பவர்கள் உணரவும் இடமேற்பட்டுவிட்டது. இனிமேலாவது பட்டினி கிடப்போர் பரிகாரமடைய முயல இச் சட்டம் இடம் கொடுத்திருந்தால் நாம் இதைப் பாராட்டுகிறோம்.

சமஸ்தானப் பாதுகாப்புமசோதா சர்க்காராலேயே கொண்டுவரப்பட்டதாகும். இந்திய மன்னர்களில் ஹத்துமீறிப் போகின்றவர்களை அவ்வப்போது சர்க்கார் தலையிட்டு, மன்னர்களுக்கு ஒப்புக் கொடுத்துவிட்டு ஸ்பெஷல் உத்தியோகஸ்தர்கள்மூலம் பரிபாலித்துவருவதை நாம் மறந்துவிடவில்லை. சில எதேச்சாதிகாரமன்னர்கள் சர்க்காரின் நல்லெண்ணத்தில் சந்தேகம் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கும், அச் சந்தேகத்தை நிவர்த்திக்கவே, சர்க்காரார் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வருகிறார்கள் என்றும்கூட நாம் நினைக்க ஏதுவிருக்கிறதேயாயினும் இவ்விருவர்கள் நட்புக்காக சமஸ்தானப் பிரஜைகளின் மூலாதாரமான உரிமைகளைக் கட்டுப்படுத்திக்கூட தாங்கள் மன்னர்களை ஆதரிக்கும் கருத்தை நிறைவேற்ற சர்க்கார் முயலுகிறார்கள் என்றும், சந்தேகப்படாமல் இருக்க முடியாது. இவ்வளவும் செய்வது நமக்குத் தீதேயாயினும் நாம் கண்டிக்கும் சமஷ்டியல் அரசியல் முறைக்குப் பாதுகாப்பேயாயினும் சட்டமெம்பர் "மன்னர்கள் ஹத்துமீறிப் போனால் சர்வாதிகாரபீடம் உடனே தலையிடத் தயங்காது" என்று கூறியிருக்கிறார். இதற்குமுன்பு உதயபுரி, இந்தூர், நாபா, ஆள்வார், தேவாஷ், காஷ்மீரம், ராம்பூர் முதலிய பல சமஸ்தான விஷயங்களில் இதுவரையில் இவ்விதம் நடந்துவந்திருக்கிறார்களேயானாலும் நாம் உறுதி மொழியைப் பற்றி எதுவும்கூற விரும்பவில்லை. ஆனால் பரிதாபப்படுகிறோம்.

பிரபல பேரறிஞர் மிஸ்டர் பிரடரிக் அதர்ட்டன்:—'இந்தியாவிலுள்ள முன்னூற்று சொச்சம் சிற்றரசர்களுக்கும், ஜமீன்தாரர்களுக்கும் இறுதிகாலம் கிட்டிவிட்டதென்று நன்கு உணர்ந்து கொண்டார்கள். இங்கிலாந்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன் எதேச்சாதிகாரம் செலுத்திய பிரபுக்கள் எக்கதிக்கு இலக்கானார்களோ அக்கதிக்கே இவர்களும் காலக்கிரமத்தில் ஆளாகி விடுவார்கள் என்பது உறுதி. இன்னும் சில வருடங்களில் இவர்களுடைய காட்டுப் பங்களாக்களில் தனியே சுககாலம் கழிப்பதை காணலாம். முன்னூற்றுச் சொச்சம் பேர்களில் இருநூற்றுமுப்பது பேர்கள் "மாட்சிமை தங்கிய மகாராஜாக்கள்". இவர்கள் தங்களை நோக்கி விரைந்து வருமவெள்ளத்தினின்று எப்படி தப்பிப்பிழைப்பது என்று சிந்தைகலங்கி இருக்கிறார்கள்" என்று எழுதுகிறார்.

மன்னர் பாதுகாப்பு சட்டமோ கேவலம் 260 தனி நபர்களின் நன்மையை பொறுத்தது. வேலையற்றவர்கள் பாதுகாப்போ இந்நாட்டில் கணக்கில் கிட்டிய 4-கோடிபேர்களையும், கிட்டாத பலகோடி மக்களின் நன்மையை, உரிமையை இவைகளைப்பற்றி மட்டுமல்ல கோடிக்கணக்கான மக்களின் பட்டினி[illegible]களுக்கு பரிகாரம்தேடுவதையும்பொறுத்ததாகும். ஆதலால் அடுத்தாற்போல் வரும் கூட்டத்தில் இந்நாட்டு ஏழைத் தொழிலாளர் பாதுகாப்பைப்பற்றி சற்று கவனம் செலுத்தி மன்னர்களைமட்டும் சர்க்காரார் காப்பாற்றவில்லை, நமக்கும் பாதுகாப்பளிக்க சர்க்காரார் தவறுவதில்லை என்ற நம்பிக்கையை பொது மக்களுக்கு உண்டாக்குமாறு சர்க்காரும், இந்திய சட்டசபை மெம்பர்களும் முயற்சிக்கக் கோருகிறோம்.

ஈ. வெ. ராமசாமி

இராஜநிந்தனைக் குற்றம் செய்ததாக கோவை ஜில்லா கலெக்டரால் ஆறுமாத தண்டனை விதிக்கப்பட்டு கோவை சென்ட்ரல் சிறையிலிருந்து வந்த சுயமரியாதை இயக்க தலைவர். தோழர். ஈ. வெ. இராமசாமி அவர்கள் 21-2-34-ந் தேதி இரவு கோவையிலிருந்து சென்னைமார்க்கமாக இராஜமகேந்திரபுரத்திற்கு கொண்டு போகப்பட்டார்.

பகுத்தறிவு.

சுயமரியாதை தினசரி பத்திரிகை.

ஈரோட்டிலிருந்து வெளிவரும்.

தோழர்களே!

தமிழ்நாடெங்குமுள்ள நமது சங்கங்களின் வேலைகளையும், நமது இயக்கப் பிரசாரத்தையும் இன்னும் பலப்படுத்துவதற்காக தமிழ் காலணா தினசரி பத்திரிகை மேற்கண்ட பெயரால் ஆரம்பிக்க முடிவுசெய்திருக்கிறோம். மார்ச்சு மாதத்தில் ஈரோட்டிலிருந்தே இது வெளிவரும். தமிழ் நாடெங்கும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. தாராளமான கமிஷன் உண்டு. குறைந்தது நூறு காப்பிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மற்றும் டி பத்திரிகை சம்பந்தமாக விபரமறிய விரும்புகிறவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
"பகுத்தறிவு" காரியாலயம்
ஈரோடு.

மாயவரம்.

தோழர் காந்தியார் மாயவரத்திற்கு 16-2-34-ந் தேதி வருகிறார் என்பதை யறிந்த இவ்வூர் சுயமரியாதைச் சங்கத்தார் காந்தியாரை பகிஷ்கரிக்க வேண்டியதைப்பற்றி பல துண்டுப்பிரசுரங்களும், பல பொதுக் கூட்டங்களும் கூட்டி ஜனங்களுக்கு காந்தியதத்தின் தத்துவத்தை எடுத்துரைத்திருந்தார்கள்.

16-2-34-ந் தேதி காந்தியார் இவ்வூர் வந்ததும சுயமரியாதைக் காரர்கள் நகரின் பல இடங்களில் கருப்புக் கொடிகள் கட்டி அவரின் வருகையை பகிஷ்கரித்தார்கள்.

சுயமரியாதை இயக்கத்தின்

முன்னணி வேலை.

(மதுரை ஜில்லா சுயமரியாதை சங்கக்காரியதரிசி
தோழர் எ. எஸ். அருணாசலம் எழுதுவது)

சுயமரியாதை இயக்கமாகிய அறிவியக்கம் ஏழை மக்களின் சமதர்ம இயக்கம், தென்னிந்தியாவில் சுமார் 10 ஆண்டுகளாக நமது மதிப்பு வாய்ந்த தலைவர் தோழர் ராமசாமி அவர்களின் இடையறாத உழைப்பின் பயனாக மக்களிடையே உலாவிவருகிற தென்பதை அரசியல் உலகில் ஈடுபட்டுழைத்த மக்கள் அறிவார்கள். நமது இயக்கத்தலைவரின் உண்மை உழைப்பை உணர்ந்த அரசாங்கத்தாரும், தங்களது விருந்தினராக ஏற்றுக் கொண்டு நமது தோழருக்கு 6 மாத காலம் இளைப்பாற இடங்கொடுத்து நம்மிடையிலிருந்து நமது தலைவரைப் பிரித்து வைத்திருக்கிறார்கள். அது சரியென்றோ, தப்பென்றோ நான் ஆராய்ச்சி செய்யப் போவதில்லை. நீங்களும் விரும்பமாட்டீர்கள். ஆனால் இனி நமது இயக்கம் செய்யவேண்டிய வேலை என்ன? அதற்காக இயக்கத் தோழர்களென்பவர்கள் என்ன செய்யவேண்டும்? என்பதை நடுநிலைமையிலிருந்து கூற விரும்புகிறேன். யாரையும் தூஷிக்கவோ, அல்லது பூஷிக்கவோ இக்கட்டுரை எழுதவில்லை. உண்மையான சுயமரியாதைக்காரன் செய்ய வேண்டிய வேலை இப்பொழுது தான் ஆரம்பிக்கப்போகிறது. எனவே ஒவ்வொரு தோழரும் அவரவர் செய்ய வேண்டிய கடமையைச்செய்ய வேண்டிய சந்தர்ப்பத்தை உபயோகியுங்கள் என்று சொல்லவே விரும்புகிறேன். நம்முடைய இயக்கம் சென்ற 10 ஆண்டுகளாக தலைவர் இராமசாமி அவர்களுடைய உணர்ச்சியுள்ள பிரசங்கமென்னும் ஏரினாலும், பரப்பினாலும் தென்னிந்திய வயல்களில் உழுது பரம்படிக்கப்பட்டு சமதர்மமென்ற விதையையும் விதைக்கப் பட்டாகி விட்டது. காடு முரடான நிலங்களெல்லாம் அதாவது, மதம், தேசியம், கடவுள், கதர் போன்ற கொள்கைகளெல்லாம் வெகு தீவிரமாக மறுக்கப்பட்டு, கண்டிக்கப்பட்டு, நமது இயக்க கொள்கைகளாகிய சமதர்ம விதையானது விதைக்கப்பட்டாய் விட்டது. இனி அதற்குத் தகுந்த தண்ணீர் பாய்ச்சிகளை எடுத்து, பாய்ச்சிய தண்ணீரை அடுத்த வயல்களுக்குச்சென்று விடாமல் வயலிலேயே தங்குவதற்கான வழிகளைச் செய்து பயிரைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு விவசாயியாகிய குடியானவனைச்சேர்ந்தது. அதைச் செய்யாவிடில் களை முறி நெல்விதைக்கக் கூடவே புல்லும், கோரையும் வளர்ந்து ஒன்றுமில்லாத நிலை ஏற்பட்டு விடுமென்பதை உணருங்கள். நம்முடைய இயக்கம் ஏழைகள் இயக்கம், அதிகார வர்க்கத்தின் அடக்கு முறைக்கு ஆளாகும் இயக்கம். ஏகாதிபத்யத்தின் எதிர்ப்பையும் ஏற்று, நமது மக்களுக்கு நமது இயக்கம் கட்டுப்பாட்டோடு வேண்டியது இச்சந்தர்ப்பத்தில் மிக மிக அவசியமென்பதை வலியுறுத்திக் கூறுகிறேன். ஏதோ ஒன்றிரண்டு சுயமரியாதைத் தோழர்களின் தீவிர உணர்ச்சியுள்ள பிரசங்கங்களானது மக்களை பகுத்தறிவற்ற தூக்கத்திலிருப்பவர்களை விழிக்கத்தான் செய்யும்.

தூங்கி எழுந்தவனுக்கு சோறு போட்டு விடாது, அதற்கு அவனவன் தான் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். தோழர் ராமசாமி அவர்களே எல்லாம் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பதும் வீண். எடுத்ததற்கெல்லாம் அவர்மீது சுமத்தி அவர் செய்யட்டுமென்று சொல்லிக் கொண்டிருப்பதே ஒரு சில தோழர்களின் வழக்கமாக ஆகிவிட்டது. ஒரு சிலர் கொள்கையைச்சொல்லமுடியும். ஒரு சிலர் அதைச்செயலில் கொண்டு வரக்கூடிய திட்டங்களை போடமுடியும். ஒரு சிலர் போட்ட திட்டத்தின் படி நடக்க முடியும். ஒரு சிலர் குறை சொல்லிக் கொண்டேயிருக்க முடியும். ஒரு சிலர் தொண்டர்களென்பவர்களைத் திட்டிக்கொண்டிருக்க முடியும். எல்லாம் ஒருவரால் ஆக முடியாது. எல்லாம் ஒருவரால் முடியக்கூடிய காரியமாக இந்த 10 ஆண்டுகளாக நமது இயக்கத்தை நடத்தி வந்த நிலைமையை அறிந்தவர்கள் இல்லை யென்றுகண்டு கொண்டார்கள். நம்முடைய பகுத்தறிவு இயக்கத்தைச் சேர்ந்த தோழர்களென்பவர்களுக்கே பகுத்தறிவுகலம் பூஜ்யமாக இருக்குமானால் வேறு என்ன செய்வதென்பதே சொல்ல முடியவில்லை. கொள்கைகளை என்பதற்கும், அதை மக்களிடத்தில் சொல்லுகிற முறைக்கும் உள்ள வித்யாசங்கள், வேலைத் திட்டங்களுக்கும், எவ்வளவோ இருக்கிறது. அது சாதாரணமாக இயக்கத்தின் சார்பாக வேலை செய்யக்கூடிய தொண்டர்களுக்கும், இயக்கத்தின் ஸ்தாபகருக்கும் தெரியும் சாதாரண நிலைமையிலுள்ள தோழர்களுக்கு தெரிவதில்லை. உதாரணமாக நமது 3வது மாகாண மகாநாடு நடந்து 3 வருஷமாகியும், அதின் பின் நமது கட்சியிலுள்ள அபிப்பிராய பேதங்கள், கொள்கை மாறுதல்கள், தலைவர் சிறைவாசம் இவைகளெல்லாம் ஏற்பட்டிருந்தும், நமது மகாண மகாநாட்டை நடத்த நமக்குப்போதிய சக்தியில்லையென்றால் நமது இயக்கம் கட்டுப்பாட்டோடு வேலை செய்யவில்லையென்று தானே தெரிய வருகின்றது? கூட்டு வாழ்க்கை வேண்டுமென்கிறோம் கூட்டுறவுள்ள ஸ்தாபனம் நம்மிடை இல்லை. இன்று தலைவர் சிறைக்குச் செல்வதில் நமக்கு விருப்போ, வெறுப்போ இல்லாமலிருந்தாலும் எதற்காகச் சென்றாரோ அதற்காக நம்முடைய வேலைகளை நாம் பின்பற்றி செய்யவில்லை. சிவகங்கை மகாநாட்டில் தஞ்சை ஜில்லாவில் மாகாண மகாநாட்டை நடத்துவதாக தோழர் நடராஜன் ஒத்துக்கொண்டாரென்றால் உடனே ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள தோழர்கள் தங்கள் ஜில்லாவில் பணம் சேர்ந்து மாகாண மகாநாட்டை நடத்தும்படி நடராஜன் அவர்களுக்கு போதிய பலத்தை அளிக்கவில்லை. எனவே நமக்குதற்காலம் வேண்டியது கட்டுப்பாட்டோடு சட்ட திட்டங்களடங்கிய சங்க ஸ்தாபனம் வேண்டும். 5 பேர் இருந்தாலும் சரி, 5 லட்சம் இருந்தாலும் சரி நபரைப் பற்றிக் கவலையில்லை. தோழர் இராமசாமி அவர்கள் மேல் நாட்டிலிருந்து வந்தவுடன் விண்ணப்பம் விடுத்ததும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஸ்தாபனம் வைத்துக்கொண்டு இருப்பதாக தலைவருக்குத் தெரிவித்து விட்டார்கள். சில தோழர்கள் சுயமரியாதை என்ற வார்த்தைக்குப் பயந்து பகுத்தறிவு சங்கம், உண்மை நாடுவோர் சங்கம் என்றெல்லாம் கொடுத்திருந்தார்கள். இது தானா கட்டுப்பாடுள்ள திட்டம். பெயருக்கு பயந்தவர்கள் வேறுஎன்ன செய்யப்போகிறார்களென்பதே தெரியவில்லை. தோழர் சிங்காரவேலு அவர்களும், மற்றுள்ள சிலரும் சுற்றுப்பிரயாணம் செய்யப் போவதாய் பத்திரிகையில் பார்த்தேன். அவர்களாவது சங்க ஸ்தாபனங்களை சரியான முறையில் அமைக்கும் வேலையிலும, சரியாய் அமைத்து அதின் பின் செய்யவேண்டிய முறையையும் செய்வார்களென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தவாரம் சுயமரியாதை ஸ்தாபனங்களின் அமைப்புப்படி யிருக்க வேண்டுமென்பது பற்றிய எனது அபிப்ராயத்தை புரட்சி மூலம் வெளியிடுகிறேன். தோழர்கள் கவனித்து வேண்டியது செய்வார்களாக. எங்களது ஜில்லாவை பொறுத்தமட்டில் நானும் கூட்டுக் காரியதரிசிகளிலொருவரான தோழர் எ. எஸ். ஆனந்தம் அவர்களும் வேண்டிய வேலைகளைச் செய்து கொண்டிருப்பதற்கு சுயமரியாதை தோழர்கள் பலரும் ஆதரவு கொடுக்கவேண்டுமாய்க்கேட்டுக்கொண்டு ஒவ்வொரு ஜில்லாவும் இதை பின்பற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதிப்புரை.

எழிலரசி அல்லது காதலின் வெற்றி.

திருவையாறு அரசர் கல்லூரி தமிழ் மாணவர் (Vide 7d. W.) வாமமேடு தோழர் சி. இலக்குவன் அவர்களால் அகவலடியில் எழுதப்பெற்ற மேற்கண்ட நூலைப் பெற்றோம். ஆங்கில கவி "கீட்ஸ்," எழுதிய "இசபெல்லா" வைத் தழுவி இந்நூல் ஆக்கப்பட்டிருக்கிறது. மக்கள் கவனம் தமிழ்ச் செய்யுள் நடையில் மங்கிவரும் இக் காலத்தில் இனிமை பயக்கும் சிறு கதையின் மூலமாகத் தெளளத் தெளிய அழகிய நடையில் சமதர்ம நோக்கமுடன் "எழிலரசி" எழுதப்பெற்றிருப்பது பெரிதும் போற்றத்தக்கது. நமது வாலிப மாணவ நண்பர்கள் சி. இலக்குவன் இன்னும் இதுபோன்ற அரிய நூல்களை எழுதி வெளியிட அவருக்கு அதிக ஊக்கமும், ஆதரவும் காட்டுமாறு தமிழ்மக்களை வேண்டுகிறோம்.

புஸ்தகம் விலை அணா 0—4—0

நமது புதிய வெளியீடு.

தோழர் சே. நரசிம்மன் எம். ஏ.
அவர்களால் எழுதப்பட்ட

போல்ஷ்விக் முறை.

என்ற தர்க்கவாத நூலை
நீங்கள் படிக்க வேண்டாமா? அப்படியானால்
தனிப்பிரதி விலை அணா ஒன்று தான்

"குடி அரசு" பதிப்பகம் ஈரோடு.

புதுக்கோட்டையில் சுயமரியாதை முழக்கம்.

144 தடையுத்திரவு.

18-2-34-ந்தேதி மாலை 5-மணிக்கு (புதுக்கோட்டை) புலியூரில் ஆர். எஸ். எஸ் பலசரக்குக்கடையை திருச்சி இந்திய ஒளி பத்திரிகாசிரியர் ஜனாப் கே. ஏ. அப்துல்ஹமீத்து சாயபு திறப்பாளராக ஏற்பட்டிருந்தார். கடையின் முன்பாகத்தில் காகிதத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கடையைத் திறக்குமுன்பாக 4-40 மணிக்கு திறப்பாளர் ஜனாப் கே. ஏ. அப்துல்ஹமீத் சாயபு, தோழர் ஆர் எஸ். சிவம், தோழர் எம் பி. சமி ஆகியவர்களுக்கு முறையே சுயமரியாதை இயக்கத்தைப் பரப்பக்கூடியது சம்பந்தமாக யாதொன்றும் பேசக்கூடாதென்று புதுக்கோட்டைக் குளத்தூர் 2-வது வகுப்பு மாஜிஸ்டிரேட் முவெங்கடாசல நாயுடு அவர்கள 144-தடையுத்திரவு பிறப்பிவித்து சர்வு செய்யப்பட்டது மேலும் குளத்தூர் சென்ட்ரல் போலீஸ் சர்க்கில் இன்ஸ்பெக்டர் மகாதேவய்யரும், மாஜிஸ்ட்டிரேட்டவர்களும், இன்னும் இரண்டு ஹெட்கான்ஸ்டேபிளகளும், மூன்று கான்ஸ்டேபிள்களும் கூட்டத்தில் ஆஜராகி யிருந்தார்களென்றாலும் திறப்பாளர், தோழர் ஆர். எஸ். சிவம் முதலானோர் மிகத தீவிரமாகப் பேசினர்கள்.

11-2-34-ந் தேதி மாலை 5-30 மணிக்கு புதுக்கோட்டை-புலியூரில் சுயமரியாதைத் தின ஞாபகார்த்தமாக அறிவு நிலயம் என்ற பெயருடன் ஒரு வாசகசாலை திறப்பதற்கு திருச்சி இந்திய ஒளி பத்திரிகாசிரியர் கெ. ஏ. அப்துல்ஹமீத சாயபு அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நிகழ்த்தப்பட்டது. அதுசமயம் புதுக்கோட்டை குளததூர் சப் மாஜிஸ்டிரேட் அவர்களும், போலீஸ் சர்க்கில் இன்ஸ்பெக்டரவர்களும், 2-ஹெட்கான்ஸ்டேபிள்களும், 3-கான்ஸ்டேபிள்களும் சுயமரியாதைச் சம்பந்தமாய்ப் பேசக் கூடாதென 144-செக்ஷன்படி தலைவரவர்களுக்கும், ஆர். எஸ். சிவம் பெரிய சூரியூர் பொதுஜன ஊழிய சங்கக் காரியதரிசி எம். பி. சாமி அவர்களுக்கும் நோட்டீஸ் சர்வுசெய்தபின்னர் கூட்டத்தில் மேற்படி உத்தியோகஸ்தர்கள் ஆஜராகியிருந்தனர். அதுசமயம தலைவர் பேசியதின் சுருக்கம் வருமாறு:—

தோழர்களே!

இந்தியாவில் 262000 பள்ளிக்கூடங்களிருக்கின்றன. அவற்றுள் ஒரு கோடி இருபததாறுலக்ஷத்தித் தொன்னூற்றெட்டாயிரத்தி யென்பத்தாறு மாணவர்களே வாசிக்கிறார்கள். அதாவது 35-கோடி ஜனத்தொகையுள்ள நாட்டில் சுமார் ஒன்றேகால் கோடி பேர்கள்தான் வாசிக்கிறார்கள். அதிலும் 317-கலாசாலைகளிருக்கின்றன. அவைகளில் 221-வெறும் பட்டப் படிப்பு பி. ஏ, எம். ஏ. போன்றவைகளும் இருக்கின்றன. இவைகளில் வாசித்துவரும் மாணவர்களுக்கு வேலைகிடைக்காமல் தெருக்களிலும், காப்பிக் கடைகளிலும் திண்டாடுகிறார்கள். எனவே இக் காரணத்தினால் இன்றைய ஆட்சி ஏன் ஒழியவேண்டுமென்று தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சொல்லிமுடிக்துச் சிறை சென்றார். 144-க்கு மீறி நான் பேசவில்லை. மேலும் கல்வி இலாகாவில் இப்போது பணநெருக்கடியில் அனேகப் பள்ளிக்கூடங்களை எடுதது விடுவதாக பிரஸ்தாபமேற்பட்டிருக்கிறது. ஐயோ 35-கோடி ஜனத தொகையுள்ள இந்திய நாட்டில் ஒன்றேகால் கோடிபேர் கல்வி பயின்று வருவதும், இந்தச் சர்க்காருக்குப்பொறுக்கமுடியாமல் அதிலும் கைவைக்க வந்துவிட்டார்கள். என்று பேசி கல்வியின் பிற்போக்கைப்பற்றி விளக்கினார். பின் ஆர். எஸ். சிவம் பேசிய போது தெரிவித்ததாவது:-

இதுபோது காலத்தின் வேகத்தையும், மேன்மையையும் உணர்ந்து நடக்கவேண்டியதை உத்தேசித்துச் சுயமரியாதைச் சமதர்மத்தை வளர்க்கவேண்டுமென்பதை யோசித்துப் புதிய வாசகசாலை வேண்டுமெனத தோன்றுவதால் அந்த வாசகசாலையொன்று எனது கட்டிடத்தில் ஸ்தாபிதது வைக்குமாறு தலைவரிடம் கேட்டுக்கொண்டதற்கு அவர்களும் ஒப்புக்கொண்டு திறப்புவிழா வாற்ற வந்திருப்பதால் அதை ஆதரிக்குமாறு எலலாச் சோதரர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

பின்பு பொதுஜன ஊழிய சங்கக் காரியதரிசி எம். பி. சாமிநாதம் அவர்கள் பேசினார். பின்பு தலைவரவர்கள் முடிவுரை கூற ஜாமிலாபீவி இறந்தமைக்கு அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றக் கூட்டம் இனிது முடிந்தது.

சுமரியாதை தினமாகிய 11-2-34 தேதி மாலை 6 மணிக்கு புதுக்கோட்டை புலியூரில் கூட்டததில் திருச்சி இந்திய ஒளி பத்திரிகாசிரியா தோழர் கே. ஏ. அப்துல்ஹமீத் சாயபு அவர்கள் தலைவராக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காகிதத் தோரணங்களால் அலக்கரிக்கப்பட்டிருந்த மேடையில் கூட்டம் கூடுவதற்கு முன்பே மாலை 4-40 மணிக்கு தலைவரவர்களுக்கும், தோழர் ஆர். எஸ். சிவம் அவர்களுக்கும் தோழர் எம். பி. சாமி அவர்களுக்கும் முறையே சுயமரியாதை இயக்கத்தைப்பற்றிப் பேசக்கூடாதென்று புதுக்கோட்டை குளத்தூர் 2-வது வகுப்பு மாஜிஸ்திரேட் எஸ். வெங்கிடாஜல நாயுடு அவர்கள் 144 தடையுத்திரவு பிரப்பித்துச் சார்வுசெய்யப்பட்டார். மேலும் குளத்தூர் சென்டர் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் மகாதேவ அய்யர் அவர்களும் இன்னும் இரண்டு ஹெட்கான்ஸ்டேபிள்களும் ஆஜராயிருந்தார்கள். அதுபோது தலைவரவர்கள் சிறைபட்ட தோழர் ஈ. வெ. ரா. அவர்களைப்பாராட்டி சு. ம. கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

பின் பெரிய சூரியூர் பொதுஜன ஊழிய காரியதரிசி எம். பி. சாமி அவர்கள் அவரைப்பின்பற்றிப்பேசினார்.

பிறகு புதுக்கோட்டைப் புலியூர் சமதர்மத் தோழர் ஆர். எஸ். சிவம் அவர்கள் பேசியதின் சாராம்சம் வருமாறு:—

நான் சுயமரியாதைத் தினத்தைக் கொண்டாடுவதற்கு எவ்விதமான முறையில் நடத்தலாமென ஆலோசித்திருந்தேன். இங்குள்ள சட்டசம்பந்தமான நடவடிக்கைகளில் அம்மாதிரிப் பேச்சு பொதுஜன அமைதிக்குப் பங்கம் நேரிடுமோவென்ற சந்தேகமும் எனக்குண்டு. அதனால் தான் இன்னும் 4, 5 தினங்களுக்குப் பிறகு ஆரம்பிககவேண்டிய கடையை திறப்புவிழாவென்ற பெயருடன இன்று இக் கூட்டம் ஏற்படுத்திப் பிட்நோட்டீஸ்கள் வழங்கப்பட்டது. இந்தச் சமாச்சாரத்தை யறிந்தசபமாஜிஸ்ட்டிரேட்டும் சர்க்கிளும மற்ற போலீஸ் சிப்பந்திகளும் கூட்டத்திற்கு வந்திருந்ததோடு 144 தடைநோட்டீசும் எனக்கும், தலைவரவர்களுக்கும், எம். பி. சாமி அவர்களுக்கும் மூர்த்தி முதலியோருக்கும் சார்வுசெய்தனர் சப்மாஜிஸ்ட்டிரேட் அவர்களும், போலீசாரும் என்னை கூட்டதவை நிறுத்திவிடும்படி என்னிடம் தெரிவித்தார்கள். நான் பொதுஜன அமைதிப் பங்கமும், சர்க்காருககு விரோதமாகப் பேசினால் சட்டப்படிசெய்யும் குற்றத்திற்கு ஆளாகத் தயார். கூட்டம் நிறுதத முடியாதெனத தெரிவித்து உடனே இராக் காலத்தில் கடையை தலைவர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. என் கட்டிடத்தில் சுயமரியாதைச் சமதர்மம் பரவச் செய்யும் நோக்கத்துடன் இன்று அறிவு நிலயம் என்ற பெயருள்ள வாசகசாலையொன்று தலைவரால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தாரின் 144-படிக்குள்ள சட்ட வரம்பை இங்கு பேசிய எம். பி. சாமியவர்களும், தலைவரவர்களும் மீறப்பட்டதாக குற்றச்சாட்டேற்பட்டாலும் என்னால் கூட்டப்பட்ட கூட்டமாதலின் எனது சகோதரர்களைவிடுத்து என்னையே ஜவாப்தாரியாக்கவேண்டுமெனத் தெரிவித்துக்கொள்கிறேன் எனப பேசினர்.

தலைவரின் முடிவுரைக்குப் பின் சிறைபட்ட தோழா ஈ. வெ. ரா. அவர்களைப் பாராட்டியும், காந்தியைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றக் கூட்டம் முடிந்தது.

அனுப்பர்பாளையம்
ப. ஜீவானந்தம் விஜயம்.

22-2-34 திருப்பூருக்கு அனுப்பர்பாளயத்தில் மாலை 5-30மணிக்கு சமதாம சங்க ஆதரவில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திருப்பூரிலிருந்து ஏராளமான தோழர்கள் விஜயமாகி இருந்தார்கள். மாயவரம் தோழர் சி. நடராஜன் தலைமை வகித்தார் எஸ். வி. லிங்கம் சிறிது நேரம் பேசிய பின், தொழிலாளர் இயக்கமும் வாலிபர்கடமையும் என்பது பற்றி தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் நீண்ட சொற்பொழிவாற்றினர். இரவு 8-30மணிககுகூட்டம் இனிது முடிந்தது. இரவே சுயமரியாதை தோழர்கள ஈரோட்டுக்கு புறப்பட்டு விட்டார்கள்.

(9- பக்கத் தொடர்ச்சி.)

வேண்டும் என்று வியாபாரம் பேலாம். இன்று பேசப்பட்டும் இருக்கலாம். இவைகளில் எல்லாம் சர்க்காரும், பிரபலஸ்தர்களும் சிக்கி— அவர்களை நம்பி உள்ள வாயில்லாப் பூச்சிகளான பல லக்ஷக்கணக்கான இனும்தாரகள் குடியை பாதுகாக்கக் கேட்டுக்கொள்வதுடன் இனும் நிலங்கள் மூல புருடர்களிடம் பெரும்பாலும் ஏமாற்றி வாங்கப்பட்டிருப்பதால் அதை முழுதும் சர்க்கார் கவனிக்கப்படுத்த வேண்டுமென்றும் அல்லது நிலவரியாவது சிறிது போட்டு மற்றவாகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்றும் கோருகிறோம்.

[8ம் பக்கத் தொடர்ச்சி]

ச்சி இரகசியத்தைப் பலபேர் அறிடார்.

லாகூர் காங்கிரசானது பாழ்பட்ட இயககத்திற்குப். புதிய எழுச்சியை உண்டாக்கியது. காந்தியாரை அரசியல் இயக்கத்தின் தலைமை ஸ்தானத்திலிருந்து விடுவித்துவிட்— லாகூர் காங்கிரஸ் முனைந்தது. ஜவஹர்லாலின் தலைமைப் பேருரையானது ஒரு புதிய தலைவரை அரைகுவி அழைத்தது. ஆனால் காந்தியின் லட்சியங்களுகதும அதில் பாஸ்பர புகழ்ச்சி கூறப்படாமலில்லை.

[இன்னும் வரும்].

காந்தீஸமும், டால்ஸ்டாயிஸமும்.

[7-ம் பக்கத்தொடர்ச்சி]

நடப்பதுஒவ்வொன்றும் அவன் (கடவுள்) ஆக்ஞையின் பேரிலேயே நடக்கின்றதென்றும் ஆஸ்திகர்களாகவும், நாஸ்திகர்களாகவும் மாறுவது மனிதர்களைப் பொறுத்தது என்றும் திருச்சியில் தத்துவ விளக்கப் படலம் படித்தார்.

கவியரசர் தாகூர், அவருடைய 'பூகம்பக் கடவுளை' வன்மையாகக் கண்டித்து மறுத்தெழுதிய பொழுது, 'கடவுள் செய்கைபோலிருக்கிறது என்றே கூறினேன்' என்று காந்திஜீ நாஸூக்காக ஒரு மழுப்பு மழுப்பினார். கும்பகோண சம்பாஷணையில், அறிவுக்கு ஒவ்வாத மதமும் கடவுளும் தர்க்கப்படவேண்டும் என்று கையில் ஐஸ் போட்டாற்போல் தோழர்கள் உள்ளங்குளிரப் பதிலளித்தார். சீர்காழியில்பொதுக்கூட்டத்தில் பேசும்பொழுது,

"அநேக விஷயங்களில் எனக்கும் சுயமரியாதைக்காரர்களுக்கும் ஒற்றுமையுண்டு. ஆனால் அவர்கள் கடவுளிடம் அன்பு செலுத்துவதில்லை. மனிதனே தெய்வமென்கிறார்கள். நான் ப்ராசீன மூட நம்பிக்கையும் தெய்வத்தின் சக்தியில் விசேஷ நம்பிக்கையும் கொண்டவன். சுயமரியாதைக்காரர்கள் 'மனிதன்' என்ற பெயர் 'தெய்வம்' என்பதற்கு மொழிபெயர்ப்பு எனவும், தெய்வமென்ற சக்தி ஒன்று இருக்கிறதென்றும் ஒப்புக்கொண்டு அதற்கு அவர்கள் எந்தப் பெயரிடினும், அதை நானும் ஆமோதிப்பேன். அவர்கள் அன்பும் தயையும் தெய்வமென்ற பின் அதையே யானும் அனுசரிப்பேன்"

என்று கூறியிருக்கிறார். சென்னையிலிருந்து புறப்பட்டு மீண்டும் சென்னைக்கு வருவதற்குள், கடவுள் தத்துவம் காந்திஜீயினிடத்தில் எத்தனை தினுசாக அடிபட்டிருக்கிறது பார்த்தீர்களா? அபிப்பிராயங்களில் எவ்வளவு ஒருமைப்பாடு, நவதான்யம் போல!

காந்தி பொதுஉடைமைக்காரராம்

வருணாசிரம தர்மத்தில் பொருளாதார சமத்வமும் அடங்கியிருக்கிறது என்பது காந்திஜீயின் மதராஸ் வியாக்யானம். திருச்சியில் இயந்திர வளர்ச்சியை ஆதரிக்கவில்லையென்றும், முதலாளிகளுக்கு நஷ்டமேற்படுவது லாபகரமாயிராது என்றும், உண்மையிலேயேதான் ஒரு பொதுஉடைமைக்காரரென்றும் அபிப்பிராயம் கொடுத்தார். ஏழை, பணக்காரன் என்ற வித்யாசம் ஒழிக்கப்படவேண்டுமென்பது கும்பகோணப் பேச்சு. நான் முதலாளிகளின் கருவியல்ல, நான் கடவுளது கருவி என்பது சீர்காழிச்சொற்பொழிவு. ராஜபுத்தானத்தில் இளவரசர் கல்லூரி ஒன்றில், பகவான் உங்களுக்குச் செல்வத்தைக் கொடுத்திருக்கிறாரென்று காந்திஜீ பேசினார்.

"பரம்பரை நிலச்சுவான்கள் செல்வாக்கை அடியோடு அழிப்பதால் பெருங்கேடு விளையும். பயிரிடுகிறவனுக்கு நிலத்தில் உரிமையையும், விளைவில் பெரும் பகுதியும் வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. அவர்களுக்குக் கொஞ்சம் அதிகம் கொடுப்பது நலம், நியாயம்" என்று சில நாட்களுக்குமுன், ஒரு பத்திரிகைப் பிரதிநிதியிடம் தோழர் ஜவகர்லாலின் பொதுவுடைமைப் பிரசாரத்தைப் பற்றி அபிப்பிராயம் கொடுத்த பொழுது காந்திஜீ கூறினார்.

மேற்கூறிய கருத்துக்களை ஒன்றுசேர்த்து, ஒரு மூச்சு யோசித்துப் பார்த்தால், காந்திஜீயின் பொதுஉடைமைத் தத்துவச் சாயம் வெளுக்கும். போதாக்குறைக்கு, பிரபல பொதுஉடைமைக்காரராகிய தோழர். சகலத்வாலா காந்திஜீக்கு "காங்கட்பேர் வழி"யென்றும் "ஹம்பக்" என்றும் நற்சாட்சிப்பத்திரம் கொடுத்ததை ஞாபகப்படுத்துகிறேன்.

தோழர்களுக்கு.

காந்தீயமும், சமதர்மமும் இரண்டு நேர்கோடுகள் (Parallel Lines). இரண்டும், என்றும் ஒன்று சேராது. காந்தீயத்தின் அஸ்திவாரம் நம்பிக்கை. சமதர்மத்தின் அடிப்படை, அனுபவ ஆராய்ச்சியின் தீர்மானம். காந்திஜீ ஆத்மார்த்திகவாதி (Spiritualist). சமதர்மி, லோகாயதவாதி. சமதர்மி யந்திரவளர்ச்சியைப் போற்றுகிறான். காந்திஜீ யந்திர வளர்ச்சியைத் தூற்றுகிறார். ஆகவே, காந்திஜீக்கும் சமதர்மத்துக்கும் (பொது உடைமைக்கும்) வணி வைத்தாலும் எட்டாது.

ஜனநாயகப்பாதிரி! ஜாக்கிரதை!!

டால்ஸ்டாயும் காந்திஜீயும் ஒரே பாடசாலை மாணாக்கர்கள். ஏழைகள் துயரைக்கண்டு உருகிக் கண்ணீரை மையாக்கி, படம் பிடித்தாற்போல் சித்தரிப்பதில் மகா நிபுணர்கள் இருவரும். இருவர்களும், உள்ளம் வெள்ளமாக உருகத் தக்கவாறு கொடுமைகளையும், அநியாயங்களையும் எடுத்துக் கூறுவதில் திறமைசாலிகள் ஆனால் கஷ்ட நிவாரணம் வேண்டுமென்றால், மத ஆசாரமும், தெய்வநம்பிக்கையும் பொங்கிவழிய வேண்டுமென்பது அவர்கள் கொண்ட கொள்கை. இங்குதான் அவர்களுக்கும் நமக்கும் பெரும் பிணக்கு. டால்ஸ்டாயிஸத்தை (Tolstoism)க் குழிவெட்டிப் புதைத்தவிடம் புல் முளைத்த பிறகுதான், ரஷ்யாவில் பொதுவுடைமை மலர்ந்து மணம் வீசிற்று. கர்மவீரனாகிய லெனினைப்படியுங்கள். டால்ஸ்டாயிஸத்தின் யோக்யதை பளிங்குபோன்றுவிளங்கும். மாக்ஸிம் கார்க்கி, (A. M. Gorky) போக்டனோவ் (Bogdanou) லூனா சார்ஸ்கி (Lunacharsky) இவர்கள் ரஷியா ஈன்ற பேரறிஞர்களில் சிலர். இவர்கள் லெனினோடு சேர்ந்த பொதுவுடைமைத்தோழர்கள். ஆனால் இவர்கள் லெனினைப்போல் நாஸ்திகர்களல்ல; ஆஸ்திகத்தின் நவீன பாஷ்யகாரர்கள். இவர்களுக்கு லெனின் கடவுள் தத்துவத்தைப்பற்றித் தெரிவித்த சில அபிப்பிராயங்களைக்கீழே தருகிறேன்.

1. பாதிரி உடைதரிக்காமலும், பாதிரிகள் போல் நைதிக மதத்தை ஆதரிக்காமலும், எண்ணத்தில் ஜனநாயகப் பாதிரிகளாய் விளங்கி கடவுள் பிரசாரம் செய்பவர்களால் ஏற்படும் ஆபத்தே பெரிது.

2. கிறிஸ்துவ சோஷியலிஸ்ட் எனப்படுகிறவர்களைப்போல சோஷியலிஸ்டுகளுக்குள் மே சமானவர்களும், சோஷியலிஸத்தைக் கெடுத்தவர்களும் வேறுகிடையாது.

3. "கடவுள்" என்ற கற்பனைக்கு அழகு, ஒழுக்கம், உண்மை, ஞாயம், அன்பு என்பதாகவெல்லாம் அர்த்தம் சொல்லுகிறீர்கள். ஆனால் இவ்வித அர்த்தங்கள் கொண்ட தங்களுடைய எண்ணங்களெல்லாம் வெளியே கிளம்பாமல் தங்களுடைய மனதிலேயே தங்கிவிடுகின்றன. ஆனால் தாங்கள் எழுதிய வாசகங்கள் பொதுமக்களிடம் சேர்ந்து அவற்றிற்கு அர்த்தம் சமூக நிலைக்குத் தக்கவாறும் வகுப்புப் போரில் (தொழிலாளி முதலாளிப் போராட்டம்) ஏற்படும் அனுபவத்திற்குத் தக்கவாறும் சொல்லப்பட்டனவே ஒழிய, மற்றப்படி தாங்கள் மனதில் என்ன எண்ணங்களைக்கொண்டு எழுதினீர்கள் என்பதைப்பொறுத்துச் சொல்லப்படவில்லை. மற்றவர்களும் அந்தப்படி அர்த்தம் கொள்ள அதில் இடமுமில்லை.

(4) அனுபவத்தில் 'கடவுள்' என்ற எண்ணத்தைக் கொண்டு முதலாளிகளும், அரசர்களும் பொது மக்களை அடிமைப்படுத்தி வருகிறார்கள். 'கடவுள்' என்ற நினைப்புக்குத் தத்துவார்த்த அழகு கொடுப்பதினால், ஒன்றும் அறியாத தொழிலாளர்களையும் குடியானவர்களையும் கட்டி இருக்கும் அவ்விலங்கைப் பழுது பார்த்துக் கெட்டியாக்குகிறீர்கள்.

5. கடவுள் நினைப்பை நிலைநிறுத்தவோ, உண்மை என்று சொல்லவோ செய்யும் முயற்சி எவ்வளவு நாகரீகமாகவும், நல்ல எண்ணத்துடனும் செய்யப்பட்டாலும் அது பிற்போக்கை ஆதரிப்பதாகவே இருக்கிறது.

கருத்திலும், எழுத்திலும் இருந்த பொதுவுடைமைக் கொள்கையை மனித வாழ்வில் ஸ்தாபித்த வீராதி வீரனாகிய தோழர் லெனின் தந்த இவ் அனுபவப்பொன்னுரைகளைக்கொண்டு காந்திஜீ பொதுவுடைமைக்காரரா? அவருடைய தெய்வநம்பிக்கை எப்பயன் விளைக்கும்? என்று அளந்து பார்த்தால் காந்தீயம் யானைத் தீ கண்ட விளாங்கனி போல் பொத்தலாயிருப்பது தெரியவரும்.

இறுதியாக எனது தோழர்களுக்கு ஒரு வார்த்தை. காந்திஜீ, இன்று கடைப்பிடித்துள்ள, சீனி தடவிய விஷக்கொள்கையைக் கை கழுவி விட்டு, சுத்த சமதர்மியாக வேண்டும். அல்லது, பொது வாழ்விலிருந்து அவர் விடை பெற்றுக்கொள்ளவேண்டும். வருங்காலத்தில் நேரப்போவது இதுதான். ஆகவே சமதர்மிகளான நாம், காந்திஜீ பொதுவுடைமைக்காரரென்பதைவிட, பொதுவுடைமைக்கொள்கை காந்திஜீயையும் தன்னுள் அடக்கும் சக்தியுடையதென்று நோக்கி, பிடிவாதமாய் நமது கொள்கைகளின்வழி, மும்முரமாய் உழைப்போமாக.

ரோஜா முத்தையா

[6ம் பக்கத் தொடர்ச்சி]

ந்தி அவர்கள் சேர்மனைப் பற்றி கேட்டதாகத் தெரிகிறது. வரவேற்பில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலோர் ஹரிஜன இயக்கத்தை ஆதரிக்காதவர்களுடன் மாறாக எதிர்க்கும் பிரபுக்கள், தாங்கள் என்றும் அணிந்திராத முதல் நாள் வாங்கிய கதர் உடையுடன் விளங்கியது மிக ரம்மியமாக இருந்தது "பிள்ளையில்லாமல் தவித்துக்கொண்டிருந்த சில பெண்கள் காந்திக்கு குத்துவிளக்கை கொடுத்து திருப்தியடைந்தனர். வழக்கைப் படியுள்ள எலக் கடைக்கும் பிறகு காந்தி புறப்பட்டுப்போய் விட்டார்.

சீர்காழி.

சென்ற ஒருமாதகாலமாக சீர்காழிக்கு காந்தி விஜயம் செய்யும்பொழுது பகிஷ்கரிக்கவேண்டியதின் அவசியத்தையும், நடந்துகொள்ள வேண்டிய முறைகளையும் இவ்வூர் சுயமரியாதைத் தோழர்கள் காந்தி பகிஷ்காரக் கமிட்டியின் பெயரால் துண்டுப் பிரசுரங்கள் வழங்கியும், வால்போஸ்ட்டுகள் ஒட்டியும் பகிஷ்கார ஏற்பாடுகள் நடத்திக்கொண்டே இருந்தார்கள். சென்ற 16-உ பகல் 12-மணிக்கு தோழர் காந்தி விஜயம் செய்தார். அவர் வருவதற்கு முன்னதாகவே பகிஷ்காரக் கமிட்டியார்கள் தீவிரமாய் காந்திஜி திரும்புங்கள்! காந்தியம் ஒழிக!! மதங்களழிக!!!என்பனபோன்ற பல வாக்கியங்களைப் பெரிய தட்டிகளில் எழுதி நகரத்தின் முக்கிய இடங்களில் கட்டப்பட்டும், உயரமான கம்பங்களில் பெரிய கருப்புத் துணிக் கொடிகள் கட்டப்பட்டும் கடைத் தெருவில் அனேகக் கருப்புக் கொடிகளை நட்டும் இருந்ததுடன் பல கடைகள் மூடப்பட்டுமிருந்தது.

காந்தியார் வரும்பொழுது சுயமரியாதைத் தோழர்கள் சுமார் 400 கருப்புத் துணிக் கொடிகளைக் கையில் தாங்கி அணிவகுத்து நின்றார்கள். காந்தி அவர்கள் கருப்புக் கொடிகளையும், பகிஷ்கார வாசகங்களடங்கிய தட்டிகளையும் நன்றாகக் கவனித்தார்.

வரவேற்புக் கமிட்டியார் அன்னவருக்காக ஊழியக்காரன் தோப்பில் அமைக்கப்பட்டிருந்த உபன்யாச மேடையில் அமர்ந்து பதினைந்து நிமிஷ நேரம் கழிந்ததும் போலீஸ் டிப்டி சூப்ரண்டு அவர்கள் சுயமரியாதைத் தோழர்களிடமிருந்த கருப்புக் கொடிகளைப் பறிமுதல் செய்யுமாறு உத்திரவிட்டதாக இவ்வூர் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் சாமிநாத அய்யர் அவர்கள் சுயமரியாதை தோழர்களின் தலைவராகிய தோழர் எஸ். ஜி. சொக்கலிங்கம் அவர்களிடம் தெரிவிக்கத் தலைவர் கட்டளைக்கிணங்கி தோழர்கள ஜி. நாராயணசாமி, பி. ஏ. சம்மந்தம், ஏ. டி. ராஜன், என். டி. ராஜன், டி. சிவப்பிரகாசன், சீர்காழி தாலூக்காபோர்டு, பஞ்சாயத்துப்போர்டு மெம்பரும், தேசாதிதலைவருமான கே.ஏ.கதிர்வேலு அவர்களும் தாங்களாகவே மற்ற தோழர்களிடமிருந்த கருப்புக் கொடிகளை வாங்கி போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் அவர்களிடம் நீங்களே பிடியுங்களென்று கொடுத்துவிட்டார்கள். சப்இன்ஸ்பெக்டர் கருப்புக்கொடிகளைக் கொடுக்கும்படி கேட்டபொழுது பகிஷ்காரக்கமிட்டித் தலைவர் தோழர் எஸ் ஜீ. சொக்கலிங்கம் அவர்களுக்கும், சப்இன்ஸ்பெக்டர் அவர்களுக்கும், வாக்குவாதம் நடந்து தலைவர் உத்திரவின்பேரில் கருப்புக் கொடிகளைக் கொடுக்கப்பட்டது.

தோழர் காந்தியார் அந்த இடத்தில் செய்த பிரசங்கம் வருமாறு:—

நான் அனேக வாலிபத்தொண்டர்கள் கருப்புக்கொடிகள் தாங்கியிருப்பதைப் பார்த்தேன். அவர்கள் கொடியின் நிறம் எதுவாயினும், மரியாதையுடனும், ஒழுக்கத்துடனும் நடந்துகொண்டது பாராட்டத்தக்கதே. அவர்களது அபிப்பிராயத்தை வெளியிட அவர்கட்குப் பூர்ண சுதந்திரமுண்டு. ஆயினும் அவர்களுக்கு ஒரு சந்தேகமிருப்பதை தெளிவுபடுத்துகிறேன். நான் விளம்பரஞ் செய்திருக்கிறபடி வசூலிக்கப்படும் ஹரிஜன நிதிப்பணம் பெருபாலும் அவர்கள் நன்மைக்கே பிரயோகஞ் செய்யப்படுமென்பதை நன்கு மறுமுறை வற்புறுத்திச் சொல்லுகிறேன்.

கருப்புக்கொடிக்கு பின்புறமுள்ளவர்கள் என்னை முதலாளிகளின் கருவி, அல்லது ஆட்டுவிக்கும் பொம்மை எனக் கருதுகின்றனர் நான் அத்தகைய கருவியா? இல்லையா?வென்ற விஷயம் சர்ச்சை செய்யப்படவேண்டிய அவசியமில்லையாயினும், ஒன்று மட்டும் திடமாய் அறிவிக்க விரும்புகிறேன். நான் ஒருவரது ஆட்டுவிக்கும் பொம்மையோ, கருவியோ இல்லை யென்பதையும், எக்காலும் நான் கடவுளது கருவி என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நான் நேற்று கூறியதைப்போல் அநேக விஷயங்களில் எனக்கும், சுயமரியாதைக் காரர்களுக்கும் ஒற்றுமையுண்டு. ஆனால் அவர்கள் கடவுளிடம் அன்பு செலுத்துவதில்லை. மனிதனை தெய்வமென்கிறார்கள். நான் பிராசீன மூட நம்பிக்கையும், தெய்வதத்தின் சக்தியில் விசேட நம்பிக்கையும் கொண்டவன். சுயமரியாதைக்காரர்கள் 'மனிதன்' என்ற பெயர் 'தெய்வம்' என்பதற்கு மொழி பெயர்ப்பு எனவும், தெய்வமென்ற சக்தி ஒன்று இருக்கிறதென ஒப்புக்கொண்டு அதற்கு அவர்கள் எந்தப் பெயரிடினும், அதை நானும் ஆமோதிப்பேன். அவர்கள் அன்பும், தயையும் தெய்வம் என்றபின் அதையே யானும் அனுசரிப்பேன். அவர்களது தத்துவம் மனிதனுக்கு ஜீவகாருண்யமும், அன்பும் அவசியமென இருப்பின், அதையே நானும் ஆதரிப்பேன், ஆனால் அவர்கள் ஏழை பணக்காரர்கள் என்ற வித்தியாசமின்றி இருக்க வேண்டுமெனவும், பணக்காரர்களது பணத்தை ஏழைகட்குப் பங்கிட வேண்டுமெனவுங் கூறுகின்றனர். கொள்கை என்பதில் அது நல்லதுதான் நான் என்றும் அதற்கு தடையாக இருக்கமாட்டேன்.

உலகத்தில் உள்ள செல்வங்களையெல்லாம் சரிசிகர் சமமாக பங்கிட்டுவிட வேண்டுமென்று சுயமரியாதையோர் அறிவுறுத்துகின்றார்கள் அது ஒரு கொள்கை என்கிற முறையில் நான் அதற்கு உடன்படுவது என்கிற முறையில் எனக்குகஷ்டமில்லை. நான் சுயமரியாதைக்காரர்களுக்கு மிக தாழ்மையாக தெரிவிப்பதென்னவென்றால். ஹரிஜன இயக்கத்திற்காகவோ அன்றி பீகார் நிதிக்காகவோ அன்றி வேறு எந்த உதவிக்காகவோ, பணக்காரர்களகொடுக்கும் பணத்தைப் பெற்றுக்கொள்வதின் மூலமாக இந்தியாவில் உள்ள பணக்காரர்களை அன்போடு அழித்துவிட நான் பெரிதும் பிரயாசை பட்டுக் கொண்டு சுயமரியாதைக்காரர்கள் லட்சியத்திற்கு நெருங்குகின்றேன்.

இது விஷயத்தில், சமதரிமிகள் தீவிரமாக வேலை செய்ய வேண்டுமென்ற யோசனை கொண்டிருப்பதற்கு முரணாகச் சொல்லத் தயாராயில்லை. ஆயினும், 50 வருஷப் பொதுஜன சேவையின் அனுபவத்தில், இக் காரியம் சுலபமாய் நிறைவேறுமென எனக்குத் தோன்றவில்லை. அவ் வித்தியாசம் ஒழிந்தால் நலம் தான். ஆனால் நானாகும நீங்கள் ஹரிஜனங்களுக்கு இவ்வளவு சேவையும் செய்து அன்பும் காட்டியதற்கு மகிழ்கின்றேன்.

வாணியம்பாடியில் காந்தி பகிஷ்காரம்.

வட ஆற்காடு ஜில்லா சுற்றுபிரயாண ஏற்பாட்டின்படி 18-2-34ந் தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் 1-மணிக்கு வேலூரிலிருந்து புறப்பட்டு குடியாத்தம், ஆம்பூர், வாணியம்பாடி, வழியாக திருப்பத்தூர் சென்றார். வாணியம்பாடிக்கு காந்தி வருகையை முன்னிட்டு சுயமரியாதைத் தோழர்கள் இரண்டுநாள் முன்னதாக விதவிதமான பிரசுரங்கள் டவுனிலும், கிராமங்களிலும் வழங்கினார்கள். அன்றையதினம் அறிக்கையின்படி பகிஷ்காரக்கூட்டம்குறிப்பிட்ட இடத்திலிருந்து புறப்பட்டுவிட்டார்கள். ஊர்வலம் நூற்றுக்கணக்கான கருப்புக் கொடிகளுடனும்,வால்போஸ்ட் போர்டுகளுடனும முக்கியமான கடை பஜார் வழியாகச்சென்று டவுன்கோடியில் காந்தியின் வருகையை எதிர்பார்த்திருந்தார்கள். வழிநெடுக "காந்தீயம் வீழ்க! முதலாளி ஆதிக்கம் ஒழிக!! சமதர்மம ஓங்குக!!!" என்னும கோஷத்துடன் சென்றனர். முடிவில் கூட்டத்தில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஜனங்கள் கலந்துக்கொண்டார்கள். காந்தி வருவதற்குமுன், முறையே போலீஸ் டிப்டி சூப்பிரண்ட் 1 காரிலும், சூப்ரின்ட்டுரை 1 காரிலும் வந்தார்கள். மற்றும் போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் தம் சகாக்களுடன் பகிஷ்கார கூட்டத்திற்கு விஜயம் செய்தார். வந்ததும் தாழர் வி. பாரத்தசாரதி அவர்களைத் தனியே கூப்பட்டு பேசினார். ஜனங்களுக்குள் பரபரப்பு ஏற்பட்டது. "காந்தீயம் ஒழிக" என்னும் வாக்கியத்தின் சொடி நீளமில்லாததால் ரோட்டின் குறுக்கேபிடிக்காமல் வண்டிகளுக்கு இடைஞ்சல் ஏற்படாமல் பிடிக்கும்படி தெரிவிததார். அதன்பிரகாரம் நடந்துக்கொள்ளப்பட்டது.பகிஷ்கார கூட்டத்தார் ஒழுங்கோடு நடந்துக் கொண்டதைப்பற்றி சப் இன்ஸ்பெக்டர் முதல் உயர்தர அதிகாரிகளும், டவுனிலுள்ள பிரமுகர்களும் சந்தோஷப்பட்டார்கள். ஆனால் வரவேற்புக் கமிட்டியார் சிலர் வாத்தியத்துடன் வந்து பகிஷ்காரக்கூட்டததைகடந்து முதன்மையாக வரவேற்க வேணுமென்று பிரயத்தனம் செய்தும் பகிஷ்கார கூட்டத்தார் அவர்களுக்கு இடம் கொடாமல் தாம முன்னணியில் நின்று பகிஷ்கரித்தது குறிப்பிடதக்கது. தமது எண்ணமும, ஜம்பமும் பலியாமல் போனதை அறிந்த வரவேற்புக் கமிட்டியார் வெட்கத்துடன் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திற்கு சென்று விட்டார்கள். சரியாய் காந்தி 3-45க்கு மோட்டாரில் வந்தார். பகிஷ்காரத்தொண்டர்கள்சுமார் 1-பர்லாங்கு வரையிலும் அணிவகுத்து நின்ற காட்சியைக்கண்ட எதிரிகளும் வியந்தனர். மோட்டார் வந்தவுடன் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக தொண்டர்கள் காந்தியே திரும்பிப்போ (go back Ghandhi) என்று முழங்கினர். காந்தி தமதிரு கரங்களையும்தூக்கி கும்பிட்டுக்கொண்டே சென்றார்.

ஆனால் புன்முறுவல் ஒன்றும் கிடையாது. காந்தியின் காரிலிருந்த சி. ராஜகோபாலாச்சாரியார் பிரசுரங்களை கொடுக்கும்படி கேட்க, 8 விதமான துண்டுபிரசுரங்களை அன்னவரிடம் கொடுக்கப்பட்டது. அவரும் பதில் வந்தனமாம "Thanks" என்றார். காந்தி 10-நிமிஷம் பேசுவார் என்று அவர்கள அறிக்கைகளில் இருந்தும் கூட்டத்திற்குச் சென்றவுடன் மேடைமீதேறாமல் காரில் இருந்தபடியே பணமுடிப்பை வாங்கிகொண்டு நேர்வழியாக வராமல் குறுக்குவழியாக சென்றுவிட்டார். காந்தி ஒரு வார்த்தையும் பேசாததைக்கண்டஜனங்கள் அருவருப்பு கொண்டனர். பேசுவார் என்று எதிர்பார்த்த "ஹரிஜன சேவாசங்கத்தாரும்" ஏமாற்றமடைந்தனர். கூட்டத்திலும் இரண்டு நிமிஷத்துக்குமேல் தங்கவில்லை.

(மற்ற ஊர்களின் பகிஷ்காரங்கள் அடுத்த வாரம் வெளிவரும்.)

பொதுவுடமை விளக்கம்.

பிரபல கிறிஸ்தவர் அபிப்பிராயம்.

18-2-34ந்தேதி மாலை திருவல்லிக்கேணியிலுள்ள கெல்லெட் மண்டபத்தில் பர்மிங்காம் சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் லாப்ட் ஹவுஸ் ஓர் அரிய பிரசங்கம் செய்தார். அப்போது அவர் பொதுவுடமைக் கொள்கையையும், கிறிஸ்துவ மத தத்துவத்தையும் ஒப்பிட்டுப்பேசினார். அவர் கூறியதாவது:-கிறிஸ்துமத தத்துவமும், பொதுவுடமைக் கொள்கையும் பரஸ்பரம் விரோதிகளெனக் கருதுகிறார்கள், சமீபத்தில் எடின் பரோவில் ஓர் பெரும் மகாநாடு நடந்தது. கிறிஸ்து மத தத்துவம் பொதுவுடமைக் கொள்கை இவ்விரண்டு சக்திகளும் உலக ஆதிக்கத்திற்கு போட்டி போட்டு வருவதாக ஷை மகாநாட்டில் கூறினார்கள். ஆனால் அதையொட்டி எனது அபிப்பிராயம் வேறு விதமாகும். பொதுவுடமை தத்துவத்தை அறிந்து கொள்ள வேண்டுமானால், அதை அனுதாபத்துடன் கவனிக்க வேண்டியது அவசியமாகும். அதில் தீங்கு என்ன இருக்கிறதென்பதைக் காட்டிலும், நன்மை என்ன இருக்கிறதென்பதைக்கண்டு பிடிப்பதே சிறந்தது.

பின்னர் டாக்டர் லாப்ட் ஹவுஸ் பொதுவுடமைக் கொள்கைக்கும், கிறிஸ்துவ மத தத்துவத்திற்குமுள்ள ஒற்றுமையையும் வேற்றுமையையும் விவரித்துக் கூறிய பின், பொதுவாக ஐரோப்பாவில் பொதுவுடமை தத்துவ உற்பத்தியைக் குறித்துப் பேசினார். முதலில் அவர் பொதுவுடமை தத்துவ தலைவர்களான கார்ல்மார்க்ஸைப் பற்றியும், லெனினைப் பற்றியும் கூறினார். கார்ல்மார்க்ஸைப் பற்றி அவர் கூறியதாவது:-கார்ல் மார்க்ஸிற்கு இரண்டு ஆசிரியர்களிருந்தனர். அவர்களில் முதலாமவர் பாங்கரும் பொருளாதார நிபுணருமான ரிக்கார்ட்டோ. அவரிடமிருந்து தான் தொழிலாளர் இயக்கம் முக்கிய சக்தியென்பதை கார்ல்மார்க்ஸ் அறிந்து கொண்டார். அதிலிருந்து முதலாளி வர்க்கம் தொழிலாளர்களை மோசம் செய்து வருவதாக அவர் உணர்ந்து, சகல தேசங்களிலுள்ள தொழிலாளர்களும் ஒற்றுமையுடனிருக்க வேண்டுமென அவர் உபதேசம் செய்யத் தொடங்கினார். அவருடைய மற்றோர் குரு ஹேஜல் என்ற ஜெர்மன் தத்துவ ஞானியாவார். அவருடைய உபதேசங்களின் பயனாக மார்க்ஸின் மனதில் பொதுவுடமைக் கொள்கை பலமடைய ஆரம்பித்தது. ஷை கொள்கையை அவர் 1840-ம் வருஷம் வெளியிட்ட பிரசித்தமான அறிக்கையில குறிப்பிட்டிருந்தார். அவருடைய அறிக்கைக்கு அச்சமயம் எத்தகைய செல்வாக்கும் ஏற்படவில்லை. ஏனெனில் அச்சமயம் இங்கிலாந்திலும், ஐரோப்பாவிலும்தொழிலாளர்கள் வேறுவிஷயங்களில் தங்கள் கவனத்தைச் செலுத்தி வந்தார்கள். ஆனால் ருஷியாவில்ஜார்மன்னர் ஆட்சி வீழ்ச்சியடைந்ததும் மார்க்ஸ் கொள்கையைப் பின்பற்ற லெனினுக்குத் தகுந்த சந்தர்ப்ப மேற்பட்டது. ருஷியாவில் அவர் ஒருவர் தான் தம்முடைய கட்சியை வெற்றிகரமாக நடத்தி முதலாளி தத்துவத்தை ஒழித்து பொதுவுடமை சர்க்காரையும் அமைக்க முடிந்தது. எனினும் அவருடைய அதிர்ஷ்டம் பூர்த்தி யடைய அதிக காலம சென்றதென்பதில் சந்தேகமில்லை. ஓர் சமயம் லெனின் தம்முடைய கொள்கைகளைக் கூடத்திருத்திக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் அவருடைய மரணத்திற்குப் பின் தோழர் ஸ்டாலின், லெனினுடைய கொள்கைகள் முன்னதைக் காட்டிலும் பலமடையும்படி செய்தார். தோழர் ஸ்டாலின் 5 வருஷதிட்டம்வெற்றியடைந்தது எல்லோருக்கும் ஆச்சரியத்தைஉண்டுபண்ணியது. சொந்த சொத்து கூடாது. லாபமில்லை, சம்பளமில்லை என்பதே அவரது கொள்கையாகும். அல்லது சகலரும் தேசத்தினுடைய, சமூகத்தினுடைய க்ஷேமத்தையே நாட வேண்டும் பொதுவுடமைக்கொள்கையானது ருஷியாவில் புதிய நாகரிகத்தை உண்டு பண்ணியது. எவரினும் பொதுவுடமைக் கொள்கைகளை ஓர் மதமாகத் தழுவிக்கொள்ள முடியாது "என்னுடைய சகோதரனாக இரு; இல்லாவிட்டால் உன்னைக்கொன்று விடுவேன்" என்பதே பொதுவுடமைக் கொள்கையாகும்.

3 விஷயங்களில் பொதுவுடமை கொள்கைக்கும் கிறிஸ்துமத தத்துவத்திற்கும் ஒற்றுமை இருக்கிறது. ஏழைகள் விஷயத்தில் அனுதாபம் காட்டுவதே பொதுவுடமைக்கொள்கையின் அடிப்படையாகும். கிறிஸ்து மதக்கொள்கையும் அதுவே. எல்லோரிடையும் சகோதரத்துவ பாவம் நிலவ வேண்டுமென்பது கிறிஸ்துவ மதத்தின் கொள்கை பொதுவுடமைக்கொள்கையும அதுதான். சொந்த ஹோதாவிலுள்ளவர்களைக் காட்டிலும் சமூக க்ஷேமம்தான் முக்கியமென்பதும கிறிஸ்துவ மதக் கொள்கையாகும். ஆனால் பொதுவுடமை இயக்கத்தைப் போல் பலாத்காரத்தில் கிறிஸ்துவ மதத்திற்கு சிறிதும நம்பிக்கையில்லை. இன்னும் நாஸ்திக கொள்கையையும் கிறிஸ்துவமதம் ஆதரிக்கவில்லை. இன்னும் வாழ்க்கையின் உண்மை கடவுள் தான் என்பதும் கிறிஸ்துவ மதத்தின் தத்துவமாகும். எனினும் பொதுவுடமையில் பல உயர்ந்த கொள்கைகளிருக்கின்றன வென்பதில் சந்தேகமில்லை. சமூகம் க்ஷேமமடைய வேண்டுமானால், ஒவ்வொருவரும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் தங்கள் உயிரைவிட சித்தமாக இருக்க வேண்டும். மனிதர்களிடை சகோதரத்துவ பாவத்தை நிர்ப்பந்தித்து வற்புறுத்துவதால்பயனில்லை. பாபிகளை சமாதானப்படுத்த ஏசுநாதர் மாண்டார். அந்த தத்துவத்தை ஜனங்கள் உணர்ந்துகொள்ளுவார்களானால், மனிதர் பொதுவுடமை இயக்கத்திலிருந்து சகல நல்ல விஷயங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

(தமிழ் நாடு)

தமிழ் மாகாண சமதர்ம மகாநாடு.

ஒரு கோரிக்கை.

மகாநாடுகளில் சில தீர்மானங்கள் பேசப்பட்டு நிறைவேறப் படுகின்றன. சிலர் இவைகளை எதிர்த்தும் பேசலாம். மொத்தத்தில் இவைகளில் பேசுவர்கள் பெரிதும் சிலரே. ஒட்டிப் பேச இடம் இல்லாதவர்களும் வெட்டிப் பேச விருப்பம் இல்லாதவர்களும் தங்களுக்கு இருக்கக்கூடிய சிறு சந்தேகங்களை நீக்கிக்கொள்ள முடியாது போகிறது. ஒட்டியோ, மறுத்தோ தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டு விடுவதோடு அவர்கள் வேலைதீர்ந்து விடுகிறது. சிலர் தங்களுக்குள் தனித்துப் பேசிச் சந்தேகங்களை நீக்கிக் கொள்ளலாம். அறிவியக்கம் இருக்கிற நிலைமையில் இது போதாது.

மகாநாடு ஓய்வு பெற்றிருக்கிற வேளைகளில் முக்கியமாக இரவு சாப்பாட்டிற்குப் பின் மகாநாட்டின் சார்பாக சில தர்க்கங்கள் நடத்தினால் சந்தேக விளக்கத்திற்கும், இயக்கம் உரம்பெறவும், பொதுக்கூட்டப் பேச்சுப் பழக்கம் பெருகவும் இடமாகும். வரும் மன்னார்குடி மகாநாட்டில் இதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டுகிறேன். அதற்கு முதற்படியாக சோதிடம் பார்ப்பது நல்லதா கெட்டதா? என்பதைப்பற்றி ஒரு தர்க்கம் நடத்த கோருகிறேன்.

சே. தே நாயகம்

வரிசெலுத்துவோர் சங்கம்.

சேலம் 13-2-34 மாலை 6-மணிக்கு அரிசிபாளையம் சமதர்ம வாலிபர் சங்க மைதனத்தில 1-வது வார்டு வரிசெலுத்துவோர் ஆரம்பக்கூட்டமொன்று நடைபெற்றது. தோழர். ஆர் சோமையா அவர்கள் தலைமை வகித்தார். அதுசமயம் தோழர்கள். எ. எம். பாலசாமி, திருப்பூர் டி. பி. ராமசாமி, ஆர். நடேசன் ஓ. வி கோவிந்த ஜாலு, பழனிசாமி, சிவநாராயணன் முதலியவர்கள் சங்கத்தின் அவசியத்தைப்பற்றி பேசியதும வரிசெலுத்துவோர் சங்கத்திற்கும், சமதர்ம வாலிபர் சங்கத்திற்கும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டபின் கூட்டம் 9-மணிக்கு கலைந்தது.

திருப்பத்தூர் தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு.

வறவேற்புக் கழக அமைப்புக் கூட்டம்.

தெம்மாப்பட்டு சமதர்ம கலாசாலையில் 10-2-34 யன்று மாலை 4-30 மணிக்கு தோழர் எ. முத்தையா அவர்கள் தலைமையில் அமைப்புக் கூட்டம் நடைபெற்றது.

இராமநாதபுரம் ஜில்லா திருப்பத்தூர் தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டைத் திருப்பத்தூரில் மார்ச்சுமாதம் இரண்டாவது வாரத்தில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

இம்மகாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவராக தோழர். நா. பள்ளிகொண்டான் அவர்களையும், காரியதரிசிகளாக தோழர்கள் எ. முத்தையா, சி. முருகையா இருவர்களையும், பொக்கிஷதாரராக தோழர். மு. கணபதி அவர்களையும் இன்னும் பல தோழர்களை வரவேற்புப் கழக அங்கத்தினர்களாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மகாநாட்டுத் தலைவர், திறப்பாளர் பிரசங்கிகள் முதலியவர்களது பெயரைக் குறிப்பிட்டு அவர்களுடைய சம்மதத்தை எழுதிக் கேட்டுத் தெரிந்து கொள்ளுமாறு காரியதரிசிகளுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டது. மகாநாட்டுக்குப் பல தோழர்கள் நன்கொடை உதவுவதாக வாக்களித்துக் கையொப்பம் செய்தார்கள். மகாநாட்டுக்கு எவ்வித கட்டணமும் கிடையாது என்று முடிவு செய்யப்பட்டது. அக்கூட்டத்திற்கு தோழர். அ. பொன்னம்பலம் அவர்களும், விஜயஞ் செய்திருந்தார்கள். கூட்டம் இரவு 6-மணிக்கு முடிவடைந்தது.

(குறிப்பு) மார்ச்சு மாதம் 4-ந்தேதியில் இம்மகாநாடு நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது. மன்னார்குடியில் இத்தேதியில் நடக்கும் சமதர்ம மகாநாட்டையுத்தேசித்து மார்ச்சு மாதம் 11-ந்தேதி ஞாயிற்றுகிழமை எனபதாகத் திருத்தம் செய்யப் பட்டிருக்கிறது.

பெரிய குளம்.

தோழர் எ சுப்பையா அவர்கள் தலைமையில் 11-2-34 ஞாயிறு மாலை மணிக்கு சு ம. சங்கக் கட்டிடத்தில் தோழர்கள் எஸ். ஆர். சங்கரய்யா, மருதை முதலியவர்களால் சுயமரியாதை கீதங்கள் பாடப்பட்டது. பின்னர் எல். கிருஷ்ணசாமி அவர்களால சுயமரியாதை இயக்கமும் தலைவர்கள் சிறை வாசமும் என்பதைபற்றி நீண்ட நேரம பிரசங்கம் செய்தார். பின்னர் சில தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

[illegible]

உடைமையின் காரணமாய், சமூகத்தில் ஞானம், கல்வி, நாகரீகம், சிறந்த சுற்றுச்சார்பு, நல்ல சந்தர்ப்பம், முன்னேறும் வழி, ஆரோக்கியம் ஆனந்தம் ஆகிய வற்றில் தனிப்பாத்தியம் கொண்டாடுகிறார்கள். இந்நாட்களில், தொழிலாளி அடிமையாகவோ, பண்ணையாளாகவோ இல்லாது போயினும், இன்னும் மனித வர்க்கத்தின் வளர்ப்புக் குழந்தையாகவே இருக்கிறான். தொழிலாளிகள் -ஆணும் பெண்ணும் - இன்னும் சமூகத்தின் கீழ்வகுப்புப் பிரதிநிதிகளாகவே கணிக்கப்படுகிறார்கள். வருங்கால சமதர்மசமூகத்தில் ஆண் தொழிலாளி, பெண் தொழிலாளி என்ற சொற்களே வழக்கற்றுப்போய் விடும். ஏனென்றால் அப்பொழுது, சமூகத்தில் ஒரு தனி வகுப்பாகவோ அல்லது ஒரு பாகமாகவோ தொழிலாளிகள் இருக்கமாட்டார்கள் ஆடவர், பெண்டிர் எல்லோரும் தொழிலாளிகளாகவே வாழ்வர். நோயாளிகளும், பலவீனர்களும், குழந்தைகளும், வயோதிகர்களும், நீங்கலாக மக்கள் யாவரும் சமூகத்திற்கு அவசியமான பொருள்களை உற்பத்தி செய்வோராயிருப்பர்.

ஷண்முகவேல் ஞாபகார்த்த வாசகசாலை தூத்துக்குடி.

8-வது ஆண்டு பூர்த்தி விழா.

மேற்படி வாசகசாலையின் 8-வது ஆண்டு பூர்த்தி விழா 11-2-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு வாசகசாலையின் முன் அமைக்கப்பெற்ற கொட்டகையில் கீழ்சிவல் பட்டி உடற்பயிற்சி நிபுணர் லெ. சோமசுந்தரம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. தோழர்களான முத்துக்கிருஷ்ணன், ரொட்ரிக்ஸ், பாலவண்ணம் முதலியவர்கள் சமதர்மக் கீதங்கள் பாடினார்கள். காரப்பேட்டை பெண்பாடசாலை பெண் பிள்ளைகள் நாகரீகமான கும்மி கோலாட்டங்கள் நடத்தினார்கள். பின் நகரசபை முனிசிபல் கௌன்சிலரும், துறைமுக சபை மெம்பரும், பிரபல வியாபாரியும் பங்கருமான தோழர் கூ. கா. ஆ பெரியசாமி அவர்கள் தலைவருக்கு வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். உதவிக் காரியதரிசி தோழர் அ. வி. ஆ விநாயகமூர்த்தி வாசகசாலையின் எட்டாவது ஆண்டு அறிக்கையை வாசித்தார்கள்.

அதன் பின் தலைவர் எழுந்து வரவேற்புப்பத்திரத்திற்கு பதிலளித்துவிட்டு, வாசகசாலையின் முன்னேற்றத்தைப்பற்றியும் அதனால் மனிதசமூகம் முன்னேறும் விதத்தைப்பற்றியும் பேசியபின் அப்படிப்பட்ட காரியங்களுக்கு வாலிபர்கள் முயற்சிதான அதிகம் வேண்டுமென்றும் அப்படிப்பட்ட வாலிபர்களுக்கு உடற்பயிற்சியே முக்கியமென்றும் உடற்கூறு சாஸ்திர சம்பந்தமான அநேக உதாரணங்களை எடுத்துச் சொன்னார். கே. எம்- பாலசுப்பிரமணியம் அவர்கள் பொருளாதாரம் என்னும் பொருள் பற்றி அநேக உதாரணங்களுடன் எளிய நடையில் சகலருக்கும் புரியுமாறு எடுத்துரைத்தார்கள். பின்னர் தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் "உண்மை எது" என்பதைப்பற்றியும், திருச்சி தோழர் வி ஆ. வெ. விசுவநாதன் அவர்கள் "ஜீவகாருண்யம்" என்னும் பொருள் பற்றியும் பேசினார்கள். இடை இடையே சங்கீதங்கள் நடைபெற்றன. தலைவர் முடிவுரைக்குப்பின் வாசகசாலையின் உபதலைவர் தோழர் சு. ஐ. வெற்றிவேல் அவர்களால் தலைவருக்கு உபசார சகர்களுக்கும்வாசகசாலையின் சார்பாக பூமாலைகள் சூட்டப்பெற்றன. சுமார் 10-30 மணிக்கு விழா இனிதே முடிவடைந்தது.

முத்துராமலிங்கபுரம்.

முத்துராமலிங்கபுரம் சுயமரியாதைச்சங்க மீட்டிங் 11-2-34-ந்தேதி இரவு 9-10 மணிக்கு சுயமரியாதைச் சங்கத்தின் முன்பாக தோழர் எ. வெங்கடசாமி தலைமையில் கூடிற்று. அதுசமயம் சங்க அங்கத்தினர்களும் மற்றும் உள்ளூர் பிரமுகர்களும் கல்லூரணி பிரமுகர்களுமாக சுமார் 300 ஜனங்கள் வரை கூடிபல விஷயங்களை ஆலோசிக்கப்பட்டு சில முக்கிய தீர்மானங்கள் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

அருப்புக்கோட்டை தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாட்டை 1934-ம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் நடத்துவதற்கு, வேண்டிய ஏற்பாடுகள் செய்யும்படி இச்சங்கம் இத்தாலூகா சுயமரியாதைத் தோழர்களை கேட்டுக்கொள்கிறது.

திருச்சியில் காந்தி பணமுடிப்புக் கண்டனக் கூட்டம்.

திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் 9-2-34 மாலை 6-மணிக்கு தோழர். அபிமன்னன் அவர்கள் தலைமையில் தோழர்களான. அ. பொன்னம்பலம், எஸ். நீலாவதி. கே. வி. அழகர்சாமி. ராமசுப்பிரமணியம் முதலியவர்கள் பேசினார்கள் இரவு 9-மணிக்கு கூட்டம் முடிந்தது. பின்பு சுயமரியாதைச் சங்கக் கட்டிடத்தில் காந்தி பண முடிப்பு பகிஷ்கார விஷயமாய் ஆலோசனைக் கூட்டம் அங்கத்தினர்களால் கூட்டப் பட்டது. ஷை கூட்டம் இரவு 1-மணிக்கு முடிவுற்றது என காரியதரிசி தோழர் டி சம்பந்தம் அறிவிக்கிறார்.

வருணாச்சிரம தர்மக் கண்டனக் கூட்டம்.

மதுரை நகர ஜில்லா சுயமரியாதை சங்கங்களின் ஆதரவில் 17-2-34 தேதி மாலை 6-மணிக்கு சங்கக் கட்டிடத்திலிருந்து கருப்புக்கொடி ஊர்வலம் ஒன்று நான்குமாசிவீதிகளின் வழியாக "சனாதன தர்மம் ஒழிக" "சங்கராச்சாரியே திரும்பிப்போ" என்னும் வாக்கியங்களடங்கிய கருப்புக் கொடிகளுடனும். பெரும் ஆரவாரத்துடனும் சென்று 6-30 மணிக்கு கிருஷ்ணையர் தெப்பக்குள மைதானத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர். கே. ஐ. சுக்கினி அவர்கள் தலைமையில், தோழர்கள். எ. எஸ். ஆனந்தம் எ. எல அருணாசலம் முதலியவர்கள் வருணாச்சிரமதர்மத்தைக்கண்டித்துப் பேசினார்கள். தலைவர் முடிவுரையுடன் பி வி. விநாயகமூர்த்தி அவர்கள் கூட்டத்திற்கு வந்தனோபசாரம்கூறியபின் முடிவுபெற்றது. கூட்டத்திற்குபெருந்திரளான மக்கள் வந்திருந்தார்கள்.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந் நூலாசிரியர்.
பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S

மொழிபெயர்ப்பாளர்.
ஆசிரியர் C. K. மருதாச்சலம் B. A. அவர்கள்.

மதம் மக்களுடைய முற்போக்கிற்கும், அறிவு வளர்ச்சிக்கும், நாகரீகத்திற்கும் எவ்வாறு இடர் விளைத்தது, விளைத்து வருகின்றது என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் இந் நூலில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது, 64-பக்கங்கள் கொண்டது. விலை அணா 3 தனிப்பிரதி வேண்டுவோர் அரை அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
ஈரோடு.

திருச்சியில் சுயமரியாதை தினக் கொண்டாட்டம்.

திருச்சி டவுன்ஹால் மைதானத்தில் 11 2 34 மாலை 6-மணிக்கு தோழர் ராமசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஷை கூட்டம் நடைபெற்றது. தோழர்களான டி. ஆர். சுந்தரம் பி. எ. பி. எல், எஸ். நீலாவதி டி. வி. சன்னாசி ஆகியோர் பேசினார்கள். தோழர் எஸ் நீலாவதி அவர்கள் பேசுகையில் தோழர் ஒருவர் ஆட்சேபனைகூற அதற்கு தகுந்த பதில் கூறினார்கள். கூட்டம் மிக உற்சாகத்தோடு இருந்தது. கீழ்கண்ட தீர்மானங்களுடன் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இரவு 9-மணிக்கு இனிது நிறைவேறியது.

விதவா விவாக சங்கத்தலைவரும், சுயமரியாதை இயக்கத்தில் பற்றுடையவருமான தோழர் சி. பி. ராஜகோபால பாரதி அவர்களும், தோழர் அ. மாணிக்கம் அவர்களும் மரணமடைந்ததற்கு அனுதாபம் செலுத்துகிறது. (ஒரு நிருபர்)

வில்லிவாக்கம்.

வில்லிவாக்கம் சமதர்ம சங்கத்தின ஆதரவில் 18-2-34-ந தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது தோழர் எஸ். இராமனுதன் அவர்கள் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு உள்ளூரிலிருந்தும் சென்னையிலிருந்தும் பல தோழர்களும் வாலிபர்களும் விஜயஞ்செய்திருந்தனர். தலைவர்முன்னுரைக்குப்பிறகுதோழர் டி.எம். பார்த்தசாரதிதொழிலாளரின் நிலைமையும்கடமையுமென்பது பற்றியும தோழர் எஸ்.குஞ்சிதம்பி. எ. எல். டி., அவர்கள் "பெண்களும் பழக்க வழக்கங்களும்" என்பதைப் பற்றியும், தோழர் எஸ். குருசாமி பி. ஏ, "வாலிபர்களும் சுயமரியாதையும்" என்பதைப்பற்றியும் பேசினார்கள்.

பின் தலைவரவர்கள் முடிவுரைக்கு முன் டி. ஐ. தியாகராஜனால் கொண்டுவரப்பட்ட கீழ்கண்டத் தீர்மானம் நிறைவேறியபின் தோழர் அமிர்தவாசகம் அவர்களால் வந்தனோபசாரங்கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

தீர்மானம்.

பீகார் மாகாணத்தில் ஏற்பட்ட பூகம்ப அதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இக்கூட்டம தன் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுவதோடு பூகம்ப நிவாரண சேவைக்கு ஓர் நிதியை திரட்டி அனுப்பிவைக்க வில்லிவாக்கம் சமதர்மசங்கம் காரியதரிசிக்கு அதிகாரம் கொடுக்கிறது, என தீர்மானிக்கிறது.

(ஒரு நிருபர்)

புதுப்பாளையம்.

சுயமரியாதை தினம்.

11-2-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்கு தோழர் ஏ- பீட்டர் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் ஒன்று இவ்வூர் நாடகசாலையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் வி. தங்கவேலு அவர்கள் "முன்னேற்றம்" என்பது பற்றியும், தோழர் வி. பி. குப்புசாமி அவர்கள் ஆரியர் சூக்ஷி என்பது பற்றியும், தோழர் ஆர். வெங்கிட கிருஷ்ணன் அவர்கள் "கோவிலும், திருவிழாவும்" என்பதுபற்றியும், தோழர் எஸ். சி. சுப்ரமணியம் அவர்கள் "நமது வேலை" என்பது பற்றியும், தோழர் பி. ஆர். குப்புசாமி அவர்கள் "நாஸ்திகம்" என்பது பற்றியும், தோழர் கு. ஆறுமுகம் அவர்கள் கடவுளும், மதமும்" என்பது பற்றியும் தோழர் ஏ. முத்து கிருஷ்ணன் அவர்கள "காந்தியும், ஹரிஜன இயக்கமும்" என்பது பற்றியும், தோழர் பி. கிருஷ்ணன் அவர்கள் "தீண்டாமை" என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின், வந்தனோபசாத்துடன்கூட்டம் இரவு 9 மணிக்குக்கலேந்தது. கூட்டத்திற்கு சுற்று புறங்களிலுள்ள கிராமங்களிலிருந்தும், உள்ளூர் வாசிகளும் விசேஷமாய் விஜயம் செய்திருந்தனர்.

சீர்திருத்தத் திருமணம்.

10-2-34 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு சிலோன் கோபொடையைச்சேர்ந்த கெந்தகடுவு தோட்டத்தில் தோழர் இ. ச. திருமேனியவர்களுக்கும், தோழர் விஜயலெக்ஷிமி அம்மையாருக்கும் சீர்திருத்தத் திருமணம் கொழும்பில் பிரபல வியாபாரியாய் விளங்கும், கே. சிவஞானம் அவர்கள் தலைமையில் பல சுயமரியாதைத் தோழர்கள் சாட்சியளிக்க திருமணம் நடைபெற்றது.

பலர் "மூட பழக்க வழக்கங்கள் ஒழிக" என்னும் பொருள் படும்படியான சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். சிற்றுண்டி விருந்துக்குப் பின் கூட்டம் இனிது கலேந்தது.

சிந்தாதிரிப்பேட்டை.

சுயமரியாதைச் சங்கம்.

15-2-34 மாலை 7மணிக்கு ஷை சங்கத்தின் மாதாந்திரக்கூட்டம் ஸ்ரீ ஆதி லக்ஷிமி நாடகக்கொட்டகையில் கூடி கீழ் கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறப்பட்டன.

அடுத்த, மார்ச்சு, எப்ரல். மாதத்தில் அரசாங்க நிர்வாக சபையில் ஒரு இடம் காலியாகிறபடியால் ஒரு ஆதிதிராவிட கனவானை அப்பதவிக்கு நியமிக்க வேண்டுமெனச் சங்கம் அரசாங்கததைக் கேட்டுக்கொள்கிறது.

ரோஜா முத்தையா

திருவாரூர் ப்ரீதிங்கர்ஸ் அசோசியேஷன்.

11-2-34 மாலை ஷைசங்கத்தின் மாதாந்தரக் கூட்டம் ஒன்று தலைவர் தோழர் கே.இரத்தினசபாபதி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதுகாலை தலைவர் அவர்கள் "மாகாண சமதர்ம மகாநாடும், நமது கடமையும்" என்னும் விஷயததைக் குறித்து பேசினார். பிறகு தோழர் எம். பழனியாண்டியவர்கள் தலைவர்வர்கள் சிறைசென்றதைப் பாராட்டியும், சென்னை சர்க்காரைக் கண்டிததும் பேசினார். தோழர் எ. இராமாமிர்தம் (சமதர்ம வாசகசாலை பொக்கிஷதார்) "ஹரிஜனப்புரட்டு" என்னும் விஷயததைப்பற்றி மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும் பேசினார் கூட்டம் மாலை 7 மணிக்கு இனிது முடிவடைந்தது.

திருப்பணி கருசல் குளத்தில் சுயமரியாதைக் கூட்டம்.

17-2-34 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு திருப்பணி கருசல் குளத்தில் ஓர் சுயமரியாதை பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எம். பரதேசியவர்கள் அக்கிராசனம் வகித்தார். கூட்ட ஆரம்பத்தில் சுயமரியாதைக கீதங்கள் தோழர் எம். என். மோசஸ் அவர்களால் பாடப்பட்டது.

முதலாவதாக, தோழர் எம். பால்ராஜ் அவர்களால் "ஒற்றுமை" யென்பதுபற்றியும், தோழர்களான எம். என். மோசஸ் அவர்களால் "கல்வியும், மதமும்" என்பது பற்றியும் எம். ஆறுமுகம் அவர்களால் தாழ்த்தப்பட்டோருக்கு மதமேன்? என்பதுபற்றியும சுமார் 1-30 மணி நேரமும், சங்கக் காரியதரிசி சேவுகப் பெருமாள் அவர்களால் "சுயமரியாதை யென்றால் என்ன" யென்பது பற்றி சுமார் 2 மணி நேரமும் ஒவ்வொரு விஷயங்களையும் யாவருக்கும் தெளிவு பதியும் வண்ணம உபந்நியாசிககப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் முடிந்தது.

திருமயம் சுயமரியாதை வாலிபர் கூட்டம்.

1-2-34 தேதி காலை கூடிய கூட்டத்தில தோழர் எஸ். வி. வடிவேல் "இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்" என்ற தலையங்கத்தில் பொதுமக்களுக்குப புத்தி புகட்டியதற்காக கோவை கலெக்டரால் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களையும், தோழர் எஸ்.ஆர்.கண்ணம்மாள் அவர்களையும் தண்டித்ததற்குக் கண்டித்தும் ஷை தோழர்கள் பொதுமக்களுக்காக சிறைவாசம் சந்தோஷத்துடன் அனுபவிப்பதைப் பாராட்டியும் பேசினர்.

The Right of TemPle Entry.

By.

P. Chidamparam B.A., B.L.M.L.A.

Price Re. 1. Only.

SOME OPINIONS.

"The book is undoubtedly an *intellectual feast and is characterised by a remarkable measure of research*. It is both interesting anb instructive, each chapter containing in a nutshell important and thought-provoking statements....The publication of this book is very opportune in as much as Mahatma Gandhi is even now touring the whole of South India for Harijan uplift in general and to gauge and guide public opinion with reference to the Temple-Entry Bill which has been introdnced in the Indian Legislative Assembly. The Government have invited the opinions of organizations and prominent leaders of the people. A book like this, which is at once a *treasure of learning and feast of logic*. will be of very great help both to those who wish to submit their views and to the Government of India. Every Government official, in particular, ought to own a copy of this book. The book is very powerfully and carefully written and will more than repay a perusal."

"The Bombay Chronicle," 14—1—34.

ஃ ஃ ஃ

"This work most opportunely meets the needs of the time, ... Can you not bring a Tamil translation of this important book?"

Swami Vedachalam, the famous Tamil Scholar of Pallavaram.

ஃ ஃ ஃ

"Mr. P. Chidambaram Pillai's book on the Right of Temple-Entry is a monumental work on the subject aud deals with the question elaborately from the historical and legal stand-points. ...... It may be that some feel the smell of his infifference to things of religion and contempt for caste glories, but it cannot be gainsaid that he has laid the Hindu community under a deep debt of obligation by embodiying his very useful researches in this book of his."

K. Subramania Pillai M. A., M. L., Advocate, Tagore Professor of Law, Tinnevelly.

ஃ ஃ ஃ

"I feel really that it is a challenge to the Sanatanists especially those aggressive ones of the type of Sankaracharya of Puri. I am sure that it is not too much if I say that it is the fruit of a laborious research which any Tamilian can well be proud of."

S. Guruswamy, B. A. former Editor of 'Revolt.'

Copies can be ha of:-

"Kudi Arasu" Publishing House, Erode.

R. B. P. Society Ltd., Erode.

“நவசக்தி” ஆசிரியர் தோழர் திரு. வி.

கலியாணசுந்தரமுதலியார் அவர்களால்

——:0:——

தமிழ் மணம், விடுதலை, பெண்ணுரிமை, தீண்டாமை ஒழிதல், சமரசம், சன்மார்க்கம் ஆகியவைகள் ததும்ப எழுதப்பட்ட அறிய அந் நூல்கள்:—

		ரூ.	அ.
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை	...	2	0
தமிழ்த் தென்றல்	... ...	2	0
முருகன் அல்லது அழகு	... ...	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம்	... ...	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்	... ...	2	8
என்கடன் பணி செய்து கிடப்பதே	... ...	0	8
சைவத்தின் சமரசம்	... ...	0	8
சைவத்திறவு	... ...	0	8
கடவுள் காட்சியும் தாயுமானரும்	... ...	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம்	... ...	0	4
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து	... ...	0	8
நாயன்மார்	... ...	0	3
சைவ சமய சாரம்	... ...	0	1
இமயமலை அல்லது தியானம்	... ...	0	6
தமிழ் நாடும் நம்மாழ்வாரும்	... ...	0	4
உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்	...	0	4
முருகன் அருள் வேட்டல்	... ...	0	4

இந்நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற் செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலித்தெரு, இராயப்பேட்டை, சென்னை.

அமுத சுரபி.

சிறந்த தாதுவிருத்தி இலேகியம்

உயர்ந்த காயகற்பகம்.

இஃது ஆண் பெண் இருபாலருக்கும் எவ்வகைக்காரணங்களினாலாவது இரத்தம் கெட்டு வலிவு குறைந்து, நரம்புக்கட்டுகள் தளர்ச்சியடைந்து இந்திரியக் கசிவு, வெட்டைச்சூடு, கனவிற் கழிதல், விரைவிற் கழிதல், விருப்பின்மை முதலிய துன்பங்களால் புத்திரப்பேற்றுக்கு வகையின்றி வருந்துவோர்களுக்கு அத்தகைய துன்பங்களை நீக்கி அமுதமயமான உடம்பையும், பலத்தையும், நல்லறிவையும் அழகையும், நீண்ட ஆயுளையும், மக்கட்பேற்றையும், பொன்போன்ற மேனியையும் அமுத சுரபி தருமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இது சித்தர்களின் முறை.

40-நாள் மருந்து ரூ. 3— 8—0.
20-நாள் மருந்து ரூ. 1—14—0.

மானேஜர்:—

பண்டிட் ஆனந்தம்வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

சுகவழி கேட்லாக் இனாம்.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள

இந்நூல் பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
2.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
3.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
4.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை	0—6—0
5.	மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும் ...	2—0—0
8.	ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை	0—6—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0
	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு ...கித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

‘குடி அரசு’ ‘ரிவோல்ட்’ மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம்	ரூ.	4—0—0

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

வியாதியா?

பயப்படவேண்டாம்.

எங்களிடத்தில் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த பஸ்ப செந்தூர வகைகள் கிடைக்கும். 30 வருஷகாலமாக அனுபோகமுள்ளது. உத்திரவாதமுள்ளது. ஆண் பெண், வயது, வியாதி, உற்பத்தி காலம், தெரிந்தவரையில் எழுதி மருந்தை வரவழைத்துச்சாப்பிடுங்கள்; சுகமாகும்.

தாம்பரபஸ்பம் குஷ்ட மேகங்களுக்கு அனுபானத்துடன் ½ மண்டலம் பார்சல்படி ரூ. 12—8—0.

தாளக பஸ்பம் க்ஷயரோகங்களுக்கு அனுபானத்துடன் மண்டலம் ரூ. 12—8—0.

ஆர். எம். நாராயணசாமி,
தன்மவந்திரிஔஷதசாலை பழனி. S.I

“குடி அரசு” புதிய வால்யூம்.

—*—

நமது “குடி அரசு” பத்திரிகையின் 8வது வருஷ மலர்கள் ஒன்றுசேர்க்கப்பட்டு புதிய வால்யூம் மிக்க அழகாக பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

உடனே முந்துங்கள்.

விலை ரூபாய் நான்கு

“புரட்சி” சந்தாதாரர்களுக்கு விலை ரூபாய் மூன்று.

தபால்செலவு வேறு.

பணம் முன்னதாக அனுப்பிவிடவேண்டும். இல்லாவிட்டால் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர்,
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

முன்னேற்றம்.

பிரிட்டிஷ் மலேயா நாடுகளில் முதன்மை வாய்ந்த நமது சுயமரியாதை இயக்கப்பத்திரிகை.

மலாய் நாட்டிற்கு வருட சந்தா ஷில்லிங். 5—0—0.

வெளிநாடுகளுக்கு ரூ. 8-0-0

‘பிரசண்டமாருதம்’

சுயமரியாதை இயக்கக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட சிறந்த மாதப்பத்திரிகை

உள்நாடு வருடசந்தா ரூ. 1—0—0
வெளிநாடு .... ரூ. 1—8—0
தனிப்பிரதி 1½ அணா

விலாசம்:—

மானேஜர்.
பிரசண்டமாருதம் ...

ரோஜா முத்தையா

குடி அரசு பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், லெனினும்.
விலை அணா 0—4—0

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

பொதுவுடமைத்தத்துவங்கள்.
விலை அணா 0—3—0.

இராமாயண ஆராய்ச்சி.
முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோததியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.
பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.
இதன் விலை அணா. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.
இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.
இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?
இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.
இதன் விலை அணா 0—2—0

ரஷ்யாவைப் பற்றி பேர்னுட் ஷா.
விலை அணா 0—1—0.

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?
இதன் விலை அணா 0—2—0

கடவுளும், பிரபஞ்சமும்.
இதன் விலை அணா 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?
விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.
விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.
டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணா. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.
விலை அணா. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.
விலை அணா 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 0—2—0

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும்.

விலை அணா 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல்.

விலை அணா 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா 2.

கடவுள்.
(இங்கர்சாலின் சொற்பொழிவுகள்)

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணா 5.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

விலாசம்:—
பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.